Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර

பக்கம் 24 ரூபா 30.00

மார்ச் 27 - ஏப். 02, 2014

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1059

## வன்னிக்குள் புலிகள்!





## ஏமாறும் தமிழர்களும் ஏமாற்றும் சர்வதேசமும்

## கிழக்கில் காணாமல் போனோரின் உறவுகளின் கண்ணீர்க் கதைகள்...

## மலேசியாவின் மறைந்த விமானமும் மர்மங்களும்

Exclusive report

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## ௐ கலசத்தை பூஜிப்பது ஏன்?

உலகைப் படைக்கும்முன் பகவான் விஷ்ணு, பாற்கடலில் பாம்பணையின் மேல் சாய்ந்தவாறு அமர்ந்திருந்தார். அவருடைய நாபிக் கமலத்திலிருந்து ஒரு தாமரை வெளிப்பட்டது. அந்த மலரிலிருந்து படைப்புக் கடவுளான பிரம்மா தோன்றினார். பிரம்மாவே உலகத்தை சிருஷ்டித்தார்.

கலசத்தில் உள்ள நீரானது, எந்த நீரிலிருந்து படைப்பில் உள்ள அனைத்தும் தோன்றியதோ, அந்த நீரைக் குறிக்கிறது. அந்தப் புனித நீர்தான் அனைத்திற்கும் உயிர் அளிக்கும் சக்தி படைத்தது. இந்த நீர் எண்ணிலடங்கா உருவங்களையும் வடிவங்களையும் உயிர்த்துடிப்பும் உணர்வும் உள்ள பொருள்கள் மற்றும் ஜடப்பொருள்கள் ஆகிய அனைத்தையும் படைக்கும் சக்தியைத் தன்னுள் அடக்கியுள்ளது.

மேலும், உலகில் உள்ள மங்களகரமான அனைத்தையும் படைக்கும் சக்தியையும் பெற்றது, இது. கலசத்தில் உள்ள இலைகளும் தேங்காயும் சிருஷ்டியைக் குறிக்கின்றன. கலசத்தைச் சுற்றியுள்ள நூல் படைப்பில் உள்ள அனைத்தையும் ஒன்றாகப் பிணைக்கும் அன்பைக் குறிக்கிறது. ஆகவேதான் கலசம் புனிதமாகக் கருதப்பட்டு பூஜிக்கப்படுகிறது. அசுரர்களும் தேவர்களும் பாற்கடலைக் கடைந்தபோது, அமுத கலசத்தை ஏந்தியவாறு இறைவன் தோன்றினார். இவ்வமுதம் அனைவருக்கும் இறவா வரத்தை அருளியது. எனவே, கலசமும் இறவாத் தன்மையைக் குறிக்கிறது.

## தொட்ட அனைவரும் நலமடைந்தனர்!

ஆன்மீகம்

இயேசு நோயாளர்களைத் தொட்டுக் குணமாக்கிய நிகழ்ச்சிகள் பல. இயேசுவை மக்கள் தொட்டு நலம் பெற்ற நிகழ்ச்சிகளையும் நற்செய்தி நூல்களில் காண்கிறோம். இன்றைய நற்செய்தி வாசகம் அவைகளில் ஒன்று. அவருடைய மேலுடையின் ஓரத்தையாவது நோயாளர்கள் தொட அனுமதிக்குமாறு அவர்கள் இயேசுவை வேண்டியதாக வாசிக்கிறோம். அவரைத் தொட்ட அனைவரும் நலமடைந்தனர் என்றும் பார்க்கிறோம். இயேசுவை நாம் தொடவேண்டும். அப்போது நலம் அடைவோம்.

இயேசுவை எப்படித் தொடலாம்? ஒவ்வொரு முறையும் நாம் நற்கருணை பெறும்போதெல்லாம் நாம் அவரைத் தொடுகிறோம். அவரது உடலைத் தொடுகிறோம். நற்கருணை ஆற்றல்வாய்ந்த அருள்சாதனம்.

நற்கருணை பெற்றதால் நலமடைந்த எண்ணற்ற மக்கள் அதற்குச் சான்று பகர்கின்றனர். எனவே, நாம் தகுதியான உள்ளத்துடன் நற்கருணை அருள்சாதனம் பெற்று, இயேசுவைத் தொட்டு, நலம் அடைவோம். அவரைத் தொட்ட அனைவரும் நலம் அடைந்தனர். அந்த விசுவாசத்தை நாமும் பெறுவோம்.

## அல்குர்ஆன் போதனைகள் அழிவற்றவை

அன்று அண்ணல் நபியின் தோழர்கள் எத்தனையோ பிரச்சினைகளுக்கு மத்தியில் இவ்வையகத்தில் வாழ்ந்தார்கள். குடும்ப ரீதியில், உறவினர்களால், ஊரினால் மட்டுமன்றி பொருளாதார பிரச்சினைகளையும் இவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இப்போது நாம் இவர்களின் வரலாற்றை பின்நோக்கிப் பார்த்து மெச்சிப் பேசுகிறோம், பாராட்டுகிறோம், புகழுகிறோம். இவர்கள் நினைவு கூரப்படும்போது, "ரழியல்லாஹு அன்ஹும்" (அல்லாஹ் அவர்களை பொருந்திக் கொள்வானாக) என்றும் சொல்லுகிறோம். அந்தளவு அவர்களை அல்லாஹ் உயர்த்தியுள்ளான்.

அன்று வாழ்ந்த அண்ணல் நபியின் ஸஹாபிகளுடன் எங்களை ஒப்பிடும்போது அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைவிட எமக்கு இப்போது உள்ள பிரச்சினைகள் பெரிதென எவரும் கூறமுடியாது.

ஆகவே, நாம் அல்லாஹ் எம்மிடம் எதிர்பார்க்கும் நல்லமல்களை நாளும் நமது வாழ்வில் கொண்டுவர வேண்டும். அது நமது அன்றாட வாழ்வின் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி 1056



பாராட்டுக்குரியது

### "எப்போது கண் விழிக்கும்?"

தாரமில்லாத தனிமையிலே
தலைகுனிந்து வாடும்
தலைவன் ஒருவன் இங்கே.
தாய்ப்பாசம் காணும் வரை
சேய் ஒன்று தந்தை கரம்
சாய்ந்து துயில் கொள்ளுகிறது.
வஞ்சமில்லா பிஞ்சுக்
குழந்தைக்கு அன்பூட்ட
தன் சிரம் சாய்த்து
சிந்திக்கும் வீரரின் அணையாத
அன்பின் பாசப் பிணைப்பிது.
இவர்கள் இடையே இழையோடித்
தூங்கும் பாசத்தின் பார்வைதான்
எப்போது கண் விழிக்கும்?

இளம்பிறை. புத்தளம்.

### குழந்தையின் தூக்கம்

தாயின் மடியில்
தலை வைத்திருந்தால்
உலகம் தெரிவதில்லை
அந்தக் காலம்
போர் வீரரின் மடியில்
தலை வைத்து தூங்குவது
இக்காலம்.

ஜே.ஒகஸ்ரா. கண்டி.




## கவிதைப் போட்டி இல 1059



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08. 04. 2014

கவிதைப் போட்டி இல. 1059 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### இதய வலி?

ஈவிரக்கமின்றி யுத்தத்தில்
எத்தனையோ குழந்தைகளைக்
கொன்று குவித்த உனக்கு
உன் பிள்ளை நோயில்
விழுந்ததுமே... இதயம்
வலிக்கிறதா?
உனக்கெல்லாம் இதயமுண்டு
என்பதை நம்புவதெப்படி?

அ.சந்தியாகோ, கண்டி.

### இறை தீர்ப்பு

வல்லரசென்ற 'திமிர்
வையகத்தையே
ஊனமாக்கிய உனக்கு
இறைவன் கொடுத்த தீர்ப்பு
மனநோய்...?

K.M.A.அஸீஸ்.
சாய்ந்தமருது-II.

### இறை நியதி

அந்த இனவாதப் போரில்
உன்னால் மாற்றானின்
மழலை யொன்று மடிந்திருந்தால்
இவ்விதம் இடிந்துபோய்
இருக்கமாட்டாய்!
உனக் கென்று
வரும் போதுதான்
உளமுடைந்து வருந்துகிறாய்!
இதுதான் இறை நியதி!

பாண்டியூர் பொன். நவநீதன்.

### 'சிரம் தாழ்ந்த சிந்தனை'

பச்சிளம் பாலகனை
பாதையிலே போட்டுவிட்டு
பெற்றோர்கள்தான் - எங்கே
போனார்களோ - அந்த
வஞ்சகமில்லா பிஞ்சுக் குழந்தை
காவலனின் கரம் மேல் சாய்ந்து
சுகமாகத் தூங்குகிறது.
சேவை செய்திட சேர்ந்துவிட்ட
சேவகனுக்குப் பெற்றவரின்
பிள்ளையைப் பேணுவது எப்படி
என்ற சிந்தனை - அவன்
சிரசைக் கீழ்த்தாழ்த்தி நிறுத்துகிறது.

இளம்பிறை யோகன், புத்தளம்.



### போக்கிரிப் பயல்

காக்கிச் சட்டை போட்ட மாமா
மடியில் நானும் தூங்கிடுவேன்
தூக்கிப் போட முடியாமல்
தூக்கம் தொலைத்து நிற்கின்றார்
துப்பாக்கியால் துளைக்க தயங்கும்
குழந்தை எனும் போக்கிரி நான்.

கௌதமி கதிர்வேலு. கரவெட்டி.

## உங்கள் பக்கம்

### வீதி திருத்தப்படுமா?

கரம்பைக் குறிச்சி ஊரெல்லை வீதி எனப்படும் வீதியானது அந்தணத்திடல் கப்பூது ஊடாக சாவகச்சேரியை இணைக்கும் பிரதான வீதியாகும். இந்த வீதியானது சுமார் 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் குன்றும்குழியுமாக பொதுமக்கள் பயணம் செய்யமுடியாதவாறு காணப்படுகின்றது.

1000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் காணிகளுக்குச் செல்கின்ற விவசாய வீதியாகவும் இது விளங்குகின்றது. இந்த வீதியில் மழை காலங்களில் 2 அடி உயரத்திற்கு மேல் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் பாடசாலை மாணவர்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் பயணிக்கவேண்டிய அவலம் காணப்படுகின்றது.

குறித்த கிராமத்தில் வாழ்ந்து வருகின்ற சுமார் 400க்கும் மேற்பட்ட குடும்பங்களின் போக்குவரத்து தேவைகளை குறித்த வீதியினூடாகவே மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

எனவே, குறித்த வீதியைப் புனரமைப்புச் செய்யும்படி உரிய அதிகாரிகளுக்கு தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாக கேட்டுக் கொள்கின்றேன்.

எம்.சாலமன்,
கப்பூது.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


### பாராட்டு!

மாயமாகி இரண்டு வாரங்கள் மேல் கடந்த நிலையிலும் மர்மம் துலங்காமல் பெரும் பரபரப்பையும் வியக்கவைக்கும் தகவல்களையும் வெளிக்கொண்டு வந்துகொண்டிருக்கும் மலேசிய விமானம் தொடர்பான கடந்த வார நிலவரங்களை முரசு மிகவும் சிறப்பாக தொகுத்துத் தந்திருக்கின்றது. முரசுக்காக அதனை தொகுத்தளித்த ரிஷிக்குப் பாராட்டுக்கள். அதேபோன்று தொடர்ந்தும் பல்வேறு புலனாய்வுக் கட்டுரைகளை ரிஷியிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

க.அனுஷியா, யாழ்ப்பாணம்.

### தாக்கத்தை ஏற்படுத்துமா?

பல்வேறு தகவல்களை தொகுத்து வண்ணப் பக்கத்தில் வரிசைப்படுத்துகின்ற தினமுரசு அண்மைக்காலமாக விளம்பரங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஒரு பத்திரிகையை நடாத்திச் செல்வதற்கு விளம்பரங்களுக்கூடான வருமானம் இன்றியமையாதது என்பதை நான் அறிவேன். இருப்பினும் அவை பத்திரிகையின் தரத்திலும் மக்களின் எதிர்பார்ப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தாவண்ணம் பார்த்துக் கொள்ளப்படவேண்டும்.

க.சொரூபன், வவுனியா.

### நன்றிகள்!

கடந்த இரண்டு வாரங்களாக உக்ரேன்- கிறிமியா - ரஷ்யா - அமெரிக்கா ஆகியவற்றுக்கு இடையில் இடம்பெற்ற இழுபறிகள் பற்றி விலாவாரியாக வேணு கிருஸ்ணா தொகுத்துத் தந்திருந்தார்.

உக்ரேன் நிலவரங்கள் தொடர்பில் அக்கறையின்றி இருந்த எனக்கு வேணு கிருஸ்ணாவின் இருவாரக் கட்டுரைகளும் போதிய விளக்கத்தையும் தெளிவையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

இவ்விடயத்தில் ஒபாமா தலைமையிலான அமெரிக்கா மூக்குடைபட்டிருக்கின்றது. தேவையின்றி ஏனையோரின் விவகாரத்தில் மூக்கை நுழைத்தால் இதுதான் கதி என்பதை அமெரிக்கா இப்போதாவது புரிந்துகொள்ள வேண்டும். புரிந்துகொள்ளமாட்டார்கள் அனுபவங்களைப் படிப்பினைகளாகக் கொண்டு செயற்படுபவர்களாக இருந்தால் வியட்நாமிடம் வாங்கிக் கட்டியபோதே திருந்தியிருக்க வேண்டுமே...

என்.காந்தன், பதுளை.

### வாசகர் சாலை

### அமைதியின் சொற்கள்

அழியாப் பொருள் ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் நடனம் ஆடுகின்றது.

- பிரேம் ராவத்

## கிழக்குப் பல்கலைக்கழக நெருக்கடி!

# உயர்மட்ட மாநாடு முழுமையான வெற்றியைத் தரவில்லை!

### கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கிட்ணன் கோபிந்தராஜா!

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கடந்த வாரம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் மற்றும் அதற்குப் பதிலாக தமிழ் மாணவர்களால் நடத்தப்பட்ட கண்டன எதிர்ப்பு மற்றும் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வகுப்புப் பகிஷ்கரிப்பு என்பவற்றைப் பற்றி ஆராய்வதற்காக கூட்டப்பட்ட உயர்மட்ட மாநாடு முடிவுகள் எட்டப்படாமல் நிறைவடைந்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த உயர்மட்டக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரட்ண, இராணுவத் தளபதி பிரிகேடியர் பாலித்த பெர்னாண்டோ, மட்டக்களப்பு மாவட்ட தலைமை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் [illegible]க்மன, வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செனவிரட்ண, சிங்கள மற்றும் தமிழ் சமூக மாணவர் பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், விடுதிக் காப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தாம் தாக்கப்பட்டுக் கொண்டிருப்பது பற்றி அறிவித்தும் பல்கலைக்கழகத்தில் நிலை கொண்டிருக்கும் பொலிஸார் அது பற்றிக் கவனமெடுக்கவில்லை என்பதால் பொலிஸார் தங்களது பாதுகாப்புக்கு அவசியமில்லை எனும் நிலை உருவாகியுள்ளது. ஆகையினால் ஒரு சமூகத்தின் பாதுகாப்புக்கு மட்டுமா இங்கு பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர் என்ற கேள்வியைத் தாம் எழுப்பியுள்ளதாக பாதிக்கப்பட்ட தமிழ் சமூக மாணவர்கள் கூறுகின்றனர்.

குறித்த பேச்சுவார்த்தைகள் குறித்து கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா தெரிவித்ததாவது:

அங்கிருக்கின்ற பொலிஸ் காவல் சாவடியை அகற்றவேண்டும். சம்பவத்தில் சம்பந்தப்பட்ட மாணவர்களைத் தண்டிக்கவேண்டும். மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடுதி வசதிகளில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். என்ற 3 கோரிக்கைகளைப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் முன்வைத்திருந்தார்கள். இந்த விடயங்கள் சம்பந்தமாக நாங்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டோம். எனினும் இந்தப் பேச்சுவார்த்தையில் முழுமையான வெற்றி கிடைக்கவில்லை. இருந்தபோதிலும் சிலசில முடிவுகள் எட்டப்பட்டன.

பல்கலைக்கழகத்திலுள்ள காவற்சாவடியில் தமிழ்ப் பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. ஐந்து தமிழ் பொலிஸாரையும் 3 முஸ்லிம் பொலிஸாரையும் மேலதிகமாக சேவையில் அமர்த்துவதற்கு ஏற்கெனவே கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளதாக என்னிடம் கூறியுள்ளார்.

மணித்தியாலத்திற்கு ஒரு தடவை எமது பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் அனுமதியுடன் இரவு ரோந்து செய்வதற்கும் இணக்கம் காணப்பட்டது. இந்தத் தீர்மானங்களில் மாணவர்கள் ஓரளவு திருப்தியடைந்து விட்டார்கள்.

கலகத்தில் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும் எனும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கோரிக்கையானது ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதாவது அவர்களை சகல கல்வி நடவடிக்கைகளிலிருந்தும் விடுதியில் தங்குவதிலிருந்தும் இடைநிறுத்தி வைத்துள்ளோம். ஏற்கெனவே ஒரு மாணவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். மற்ற மாணவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் என்னிடம் தெரிவித்துள்ளார்.

அடுத்த கோரிக்கையான சிங்கள மாணவர்கள் அனைவருக்கும் அதாவது முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருடமென்று அனைத்து சிங்கள மாணவர்களுக்கும் விடுதி வசதி வழங்கியுள்ளோம். இது அவர்கள் தூரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இந்தச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை இறுதியாண்டையும் முதலாமாண்டையும் சேர்ந்த தமிழ் மாணவர்களுக்கு மட்டும் தான் விடுதி வசதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாய்ப்பை எல்லோருக்கும் பொதுவானதாக மாற்றுமாறு தமிழ் மாணவர்கள் கோரி நிற்கின்றார்கள். சம்பவம் நடைபெற்றபோது, கடமையில இருந்து நடவடிக்கை எடுக்காமல் இருந்த பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் ஏனைய பொலிஸார்மீது தாங்கள் உள்ளக விசாரணையை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள்மீது கலக வேளையில் கடமையைச் செய்யத் தவறியமைக்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் என்னிடம் தெரிவித்துள்ளார்.


கலகத்தில் சம்பந்தப்பட்ட ஏனைய மாணவர்களுக்கும் உள்ளக விசாரணை முடிந்தபின்னர் தண்டனை வழங்கப்படும் என்ற உறுதிமொழியைப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஏற்றுக் கொண்டார்கள், என்றார்.

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

தொலைபேசி நிறுவனத்தின் விளம்பர பலகையொன்றை நிர்மாணிக்கும்போது, அந்த பலகையை உயர்த்துகையில் அந்த விளம்பரப் பலகை மின்சார கம்பியில் பட்டமையினால் 24 வயதான இளைஞன் பலியாகியுள்ளார். மின் தாக்கத்திற்கு இலக்கான மற்றுமொரு இளைஞன் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## கைத்தொழில்துறையை மேம்படுத்துவதால் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும்

### அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை



உள்ளூர்க் கைப்பணி மற்றும் கைத்தொழில்துறையை மேம்படுத்துவதன் ஊடாக சமூக பொருளாதாரத்தை முன்னேற்ற முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தைச் சேர்ந்த கைப்பணி மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்கள் எதிர்நோகதும் சவால்கள் பற்றி கலந்துரையாடிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தின் பெருமளவு வழங்கல் சரியாகப் பயன்படுத்தாத நிலையில் காணப்படுகின்றது. குறிப்பாக பனை மூலப்பொருட்களைக் கொண்டு பல்வேறு உற்பத்திகளைப் பேணமுடியும். அவ்வாறு மேற்கொள்ளப்படும்போது அவர்கள் சார்ந்த சமூகத்தின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும்.

எனவே, குறித்த துறை சார்ந்தவர்கள், அத்துறைகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி எதிர்காலத்தை பலன்மிக்கதாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

## பணிப்பெண்ணாகச் சென்றவர் எலும்புகள் முறிந்தன

சவூதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாக கடந்த 2012 ஆம் ஆண்டு சென்ற நோட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லொனக் தோட்டத்தில் வசிக்கும் விஜயலட்சுமி (வயது 47) என்ற பெண் கை, கால்கள் முறிவடைந்த நிலையில் அண்மையில் நாடு திரும்பியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மேற்படி பெண்ணும் அவரது கணவரும் தோட்டத் தொழிலாளர்களாக பணிபுரிந்து வந்துள்ளனர். வறுமைகாரணமாக இப்பெண் 2012ஆம் ஆண்டு திரும்பவும் சவூதிக்கு பயணமாகியுள்ளார். 2013ஆம் ஆண்டு 7ஆம் மாதம் வீட்டு உரிமையாளர்களுடன் காரில் பயணித்தபொழுது ஏற்பட்ட விபத்தால் வீட்டு உரிமையாளர்கள் இறந்துவிட இவர் கை, கால் முறிவால் பாதிக்கப்பட்டு இரண்டரை மாதங்கள் சவூதி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில், மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் நாடு திரும்பியுள்ளார். நாடு திரும்பிய இவர் நேரிடையாக கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் சிகிச்சை பெற்றதாகவும் அதன் பிறகு கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு வீடு திரும்பியதாகவும் தெரிவித்தார்.

# கடலுக்குள் வீழ்ந்ததாம் மாயமான விமானம்!

## அறிவித்திருக்கிறது மலேசிய அரசு




**மலேசிய** தலைநகர் கோலாலம்பூரிலிருந்து சீனாவின் பீஜிங் நோக்கி 239 பயணிகளுடன் பயணித்த மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம், மலேசிய வான்பரப்பை தாண்டியதும் மாயமாகியிருந்தது.

குறித்த விமானத்தின் கதி தெரியாமையால் கடந்த இரு வாரங்களாக தேடுதல்கள், புலனாய்வு விசாரணைகள் எனப் பரபரப்பான செய்திகள் வெளியாகிய வண்ணமிருந்தது. இதுபற்றிய விரிவான தொகுப்பு ஒன்று இவ்வார முரசில் வேணுகிருஸ்ணாவினால் வரையப்பட்டுள்ளது.

குறித்த கட்டுரை அச்சேறி சில மணிநேரங்களில், இவற்றுக்கெல்லாம் முடிவுகட்டும் வகையில், இந்துமா கடலில் விமானம் விபத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் விமானத்தில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்திருப்பதாகவும் மலேசிய அரசு அறிவித்திருக்கின்றது.

மலேசிய விமானம் இந்தியக் கடலில் வீழ்ந்தது என மலேசியப் பிரதமர் தெரிவித்துள்ளதை, நாம் விசாரித்த வரை கனேடிய, மற்றும் அமெரிக்க ஏவியேஷன் வட்டாரங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

விமானத்தின் பாகங்களை கடலில் கண்டெடுக்கும்வரை, இப்படியொரு அறிவிப்பை செய்தது, தவறான வழிகாட்டல் என்கிறார்கள் அவர்கள்.

கனேடிய விமானி ஒருவர், "மலேசிய பிரதமரோ, அல்லது அவருக்கு தரவுகளை வழங்கிய பிரிட்டனின் 'இன்மார்சாட்' நிறுவனமோ, இந்த விமானம் இவ்வளவு தொலைவுக்கு எப்படி வந்தது என்பது குறித்து ஒரு வார்த்தைகூட தெரிவிக்கவில்லை.

ஒரு விஷயத்தை என்னால் (கனேடிய விமானி) அடித்துச் சொல்ல முடியும் விமானம் இவ்வளவு தொலைவு எப்படி வந்தது என்பதை நிரூபிக்க அவர்களிடம் ஒற்றை ஆதாரம்கூட கிடையாது" என்றார்.

இந்த மாய மறைவு குறித்த புலனாய்வில் ஈடுபட்டுள்ள சிலரே, "மலேசிய அரசு, 'ஏதோ ஒரு நிர்ப்பந்தம்' காரணமாக தேடுதல் முடிவடையும் முன், விமானம் விபத்துக்குள்ளானது என அறிவித்துள்ளது" என்கின்றனர்.

அந்த 'ஏதோ ஒரு நிர்ப்பந்தம்' என்ன என்றே தெரியவில்லை.

இப்படியிருக்கையில், விமானம் கடலில் வீழ்ந்தது என்று எதை வைத்துச் சொல்கிறது மலேசியா? என்ற கேள்வி ஏற்படலாம்.

பிரிட்டனைச் சேர்ந்த 'இன்மார்சோட்' நிறுவனத்தின் வான் விபத்து மற்றும் புலனாய்வு பிரிவு (Air Accidents Investigation Branch) கொடுத்த தரவுகளின் அடிப்படையிலேயே, விமானம் விபத்துக்குள்ளானது என்ற முடிவை எடுத்துள்ளது மலேசியா.

விமானத்தின் தொடர்பு சாதனம் (ரேடியோ) நிறுத்தப்பட்டாலும், விமானத்தில் இருந்து சட்டலைட்டுக்கு 'பிங்'குகள் (தரவுகள்) ஒவ்வொரு மணிநேரமும் அனுப்பப்படும். அந்த பிங்குகள் பதிவான பட்டர்னை வைத்து, விமானத்தின் எலிவேஃன் (உயர்ச்சி) கோணத்தை ஓரளவுக்கு கணிக்கலாம்.

அதன் அடிப்படையில், விமானம் திசைமாறி பறந்து, இந்தியக் கடலின் பகுதிக்குள் சென்றது என்பதை பிரிட்டிஷ் நிறுவனம் தீர்மானித்திருக்கிறது.

அந்தப் பகுதியில் (கடலின் மேல்) விமானம் இருக்கும்போது, விமானத்தில் மீதம் இருக்கக்கூடிய எரிபொருளின் அளவும் கணிப்பிடப்பட்டு, கடலின் மேல் எந்தப்பகுதியில் பறந்து கொண்டிருந்தபோது, விமானத்தில் எரிபொருள் தீர்ந்து விட்டிருக்கும் என்ற முடிவுக்கு வந்தது, பிரிட்டனைச் சேர்ந்த 'இன்மார்சொட்' நிறுவனம்.

இந்த தரவின் அடிப்படையிலேயே, விமானம் கடலில் வீழ்ந்தது என அறிவித்துள்ளது மலேசியா.

விமானம் கடலில் மூழ்கியது என மலேசிய பிரதமர் அறிவித்த சில மணிநேரத்தில், பயணிகளின் உறவினர் அடங்கிய குழு ஒன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், "இந்த விபத்துக்கு காரணம், மலேசியன் ஏர்லைன்ஸ், மலேசிய அரசு, மற்றும் மலேசிய இராணுவம்" என்று கூறப்பட்டுள்ளது.

மலேசிய இராணுவத்தை இதற்குள் எதற்காக கொண்டு வருகிறார்கள்? ஒருவேளை அவர்களிடம் வேறு ஏதோ தகவல் உள்ளதோ!

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# ஆடுகளும்! ஓநாய்களும்!!

இலங்கைக் கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறுவது அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளது.

தமது அத்துமீறல் செயற்பாடுகளைத் தெரிந்தே முன்னெடுக்கின்ற தமிழக மீனவர்களின் அடாவடித்தனத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாமல் இலங்கை மற்றும் இந்திய மத்திய அரசுகள் உள்ளன.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஈழத் தமிழர்கள் பற்றியும், அவர்களின் உரிமைகள் பற்றியும் உணர்ச்சிவசமாகப் பேசி அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றாரே தவிர, உண்மையில் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரம் பற்றியோ, தென்னிந்தியாவில் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்கள் பற்றியோ அக்கறையின்றியே செயற்படுகின்றார்.

தமிழகத்தில் திறந்தவெளிச் சிறைகளாக உள்ள அகதி முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் பல்வேறு புறக்கணிப்புக்களுக்கு முகங்கொடுத்தபடி மீண்டும் தம்மைத் தாயகம் அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அவர்களை கவனத்திற் கொள்ள ஜெயலலிதா ஒருபோதும் முயற்சிக்கவில்லை. ஆனால், ராஜீவ் காந்தி கொலையாளிகளை விடுதலை செய்யப் போவதாக அதிரடி அறிவிப்புச் செய்வதின் ஊடாக அரசியல் இலாபம் தேட முயற்சித்துள்ளார்.

கச்சதீவை மீண்டும் இந்தியா பொறுப்பேற்க வேண்டும் என்ற கோஷத்தை முன்வைப்பதின் ஊடாக தென் கரையோர மக்களின் வாக்குகளை அபகரிக்கத் திட்டமிடுகின்றார்.

இலங்கை - இந்திய மீனவர்கள் பேச்சுக்கள் நடைபெறுவதையும், பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு ஏற்படுவதையும் ஜெயலலிதா விரும்பவில்லை என்பதையும் அவர் பேச்சு வார்த்தைகளுக்கு ஏற்படுத்தும் தடைகளில் இருந்து புரிந்துகொள்ள முடிகின்றது.

நூற்றுக்கணக்கான இந்திய - இலங்கை மீனவர்கள் பரஸ்பரம் விடுதலை செய்யப்பட்டு பரிமாறக் கொள்ளப்பட்டபோதும், தொடர்ந்தும் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடிக்கின்ற செயற்பாடுகள் காணப்படுவதானது, ஜெயலலிதா போன்றவர்களின் அரசியல் நோக்கம்கொண்ட அசமந்தச் செயற்பாடுகளின் ஊக்குவிப்பாகவே கருதப்படுகிறது.

அத்துமீறிய தமிழக மீனவர்களின் செயற்பாட்டினால், இலங்கை மீன் வளமும், கடல் வளமும் சுரண்டப்பட்டு, அழிக்கப்படுவதோடு, அதிகம் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்களாகவே இருப்பதும் ஒன்றும் இரகசியமானதல்ல.

ஆகவே, ஈழத்தமிழர் மீதான அனுதாபம், அக்கறை என்பது வெறும் நாடகங்களே அன்றி, வேறொன்றும் இல்லை.

இலங்கையின் இறைமைக்குச் சவாலாகவும், இலங்கைத் தமிழர்களுக்குப் பாதிப்பாகவும் அமைகின்ற இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளுக்கு இனியேனும் இலங்கை - இந்திய மத்திய அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இல்லையெனில், இலங்கைத் தமிழர்கள் பற்றிய இந்திய மத்திய அரசினதும், தமிழக அரசியல்வாதிகளினதும் கருத்துக்களும் செயற்பாடுகளும் ஆடு நனைய ஓநாய் அழுவதற்கு ஒப்பானதாகவே இருக்கும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# வன்னிக்குள் புலிகள்!

யுத்தம் முடிந்து ஐந்து வருடங்கள் கடந்துவிட்டது. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு இன்னும் கிடைக்கவில்லை. அரசாங்கம் தமிழர்களுக்கு தீர்வை வழங்காது சாக்குப் போக்குகளைக் கூறி காலத்தை இழுத்தடித்து வருகின்றது.

சிறுபான்மை மக்கள் குறித்த அரசின் மன ஓட்டத்தைப் புரிந்துகொண்டுள்ள கடும்போக்கு தீவிரவாதிகள் பல்வேறு போர்வைகளை அணிந்து கொண்டு சிறுபான்மை மக்களின் கருத்துரிமை மற்றும் வர்த்தக மேம்பாடு, வணக்கஸ்தலங்கள் ஆகியவற்றின்மீது தாக்குதல்களை நடத்திவருகின்றன.

பல்வேறுவிதமான குற்றவாளிகளை இலக்குவைத்து நடவடிக்கையை முடுக்கிவிடும் அரசு கடும்போக்கு தீவிரவாதிகளின் இன நல்லிணக்கத்துக்கு எதிரானதும், ஐக்கிய இலங்கைக்கு எதிரானதுமான சிறுபான்மை இனத்தவர் மீதான தாக்குதல்களை கண்டுகொள்ளவில்லை. குற்றவாளிகளை சட்டத்தின் முன்னால் நிறுத்தி குற்றங்களை தடுப்பதற்கு அக்கறை கொள்ளவில்லை.

இவ்வாறான விமர்சனங்களே அரசாங்கத்தின்மீது இதுநாள் வரை முன்வைக்கப்பட்டு வந்தது. தற்போது அரசுமீது புதிய குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றனர். அதாவது மீண்டும் புலிக்கதை கூறிக் கொண்டு தமிழ் மக்களை மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளிவிடவே முயற்சிக்கின்றது, என்ற பரப்புரை தமிழ் மக்களிடையே பரப்பப்படுகின்றது.

தம்மை தீவிர புலி ஆதரவாளர்களாகவும், புலிகள் அடைய நினைத்த இலக்கை நோக்கிப் பாடுபடுபவர்களாகவும், பிரபாகரனுக்குப் பிறகு அந்தப் பாரத்தை தாமே சுமப்பவர்களாகவும் தமிழ் மக்களிடையே தம்மை காட்டிக்கொள்வதில் நுட்பமாக காய்நகர்த்தியவர்கள், தம்மை சீருடை அணியாத புலிகளாகவே சித்தரித்துக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறான போக்குகள் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு குந்தகமாகவே அமையும், மீண்டும் புலிக்கதையை கையில் எடுத்துக்கொண்டு தமிழ் மக்களை நோக்கிய நெருக்கடிகளை முன்னெடுக்க வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துவிடும். தமிழ் மக்களின் வாழ்விடங்களில் தொடர்ந்தும் பாதுகாப்புக் காரணங்களை கூறியபடி சீருடைக்ளின் நடமாட்டங்கள் தொடரப்போகின்றன. எனவே அரசியல் மற்றும் அதற்கான அணுகுமுறையில் சமகாலச் சூழலை புரிந்துகொண்டு தமிழ் மக்கள் வழிநடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இவ்விதமான கோரிக்கைகளை தமிழ் மக்களிடையே சென்றடைய விடாமல் தேசியம், தன்னாட்சி என்று கூறியபடி பகைமை தீ வளர்க்கப்பட்டது. அந்தத் தீ தற்போது வடக்கிலும், கிழக்கிலும் மெல்லப் புகையத் தொடங்கியுள்ளது.

வடமாகாண முதலமைச்சரை சந்தித்த யாழ்.மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜென்ரல் உதய பெரேரா, வடக்கில் மீண்டும் புலிகளை மீள் உருவாக்கும் முயற்சிகள் சிலரால் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும், பாதுகாப்பை முன்னிட்டு சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியதாக முதலமைச்சரை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகி இருந்தன.

இதற்குமுன்னரே நவரத்தினம் நவநீதன் அல்லது அப்பன், கஜீபன் பொன்னையா செல்வநாயகம் அல்லது கோபி ஆகிய இருவர் தாம் புலிகள் இயக்கத்தை மீளவும் உருவாக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும், அது தொடர்பில் சில முன்னால் புலிகள் இயக்க உறுப்பினர்களுடன் தொடர்புகளை மேற்கொண்டதாகவும், புலிகள் இயக்கத்தோடு மிகவும். நெருக்கமாக இருந்தவர்களை நாடி சில உதவிகளை நாடியதாகவும் செய்திகள் வெளிவந்தன.

இவர்களை புலம்பெயர் தேசத்தின் புலித்தலைவராக கூறிக்கொள்ளும் நெடியவன் வழிநடத்துவதாகவும், ஜெனிவா மனித உரிமை பேரவையின் மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம காலத்தில் இலங்கையில் படையினரைத் தூண்டிவிட்டு மக்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்திவிட்டு, அத்தகையதொரு சூழலை இலங்கை அரசின் தமிழர்களின் அடாவடித்தனமாக சித்தரிப்பதற்கு முயற்சிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இதே செய்தியை வேறு மாதிரியாக அதாவது ஜெனிவாவில் இலங்கை அரசு மீதான வற்புறுத்தலாக சுட்டிக் காட்டப்படுகின்ற வடக்கில் அதிகரித்த இராணுவப் பிரசன்னம், படையினரின் தலையீடுகள், என்பவற்றுக்கு நியாயம் கற்பிப்பதற்காக அரசாங்கமே இவ்வாறு கோபி, அப்பன் எனும் பெயர்களை குறிப்பிட்டு பொய் நாடகம் ஒன்றை அரங்கேற்றுகின்றது என்றும் தமிழ் யாழ்ப்பாண ஊடகங்கள் பரப்புரை செய்கின்றன.

ஆனால் அப்பன், கோபி ஆகிய இருவர் மட்டும் இச்சம்பவங்களோடு தொடர்புபட்டதாக இல்லை. அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து நடமாடியதாக ஒன்பது பேர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவர்களில் முன்னாள் புலிகள் நான்கு பேரும் உள்ளடக்கம் என்பதும் தெரியவந்துள்ளது.

இவர்கள் பற்றிய தகவல்களை படையினருக்கு வழங்கியதும் கோபி குழுவினரால் அணுகப்பட்ட முன்னாள் புலி ஒருவர் என்பதும் தற்போது தெரியவந்துள்ளது.

இவர்கள் புலிகளின் பெயரால் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு வன்னியில் ஆங்காங்கே வீசியுள்ளதோடு குறிப்பாக வடமராட்சியிலும் சில பகுதிகளில் வீசியுள்ளனர்.

இதுதொடர்பில் பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே படையினர் தொடர்புபட்டவர்களை தேடியுள்ளனர். அப்போதே கிளிநொச்சிப் பகுதியில் கோபி நடமாடுவதாகவும் இரவு வேளையில் ஜெயகுமாரியின் வீட்டுக்கு வந்துசெல்வதாகவும் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் பொலிஸார் திட்டமிடாத வகையில் அங்கு சென்று விசாரித்தபோதே கட்டிலுக்குக் கீழே பதுங்கியிருந்த கோபி, பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பித்து ஓடியுள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்தே படையினர் உஷாரடைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். அதனைத் தொடர்ந்தே ஜெயகுமாரி அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததன் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார். அப்போது அவரது 13 வயது மகள் விபுசிகாவை யாராவது பராமரிப்பில் வைத்திருக்கவேண்டுமென பொலிஸார் கேட்டுக்கொண்டபோது விபுசிகாவை பொறுப்பேற்க எவரும் முன்வரவில்லை. இன்று ஜெயகுமாரி பற்றியும் விபுசிகா பற்றியும் குரல்கொடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும்கூட விபுசிகாவை பொறுப்பெடுத்து ஆதரவளிக்க முன்வரவில்லை. அவர்களின் தேவையெல்லாம் விபுசிகாவையும் படையினர் கைது செய்யவேண்டும் அதை படையினரின் அடக்குமுறையாக் வெளி உலகுக்குக் காட்டவேண்டும் என்பதாகவே இருந்துள்ளது.

யாரும் பொறுப்பேற்காத நிலையில் தாயுடன் விபுசிகாவை தங்க வைத்த நிலையில் மறுநாள் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் விபுசிகாவை பொலிஸார் பாதுகாப்பாக ஒப்படைத்துள்ளனர்.

அடுத்ததாக கோபி, அப்பன் உள்ளிட்ட குழுவினரைத் தேடும் நடவடிக்கையை படையினர் தீவிரப்படுத்தினர். சுற்றிவளைப்புக்கள், பரவலான சோதன்னைகள், சுவரொட்டி கோரிக்கைகள், சலுகை அறிவிப்புக்கள் எனப் பல முனைகளிலும் தேடும் படலம் ஆரம்பமானபோது வடக்கில் யுத்தத்திற்குப் பின்னர் மீண்டும் ஒரு பரபரப்பான யுத்த காலச் சூழல் தோற்றம் பெற்றது.

அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பகுதியில் இவர்கள் நடமாடுவதாக கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். நூற்றுக்கும் அதிகமானவர்களை விசாரணைக்கு உட்படுத்தினர். அத்தேடுதல் நடவடிக்கையின்போது கோபி குழுவினருடன் தொடர்புபட்ட முக்கிய நபர் ஒருவரை கைது செய்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

தற்போது கோபி, அப்பன் ஆகியோரை தேடும் சுவரொட்டிகள் கிழக்கு மாகாணத்திலும் பரவலாக ஒட்டப்பட்டுள்ளதோடு, அவர்கள் பற்றிய தகவல்களை வழங்குவோருக்கு பத்து இலட்சம் ரூபாய்கள் சன்மானமும் வழங்கப்படுமெனவும் படையினர் தெரிவித்துள்ளனர். இவற்றைப் பார்க்கின்றபோது எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்திலும் தேடுதல்கள், சுற்றிவளைப்புக்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதை கிரகிக்கமுடிகின்றது.

இதற்கிடையே யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ் மக்கள் மீண்டும் அச்ச உணர்வோடும் அடையாள அட்டைகளுடனும் நடமாடுகின்ற சூழல் உருவாகியுள்ளது.

தளர்ந்து போயிருந்த போக்குவரத்து சோதனைச் சாவடிகளில் மீண்டும் படையினர் காணப்படுகின்றனர். வீடுகளுக்கு அண்மையில் இரவில் படையினர் நடமாடுகின்றனர். நாய்களின் குரைப்பும், சப்பாத்துக் காலடிகளின் சத்தமும் கேட்கத் தொடங்கியுள்ளது. இப்போது படையின்ரை வெளியேற்றுமாறு கோரிக்கைவிடுப்பதற்கான நியாயம் தொலைந்து போயிருக்கின்றது. பொது மக்களிடமிருந்து யுத்தத்திற்குப் பிறகு தூரமாகியிருந்த படையினரின் செயற்பாடுகள் மீண்டும் பொதுமக்களின் அருகில் நெருங்கிவருகின்றது. எந்த இரவில் எந்தப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் என்ற அச்சம் உருவாகியுள்ளது.

இத்தகைய சூழல் உருவாகியிருக்கின்றதா? அல்லது உருவாக்கப்பட்டிருக்கின்றதா? என்ற வாதப்பிரதிவாதங்களும், வியாக்கியானங்களும் சுயஇலாபம் மிகுந்த அரசியல் தலைமைகளால் முன்வைக்கப்படுகின்றது.

இந்த நிலைமையில் அரசுக்கு சாதகங்களை விடவும் பாதகங்களே ஒப்பீட்டு அளவில் அதிகமாகும். ஆகவே அரசுக்கு மீண்டும் புலிக்கதையை உருவாக்கம் செய்வதற்கான தேவை சர்வதேச நெருக்கடி மிகுந்த தற்போதைய சூழலில் அவசியம் இருக்காது.

அதேபோல் புலிக்கதையை உருவாக்கிவிடுகின்ற விருப்பம் இருக்கின்றவர்களுக்கு ஏற்கெனவே புலிகளால் ஏற்படுத்தப்பட்ட கசப்பான அனுபவங்கள் காரணமாக தம்மை மீறிய இரண்டாங்கட்ட புலி வளர்ச்சியை வரவேற்பதில் விருப்பமின்மையே இருக்கும்.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

மதியூகி
எக்ஸ்ரே ரிப்போர்ட்



# தொடரும் மௌனங்கள்

**அன்பினி** ஒரு தென்னையின் காப்பில் இருந்தாள். பொறுப்பாளர்மீது வெறுப்பாயிருந்தது. கூட்டிப்போக வருவதாய் சொல்லிவிட்டுப் போனவர்கள் தங்களைச் சாகட்டுமென விட்டுப்போய்விட்டதாக அழுதாள். தானும் மற்றவர்கள் போல் ஊனமின்றி ஒழுங்காயிருந்தால் தன்னைத் தானே காப்பாற்றிப் போயிருப்பேனென நினைத்தாள். இனிச் சாவுதான் முடிவென்று நினைத்தாள். பசி, தாகம், களைப்பு என உடல் மிகவும் சோர்ந்துபோனது. கையோடு காத்துவந்த உடுப்புப்பையையும் கையில் பிடித்துக் காண்டிருந்தாள். அருகில் பிணங்கள், அழுகுரல்கள் எல்லாத் துயரோடும் தனது சாவின் கணங்களுக்காக அஞ்சியபடியிருந்தாள்.

அவளைவிட்டுப் போன 4பிள்ளைகளும் அன்பினியிடம் திரும்பிவந்தார்கள். அவளை மெல்ல மெல்ல நடக்க வைத்துத் தங்களோடு தாங்கிப் போனார்கள். அந்தப் பிள்ளைகளுக்கு நன்றி சொல்ல வார்த்தைகள் அவளிடம் இல்லை. காக்க வேண்டியவர்கள் விட்டுவிட்டுப் பேரக தங்களோடு இவளையும் கொண்டுபோகும் முனைப்பில் அவளோடு வந்த பிள்ளைகளுக்கு இதயத்தால் நன்றி தெரிவித்துக்கொண்டாள்.

இறுதியில் நகர்த்தல் அணியொன்று இவர்களைக் கண்டது. என்ன பிள்ளையள் இங்கை?, எங்கை உங்கடையாக்கள்? தனிக்கவிட்டுவிட்டுப் போன தங்கள் அணி பற்றிச் சொன்னார்கள். ஈற்றில் அன்பினியை அந்த அணி தங்கள் வாகனத்தில் ஏற்றிப் போய் புதுமாத்தளனில் இறக்கிவிட்டார்கள். அப்போது புதுமாத்தளனில்தான் புலிகளின் குரல் இயங்கிக் கொண்டிருப்பதாகவும் சொல்லிவிட்டுப் போனார்கள். நடந்துவந்த 4 பிள்ளைகளும் அன்பினியோடு இணைந்தார்கள்.

தொலைக்காட்சி வானொயில் வேறு மொழியொன்றில் பணியாற்றிய குடும்பம் தளபதி பானுவின் நகர்த்தல் அணியோடு காப்பாற்றப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தக் குடும்பம் அன்பினியையும் அவளுடன் நின்ற 4 பேரையும் தங்களுடன் அழைத்துப் போனார்கள். பதுங்குகுழியில் விடப்பட்டுப்போன கதைகளை அழுகையோடு அவர்களுக்குச் சொன்னார்கள்.

அந்தக் குடும்பத்து அன்றி அந்த இக்கட்டான வெடிகுண்டுச் சத்தங்களுக்கு நடுவிலும் இவர்களுக்காக நீதி வேண்டினார். இவர்கள் விடப்பட்டுச் சென்றது பற்றி அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் நடேசன் அவர்களுக்கு அன்பினியினதும் மற்றப் பிள்ளைகளினதும் கைபடக் கடிதம் எழுதுவித்து அனுப்பினார். அந்தக் கடிதம் அந்த இக்கட்டுக்குள்ளும் திரு.நடேசன் அவர்களுக்குப் போய் உரிய பொறுப்பாளருக்குத் தகவல் அனுப்பப்பட்டு அவர்கள் நின்ற வீட்டிற்கு வந்தார் பொறுப்பாளர்.

தனது பக்கத்தவறுக்கு வருந்துவார் மன்னிப்புக் கோருவார் என நினைத்தவர்களுக்கு அவரிடமிருந்து ஏச்சுத்தான் கிடைத்தது. ஊனமுற்றவர்கள் குண்டைக் கட்டி வெடிக்க வைக்குமாறும் குப்பியடிக்குமாறும் கூறினார் பொறுப்பாளர். ஏற்கனவே பல ஊனமடைந்த வர்களுக்கு அந்த முடிவை அறிவித்துள்ளதாகவும் கூறினார் அவர்.

என்னண்ணா...! சொல்றீங்கள்... நான் வெடிக்கமாட்டன்... என அழுதாள் அன்பினி. எதுக்கெடுத்தாலும் அழுதுகொண்டிரும்... உம்மாலை ஒரே தொல்லை.... உம்மைக் காவிக்கொண்டு போகேலாது பிள்ளை... ஒண்டில் வெடியும் அல்லது குப்பிகடியும்... அவர் தனது முடிவைச் சொல்லிவிட்டுப்போனார்.

ஆயுதங்கள் ஓய்ந்த சமாதான காலத்தில் போராளியானவள். அதிகம் கள அனுபவம் அற்றவள். வெடியென்றால் வெடித்துச் சிதறிய வீரர்களை நினைத்துப்பார்த்தாள். அவர்கள் அதற்காகத் தயார்ப்படுத்தப்பட்டு நெடுங்காலப் பயிற்சி பெற்றுப்போய் வெடித்தார்கள். இவள் பணியாற்றியது அரசியல்துறை ஊடகத்துறை...! அங்கே வெடித்தவர்களையும் குப்பி கடித்தவர்களையும் பற்றிய கதைகளை வாசித்தாள். கவிதைகளை வாசித்தாள். நிகழ்ச்சிகள் செய்தாள். ஆனால் தானும் அப்படி வெடிக்க, குப்பி கடிக்கும் தைரியத்தை அவள் பெற்றுக் கொள்ளவில்லை. தங்களை ஆகுதியாக்கியவர்கள் போல் இவளால் இலகுவாய் தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் முடிவுக்குவர முடியவில்லை. அவளோடு வாழ்ந்தவர்கள் பலர் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்வதான செய்திகள் அன்பினியையும் கலவரப்படுத்திக் கொண்டிருந்தது.

இறுதியில் அன்பினியை ஓர் குடும்பத்தினரிடம் பொறுப்புக் கொடுத்தார்கள். அவர்களோடு அவள் இடம்பெயர்ந்து கொண்டிருந்தாள். எறிகணை மழைக்குள்ளால் அவள் இடம்மாறி இடம்மாறிப் போய்க் கொண்டிருக்க அவளது கணவன் ஒருதரமும் வந்து பார்க்கவுமில்லை. எப்படியிருக்கிறாள் என்பது பற்றி அக்கறைப்படவுமில்லை. திருமணம் செய்து வைத்தவர்கள் மீதே அவளுக்குக் கோபம். ஒப்புக்கு ஒரு திருமணம். அதைத்தவிர அவள் எந்த மகிழ்ச்சியையும் அனுபவிக்கவில்லை. குறைந்தபட்சம் அவளது திருப்திக்காக வேனும் அவன் அவளை வந்து பார்ப்பது கூட இல்லை.

2009 ஏப்ரல் இறுதிப்பகுதி. அன்பினியைத் தேடிப்போனான் அவளது கணவன். கடலால் அவளை வெளியேறும்படியும் அதற்கான பாஸ் அனுமதியையும் பெற்றுத்தருவதாகவும் வேண்டினான். கால்களுமில்லை, அவளைக் கைதாங்கிக் காவிச்செல்ல ஆட்களுமின்றிய நிலைமையில் அவனையும் வரும்படி வேண்டினாள்.

நான் வரமாட்டன்... கடைசி முடிவு சாவெண்டாலும் அது இங்கையே எனக்கு அமையட்டும்... அவளோடு போக மறுத்தவன் இறுதி முடிவு தனது உயிரை விடுவதுதான் என்பதனையும் உறுதியாய் தெரிவித்து விட்டுப் போய்விட்டான். அன்பினியைப் பொறுப்பேற்றவர்கள் கடலால் தப்பிவிட்டார்கள். அவள் மே17 வரையும் முள்ளிவாய்க்கால் முனைவரையும் வேறொரு குடும்பத்தின் உதவியோடு போயிருந்தாள். கடந்துவந்த பாதையெல்லாம் உயிர்கள் துளித் துளியாய் காற்றோடும் கந்தகப்புகையோடும் கலந்துகொண்டிருக்க காத்திருந்தவர்களுடன் அவளும் காத்திருந்தாள்.

பிணங்களின் நடுவில் சாகும் தறுவாயில் உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருந்தது. அருகில் பிணங்கள் குவிந்து கிடக்க பிணங்களோடு காவலிருந்தவர்களோடு அன்பினியும் காவலிருந்தாள்.

பலர் தங்களுக்குத் தாமே சிதைமூட்டிச் சாம்பலானதாயும் தங்களைத் தாங்களே வெடிக்க வைத்ததாயும் பலரது கதைகள் அவளையும் வந்து சேர்ந்துகொண்டிருந்தது.

(மௌனங்கள் தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

## வதை 106

## மணியம்

**அவரை** பொட்டம்மானின் ஆட்கள் நள்ளிரவில் வெள்ளை வானில் வந்து 'கூட்டிச் சென்ற' விடயத்தைப் பின்னர் நான், என்னுடன் நாவற்குழி முகாமில் தண்டனை அனுபவிக்க வந்த, புலிகளின் முன்னாள் உறுப்பினன் மயூரன் என்பவனின் மூலம் அறிந்து கொண்டேன். மயூரன் தனது தண்டனையை அனுபவிப்பதற்காக நாவற்குழிக்கு அழைத்துவரப்படுவதற்காக, அந்த முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த நேரத்தில் இந்த உண்மையை அறிந்து கொண்டான்.

நான்கூட புலிகள் எனக்கு வழங்கிய ஒன்றரை ஆண்டுகள் தண்டனைக் காலத்தை முடித்துக்கொண்டு, விடுதலை செய்யப்படுவதற்காக நாவற்குழி முகாமிலிருந்து கொண்டு வரப்பட்டபோது, இந்த வினோத் முகாமில்தான் சுமார் 5 நாட்கள் வரை தங்கவைக்கப்பட்டிருந்தேன். என்னுடன் பலர் அங்கும் இங்கும் செல்வதற்காகத் தங்க வைக்கப்பட்டிருந்தனர். என்னை விடுதலை செய்வதற்கு முன்னர் புலிகளின் புலனாய்வுப் பிரிவில் பொட்டம்மானுக்கு அடுத்த நிலையிலிருந்த கபிலம்மான் என்னுடன் சுமார் 3 மணித்தியாலங்கள் வரை உரையாடியதும் இங்குதான்.

இந்த முகாமுக்குப் பொறுப்பாக அந்தக் காலகட்டத்தில் இருந்த ஈழவன் காலமானதாக (இயற்கை மரணம்) அண்மையில் ஒருநாள் 'உதயன்' பத்திரிகையை வாசிக்கும்போது அறிந்துகொண்டேன். அதைப் படித்தபோது பழைய சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. இவனது தம்பியும் புலிகள் இயக்கத்தில் இருந்தவன்தான். அவனது பெயர் றெக்ஸ் என்பது. அவன் ஏதோ தவறு செய்ததிற்காக புலிகளால் புலிகளால் கைதுசெய்யப்பட்டு, எம்முடன் நாவற்குழி முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தான். அங்கு அவன் புலிகளுக்கு இராணுவச் சீருடைகளும், துப்பாக்கி ரவைக்கூடுகள் வைக்கும் 'கோல்ஸ்ரர்'களும் தைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தான்.

பின்னர் அவன் விடுதலையாகி வந்து, யாழ்.கஸ்தூரியார் வீதியில் இயக்கச் செல்வாக்கில் (பணம் படைத்தவர்களே அந்த வீதியில் கடை எடுப்பது கஸ்டம்) ஒரு கடை எடுத்து தையல் நிலையம் ஒன்றை நடாத்திவந்தான். இப்பொழுது அவன் பிரான்சில் வாழ்வதாக அவனது அண்ணன் ஈழவனின் மரண அறிவித்தல் மூலம் அறிந்துகொண்டேன்.

இங்கு நான் சொல்லவருவது என்னவெனில், புலிகளின் முக்கியமான ஒரு முகாமான விநோத் முகாமுக்குப் பொறுப்பாக இருந்த ஈழவன் என்பவன், எவ்வித பிரச்சினையுமின்றி (இயக்கத்தைவிட்டு விலகியோ என்னவோ) திருமணம் செய்து கொண்டு, குழந்தையும் பெற்று யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவிட்டு காலமாகியிருக்கிறான். அவன் சாதாரண மனிதர்களைப் போல குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டது எனக்கும் மகிழ்ச்சிதான்.

புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்து, பல மனித விரோதச் செயல்களில் ஈடுபட்ட பலர், எவ்விதமான விசாரணைகளுக்கும் உள்ளாகாமல், அரசாங்கத்தின் பார்வையிலிருந்து தப்பி இலங்கைக்கு உள்ளேயே சாதாரணமாக வாழ்ந்து மரணித்திருக்கிறார்கள் என்பதற்கு இந்த ஈழவன் ஓர் உதாரணம் என்பதைத்தான், இங்கு நான் அழுத்திச் சொல்ல வருகின்றேன். இவர்கள் எல்லோரையும் அரசாங்கம் தேடிப் பிடித்துக் கொல்ல வேண்டும் என நான் சொல்லவரவில்லை. ஆனால் இப்படியானவர்கள் செய்த மனித விரோதச் செயல்கள் கண்டிப்பாக விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் என்பதைத்தான். இப்படியானவர்களை விசாரித்தால் புலிகளின் தலைமை செய்த ஏராளமான மனித விரோதக் கொடுஞ்செயல்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவர முடியும். உதாரணமாக 'தீப்பொறி' இயக்கத்தின் நோபேர்ட்டை அந்த நள்ளிரவில் வந்து கொண்டு சென்றவர்கள் யார்?, அவர்கள் அவரை எங்கே கொண்டு சென்றார்கள்?, இறுதியில் அவரை என்ன செய்தார்கள்? இவற்றுக்கெல்லாம் உத்தரவிட்டவர் யார்? என்பது போன்ற விடயங்களை வெளிக் கொணர்ந்திருக்க முடியும்.

இதனால்தான் நான் உட்பட பல ஜனநாயக ஆர்வலர்கள் கருதுவது என்னவெனில், அரசாங்கம் தன்வசம் உள்ள புலி உறுப்பினர்களை உரிய முறையிலும், விரைவாகவும் விசாரித்து உண்மைகளை மக்களுக்குத் தெரியப்படுத்துவதுடன், குற்றமிழைத்தவர்களுக்கு உரிய தண்டனையும் வழங்கவேண்டும். எந்தக் காரணம் கொண்டும் மக்களுக்கு எதிராகக் குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பவிட விடக்கூடாது.

புலிகளின் மீதான இந்தக் குற்றச்சாட்டுகளை நான் முன்வைக்கும்போது, சிலர் அரச படைகள் இந்த 30 வருடப்போர் முழுவதிலும், இறுதிக்கட்டப் போரின்போதும், பல தமிழ் மக்களைக் கொன்றிருக்கையில், புலிகளின் செயல்களை மட்டும் ஒருதலைப்பட்சமாகக் குறிப்பிடுவதேன் என வினவலாம்.

ஒரு போரின்போது, போரில் ஈடுபடும் இருதரப்பினரும் மரணிப்பதும், போரில் ஈடுபடுபவர்கள் மக்களைக் கொல்வதும் நடைபெறுவதுதான். குறிப்பாக புலிகளுடான இறுதிக் கட்டப்போரின் போது, புலிகளால் தமது பாதுகாப்புக் கேடயமாக ஒரு சிறிய பிரதேசத்தில் பிடித்து வைக்கப்பட்டிருந்த 3 இலட்சம் மக்களில் சில ஆயிரம் மக்கள் இருதரப்பினரதும் துப்பாக்கிப் பிரயோகம், ஷெல் தாக்குதல்கள் என்பவற்றில் சிக்கி மரணித்தனர்.

எனது குடும்பத்துக்குள்ளேயே 4 பேர் எனது சொந்த அக்காவின் கணவர், எனது சொந்த அண்ணனின் மனைவி, எனது மனைவியின் தாய் மாமன், எனது மனைவியின் சொந்தச் சகோதரியின் மகன் (இவன் சிறுவர் போராளியாகப் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டவன்) கொல்லப்பட்டுள்ளனர். (இதைவிட புலிகளினால் எனது குடும்ப உறுப்பினர்களும், நெருங்கிய உறவினர்களும் அனுபவித்த துன்பியல் சம்பவங்களின் நீண்ட பட்டியல் ஒன்றுண்டு. சந்தர்ப்பம் வாய்க்கும்போது அதைப் பின்னர் விவரிப்பேன்)

அத்துடன், எமது கட்சியின் புத்தகக் கடையில் நீண்டகாலம் பணிபுரிந்தவரும், விசுவமடு விவசாயியும், மண்டைதீவைப் பிறப்பிடமாக் கொண்டவருமான தோழர் சி.தா.முத்துலிங்கம் ஷெல் வீச்சில் மரணித்தார். எமது சின்னஞ்சிறு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பலர் மரணித்தனர். அத்துடன் எமது தோழர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் எனப் பலர் மரணித்தனர்.

இந்த அப்பாவிப் பொது மக்களின் மரணங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை. அந்த மரணங்களுக்கான உரிய விசாரணைகள் நடாத்தப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடுகளும் வழங்கப்படவேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

ஆனால், நான் இங்கு குறிப்பிடும் புலிகளின் மனித விரோதச் செயல்கள் என்பன, போர்க்களத்தில் நடைபெற்றவை அல்ல. அவை சாதாரண காலத்தில் சித்திரவதை முகாம்களை நிறுவி, அங்கு மனிதர்களைப் பிடித்து வைத்துச் சித்திரவதை செய்ததையும், கொலை செய்த சம்பவங்களையுமே நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

(தொடரும்...)




"ஜெர்மனியின் உண்மையான பலம் இவை மட்டுமல்ல. பொறியியல் துறையில் அந்தக் காலத்தில் கிட்டத்தட்ட தன்னிறைவு கண்டிருந்த தேசம் அது. ஆயுதங்கள், போர் விமானங்கள்,











நீழ்மூழ்கிக் கப்பல்கள் தயாரிப்பிலும் பிரயோகத்திலும் மற்ற தேசங்கள் எதுவும் நெருங்கமுடியாத தரத்தைத் தொட்டுவிட்டு இருந்தது ஜெர்மனி.

இந்த தைரியம்தான் ஹிட்லரை எதைக் கண்டும் பயப்படாத மனநிலைக்குக் கொண்டு சேர்த்திருந்தது. ஜெர்மனியின் ஒவ்வொரு குடிமகனும் தனது படை வீரன்தான் என்பதில் அவர் தெளிவாக இருந்தார். கட்டாய இராணுவ சேவை அமுலில் இருந்தது பெரிய விஷயமல்ல. முதியோர், பெண்கள் உட்பட ஜெர்மனியக் குடிமக்கள் ஒவ்வொருவரும் ஏதாவது விதத்தில் யுத்தத்தில் பங்கெடுக்கவேண்டுமென்பதை அவர் மிகவும் வற்புறுத்தினார். ஆட்பலமும் ஆயுதபலமும் அவரைக் கிறக்கம் கொள்ளச் செய்தன. இயல்பான முரட்டுத்தனமும் வெறியும் அவரைச் செலுத்திக் கொண்டிருந்தன.

இதுதான் பாலஸ்தீன முஸ்லிம்களுக்கு ஓரளவு நம்பிக்கையளித்த விஷயம். பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் கூட்டணி நாடுகள் ஒருபோதும் தம்மை ஆதரிக்கப் போவதில்லை என்பது தெளிவானதுமே பாலஸ்தீன் அராபியர்கள் ஹிட்லரை ஆதரித்து விடலாம் என்று முடிவு செய்தார்கள்.

அராபியர்கள் தமது சரித்திரத்தில் செய்த இரண்டாவது மிகப் பெரிய தவறு இது. அவர்கள் செய்த முதல் தவறு, யூத நிலவங்கிகளின் நோக்கம் தெரியாமல் தங்கள் நிலங்களை இழந்தது.

இரண்டாவது இது. பிரிட்டனின் காலனிகளுள் ஒன்றாக இருந்த பாலஸ்தீனில் அப்போது முஸ்லிம்களுக்கென்று பிரமாதமான அமைப்புப் பலமோ, நட்புப் பலமோ கிடையாது. அவர்கள் சிதறிய பட்டாணிகளாகத்தான் இருந்தார்கள். எல்லோருக்கும் பொதுவான ஒரே விஷயம், எல்லோரும் யூதர்களால் பாதிக்கப்பட்டிருந்தார்கள் என்பதுதான்.

முஹம்மது அமீன் அல் ஹுஸைனி என்பவர் அன்றைக்கு பாலஸ்தீன முஸ்லிம்கள் சமூகத்தின் தலைவராக இருந்தார். 1893ம் ஆண்டு ஜெருசலேமில் பிறந்தவர் இவர். மிகப்பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பணக்காரர் என்றால் ஒட்டாமான் சாம்ராஜ்ஜியத்திலேயே மிகப்பெரிய பணக்காரக் குடும்பம் என்று பெயர் பெற்ற அளவுக்குப் பணக்காரர்.

தமது சொத்து, சுகங்கள் முழுவதையும் கொடுத்தாவது பாலஸ்தீன முஸ்லிம்களுக்கு நிம்மதியைத் தேடித்தரமுடியுமா என்று பாடுபட்டுக் கொண்டிருந்தவர் அவர். இந்தக் குணங்களால் அவரை மக்கள் 'கிராண்ட் மு..ஃ.ப்தி' என்று அழைத்தார்கள். அவர் சொன்ன பேச்சுக்கேட்டார்கள்.

புத்திசாலி, திறமைசாலி, பொதுநல நோக்குக் கொண்டவர், அரசியலில் தெளிவான பார்வை உள்ளவர் என்று எத்தனையோ விதமாகப் பாராட்டப்பட்ட ஹுசைனிதான் அந்தத் தவறைச் செய்தார்.

உலகப்போரில் ஹிட்லருக்கு ஆதரவு!

மனித மனங்களின் விசித்திரங்களைப் புரிந்து கொள்ளக் கொஞ்சம் கூர்ந்து கவனிக்கவேண்டும். ஹிட்லர் எத்தனை ஆபத்தான மனிதர் என்று பாலஸ்தீன் அராபியர்களுக்குத் தெரியாதா? நிச்சயம் தெரியும். ஆனாலும் அந்த நேரத்தில் தங்களுக்கு உதவ அவரைவிட்டால் வேறு ஆள் இல்லை என்று அவர்கள் நினைத்ததற்குக் காரணம் – ஹிட்லருக்கு யூதர்களைப் பிடிக்காது என்பது மட்டும்தான்!

ஹுஸைனி, ஜெர்மனிக்குப் போய் ஹிட்லரைச் சந்தித்துப் பேசினார். யுத்தத்தில் பாலஸ்தீன் முஸ்லிம் சமூகத்தினர் முழு மனதுடன் அவரை ஆதரிப்பார்கள் என்று வாக்குக் கொடுத்தார். சிறிய அளவிலாவது ஒரு இராணுவத்தை திரட்டித் தரத் தம்மால் முடியும் என்றும் சொன்னார்.

யுத்தம் மிகத் தீவிரமுகம் கொள்ளத் தொடங்கியது. முஸ்லிம்கள் தம் தலையில் தாமே மண்ணைவாரிக் கொட்டிக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

ஜெர்மனியில் ஹிட்லரின் இராஜாங்கம் ஆரம்பமானதில் இருந்து, அவரது மறைவை ஒட்டி ஒரு முடிவுக்குவந்த இரண்டாம் உலக யுத்தம் வரை முழுவதுமாகத் தெரிந்து கொள்ளவேண்டுமானால், அதற்கு ஏராளமான சுவாரசியமான புத்தகங்கள் இருக்கின்றன. வில்லியம் ஷிரரின் The Rise and Fall of the Third Riech படித்துப் பாருங்கள். ஒரு திரைப்படம் பார்ப்பதுபோலவே இருக்கும். ஹிட்லரின் யூதப் படுகொலைகள், அதனைத் தொடர்ந்து யுத்தத்தில் யூதர்கள் பிரிட்டனின் கூட்டணிப் படைகளுக்கு அளித்த ஆதரவு, என்ன செய்தாவது தங்கள் தேசத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்கின்ற பதைப்பில் பாலஸ்தீனிய முஸ்லிம்கள் ஹிட்லருக்கு ஆதரவு தெரிவித்தது. இந்த மூன்று விஷயங்கள்தான் இங்கே முக்கியம்.

இதில், முஸ்லிம்களின் இந்த முடிவு மிகவும் அபத்தமானது. துரதிர்ஷ்டவசமானது. யுத்தத்தில் அவர்கள் எந்தப் பக்கமும் சாயாமல் இருந்திருந்தால் கூடக் கொஞ்சம் அனுதாபம் மிச்சம் இருந்திருக்கும். எப்போது அவர்கள் ஹிட்லரை நம்பினார்களோ, அப்போதே அவர்களின் விதி எழுதப்பட்டுவிட்டது.

உலக யுத்தம் தொடங்கிய முதல் ஒன்று, ஒன்றரை ஆண்டுகள்வரை ஹிட்லரின் கைதான் பெரிதும் மேலோங்கி இருந்தது. ஆனால் பின்னால் நிலைமை அப்படியே தலை கீழாகி ஜெர்மன், இத்தாலி, ஜப்பான் இராணுவங்களை பிரிட்டனும் அமெரிக்காவும் பிரான்ஸும் பார்த்த இடங்களிலெல்லாம் உதைக்கத் தொடங்கின. பேர்ல் துறைமுகத் தாக்குதலைத் தொடர்ந்து, ஜப்பான்மீது அமெரிக்கா கொண்ட வெறி, ஜெர்மனிக்கும் மிகப்பெரிய எமனாக விடிந்தது. அமெரிக்கா என்பது எத்தனை சக்திகளைக்கொண்ட தேசம் என்பதும் முதல் முதலில் அப்போதுதான் முழுமையாகத் தெரியவந்தது.

1944-ம் ஆண்டின் இறுதியில் பிரிட்டன் கூட்டணிப் படைகளின் வெற்றியை எல்லோரும் எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள்.

(தொடரும்...)

A.பாரிஸ், மிகிந்தலை.




**அப்பொழுது** திடீரெண்டு தாய் நிலா,

"புள்ளே ஏனம்மா அழுறே, இவ்வளவு காலமும் இராப்பகலாய் கண்முழிச்சு படிச்சே. இப்ப ஏனம்மா? சந்தோசப்படவேண்டிய நீ இப்படி?" என்று கமலம் வார்த்தை வலிக்காமல் இழுக்க... கண்ணீருக்கு அணை போட்டாள் கீதாஞ்சலி இப்படி!

"அம்மா... கண்ணீரும் தண்ணீரைப் போல நிறமில்லை! எண்ட கண்ணீருக்கும் அர்த்தம் நிறைய இருக்கம்மா...

ஆனந்தம்... கவலை... இப்படி பல விதமம்மா...!"

கீதாஞ்சலியின் பேச்சு, துக்கமும் சந்தோசமும் கலந்திருக்கும் கண்ணீரின் அர்த்தத்தை புரியவைத்தது!

"அம்மா கெம்பஸ் கிடைச்சது சந்தோசம்! அப்பா இல்லாத கவலை! உங்க இரண்டுபேரையும் விட்டுப் பிரியும் சோகம்! படிப்பு முடியும் வரை பணம் எனக்குள் உருவாக்கிய காய்ச்சல்" என்று அவளின் கண்ணீரின் அர்த்தங்களை அடுக்கிக்கொண்டு



போன பின்தான் நானும் உணர்ந்து கொண்டேன். அடுத்தவர் கண்ணீருக்கு அர்த்தம் சொல்ல இயலாது என்று! நான் கீதாஞ்சலியின் கண்ணீருக்கு கூறியது அர்த்தம் இல்லை! ஒரு கணிப்பு மட்டும்தான். அதுகூட இப்பொழுது பொய்யாகிவிட்டது.

கீதாஞ்சலி அடுக்கு மெத்தையில் வார்த்தைகளை படுக்கப்போட்டுக் கொண்டிருக்கையில் தாய் கமலம் குறுக்கிட்டாள்.

"பழைய விசயத்தை விடு பிள்ளை... நீ படிச்சி பெரிய சட்டத்தரணியா வரணும். மக்களுக்கு அநியாயம் நடக்கும் இடமெல்லாம் உன்ர குரல் ஒலிக்கணும்"

தாய் கமலத்தின் கற்பனை.

கணவன் சிவராம் தொடக்கம் காணாமல்போன மற்றும் சுட்டுக் கொல்லப்பட்ட அனைவருக்கும் நீதி பெறும் தொனியில் உரைத்தாள்!

அது கீதாஞ்சலியின் உணர்வுகளை தமிழ்ப்பற்றை தொட்டுவிட்டது! ஏற்கனவே அவளுக்குள் இருந்த அந்த ஆவேசத்தை, உணர்வுகளை மெருகூட்டி உணர்ச்சிவசப்படுத்தினாள் கமலம்.

"ஓம் அம்மா. முதல்ல அப்பாவ கண்டுபிடிக்கும் விடயத்தை தொடுவேன், வழக்குத் தொடுப்பேன்"

என்று முடிப்பதற்குள் சீதாதேவி இருவரினரும் உரையாடலை உடைத்து அவள் பேச்சை நுழைத்தாள்.

"அக்கா நீ முதலிலை படிச்சு முடி! மற்றையது உனக்கு கிடைச்சதும் கொழும்பு கெம்பஸ். அங்கே சிங்களவர். அவங்களோட எப்படி படிக்கலாம்?, எப்படி காலம் கடத்தலாம் என்பதைப் பற்றிப் பார்!"

"இல்லை கீதா... உன்னையும் தான் நினைச்சு அழுதேன். என்னை விடு. நான் படிப்பேன் எனக்கு இப்ப கொஞ்சம் சிங்களமும் தெரியும்தானே.." என்று முடிப்பதற்குள்

"உனக்கு.... சிங்களம்... தெரியுமா?"

"ஓம்! எங்கட கடைக்கு முழுக்க முழுக்க ஆமியும் பொலிசும்தானே... அதால சிங்களம் கொஞ்சம் [illegible]ச்சிட்டேன்"

அக்காவின் தைரியத்தைக் கண்ட சீதாதேவிக்கு தனக்குள்ளும் அந்த தைரியத்தை வரவழைத்தது. ஆரம்பத்தில் அக்காவின் பணியை ஏற்க மறுத்தாலும் இப்ப பிடிப்பு! நாளை பொறுப்பேற்றாலும் பரவாயில்லை எனும் துடிப்பு. அவளுக்குள்ளும் எதையோ சாதிக்கும் முனைப்பு. இப்படி பலவற்றை நினைத்து இதயம் துடித்துக் கொண்டிருக்கையில் அவள் உதடு இப்படி விரிந்து மடிந்தது!

"அக்கா நானும் வாறன், நாளைக்கு கொமினிக்கேசனுக்கு போவம், பாலா அண்ணாவுக்கு சொல்லு எனக்கு விருப்பம் எண்டு"

"அதான் நல்லம். அப்பதான் உனக்கும் பயம் தெளிந்து பயமில்லாத சுபாவம் பழக்கப்படும். அதைவிட உனது தேவைக்கு பணமும் கிடைக்கும்"

சீதாதேவிக்கு வேலைசெய்வதற்கு விருப்பம். ஆனால் அவளுக்குள் அடைமழை இடி மின்னலோடு பொழிந்தது. தந்தை, தமயன் நினைவுகள் முட்டிமோதிக் கொண்டிருந்தது. அவர்கள் இருவரினதும் கதையைக் கேட்க முடியாத கவலை! எது எப்படியானாலும் கீதாஞ்சலி பல்கலைக்கழகம் போவதற்குள் முழுவிபரத்தையும் அறிவது சீதாதேவியின் குறியாய் இருந்தது! அந்த இலக்குத்தான் அவளை கீதாஞ்சலியின் பணியைப் பொறுப்பேற்க அதிகம் வற்புறுத்தியது!

வேட்டையாட காத்திருக்கும் வேட்டை நாயைப்போல் சந்தர்ப்பம் பார்த்து காத்திருந்தாள்.

அந்த நினைப்பு தந்தையின் இரத்தப் பிணைப்பு. சகோதரனின் பாசத் தவிப்பு. அவளுக்கு மட்டும் அல்ல! கீதாஞ்சலிக்கு மட்டும் அல்ல! இழப்புக்களை சந்தித்த அனைவருக்கும் இருக்கும்.

அது கீதாஞ்சலியின் குடும்பம் மட்டும் அல்லாமல் தமிழ், முஸ்லிம், சிங்களம் எனும் அனைத்து இனங்களுக்குள்ளும் மறைந்திருக்கும் மனிதபாசம்! மனிதனுக்குள் இருக்கும் மனிதநேயம்! மனிதனை மனிதனாய் அடையாளப்படுத்தும் மகத்துவம்!

அவைகளை புறக்கணித்துவிட்டு சமாதான காலத்தில் காடைத்தனமாய் மனிதனை சூறையாடும் காட்டு மிருகம்போல் நாட்டில் மனிதனை வேட்டையாடினார்கள்!

(நிலவுகள் வளரும்...)



# கிழக்கில்

# காணாமல் போனோரின் உறவுகளின் கண்ணீர்க் கதைகள்...

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட காணாமல்போனோர் தொடர்பாக ஆராயும் ஆணைக்குழுவின் கிழக்கு மாகாணத்துக்கான அமர்வுகள் இம்மாதம் 20ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றன. இந்த அமர்வுகளில் கிழக்கின் முக்கியமாக மட்டக்களப்பில் நடைபெற்ற படுகொலைகள் இடம்பிடித்ததுடன், புலிகளின் காலத்திலும் அதன் பின்னும் நடைபெற்ற கொலைகள், கடத்தல்களும் இடம்பிடித்துக்கொண்டன.

ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸவல் பராக்கிரம பரணகம முன்னிலையில் மட்டக்களப்பில், மொத்தமாக 132 பேர் சாட்சியமளித்தனர். அதேநேரம் ஏற்கனவே விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கான பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது பெருமளவானோர் தங்களது பதிவுகளை மேற்கொண்டனர். மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேசத்தில் இருந்து ஏற்கனவே பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளில் 45 முறைப்படுகளே விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

20-ம் திகதி செங்கலப் பிரதேச செயலாளர் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த 424 பேரில் 39 பேர் சாட்சியமளித்தனர். அத்துடன், கிரான் வாகரை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்காக கிரானில் நடைபெற்ற விசாரணைகளின்போது 48பேர் சாட்சியமளித்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலிருந்து ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு காணாமல் போனோர் தொடர்பில் விண்ணப்பம் செய்த 52 பேருக்கு சாட்சியங்களை தெரிவிக்க அழைப்புவிடுக்கப்பட்டிருந்தது. காணாமல் போன தமது பிள்ளைகளை கண்டுபிடித்து தருமாறு அழுதுகொண்டு பல தாய்மார் ஆணைக்குழு முன்னிலையில் கண்ணீர் மல்க சாட்சியங்களை வழங்கினர்.

அதேநேரம், மூன்று இடங்களில் நடைபெற்ற விசாரணைகளிலும் மண்முனை வடக்கு பிரதேச செயலக விசாரணையில் இரகசிய சாட்சியமளிக்கவேண்டும் என 3 பேர் கூறியிருந்தனர். அவர்களது சாட்சியங்களை ஆணைக்குழுவினர் பதிவு செய்ததுடன், ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமைக்கு மேலதிகமாக மட்டக்களப்பில் குருக்கள் மடம் பிரதேசத்தில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் 3பேரது சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டன. அத்துடன் கொழும்பில் வைத்து கடத்தப்பட்ட ஒருவர், கண்டியில் வைத்துக் காணாமல்போன ஒருவர். ஏற்கனவே கடத்தப்பட்டு கொல்லப்பட்டு சடலங்கள் மீட்கப்பட்டவர்களும் சாட்சியங்கள் வழங்குவதற்காக வந்திருந்தனர்.

இதில், சத்துருக்கொண்டானில் 1990ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 9ஆம் திகதி நடைபெற்ற படுகொலை குறித்து சாட்சியமளித்த ஒருவர் சத்துருக்கொண்டான் இராணுவ முகாமுக்குள் 90ஆம் ஆண்டு செப்ரெம்பர் 9ஆம் திகதி இரவு பெரிய வெடிச்சத்தமும் எரிபுகையும், குழந்தைகள் பெரியவர்களின் அழுகுரல் ஓலமும் கேட்டது. அன்றைய தினம் எங்களுக்கு அச்சம்மிகுந்த இரவாக இருந்தது. அந்தக் கோரச் சம்பவத்தினை இன்றும் நினைத்தால் உடல் நடுக்கம் எடுக்கிறது என்று தெரிவித்தார்.

சத்துருக்கொண்டான் படுகொலையில் 185பேர் இலங்கை இராணுவத்தினரும் அக்காலத்தில் இராணுவத்துடன் இணைந்து இயங்கிய ஊர்காவல் படையினரும் சேர்ந்து நடத்திய அட்டகாசத்தில் அழிந்துபோயினர். அப்பகுதியின் பிள்ளையாரடி, கொக்குவில், பனிச்சையடி, சத்துருக்கொண்டான் ஆகிய நான்கு கிராமங்களையும் சேர்ந்த வயோதிபர் முதல் சிறுவர் குழந்தைகள் என அனைவருமே சத்துருக்கொண்டான் இராணுவ முகாமில் கூட்டம் ஒன்று இருப்பதாகக் கூறியே அழைத்துச் சென்றிருந்தனர்.

அக்காலப்பகுதி அநேகமாக இராணுவம் என்றாலே ஓடி ஒழியும் நிலை ஒன்று இருந்தது. அந்த அச்சம்காரணமாக வீட்டில் இளைஞர்கள், இளம் பெண்கள் முடிந்தவரை உடல் நடுக்கத்துடேனேயே இருப்பதும், எங்காவது பற்றைகளுக்குள் ஒழிந்திருப்பதும் வழமையானதாகும். இவ்வாறு தப்பித்துக் கொண்டவர்களே இப்போது மிச்சம் இருக்கின்றனர் என்று அவர் மேலும் தனது சாட்சியத்தில் தெரிவித்திருந்தார். அத்துடன், இதற்குப்முன்னரும் மனித உரிமைகள் ஆணைக்குழு, சமாதான குழு எனப் பலவற்றிலும் இது தொடர்பில் முறைப்பாடுகள் சாட்சியங்கள் கொடுத்தும் எந்தப்பயனும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இம்முறை நடைபெற்ற ஆணைக்குழுவின் விசாரணைகளின்போது சாட்சியங்களும் பதிவுகளும் அநேகமாக தமக்குக் கிடைத்த அநீதிக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்ற வகையிலேயே அனேகப்பேர் சாட்சியங்களை வழங்கியிருந்தாலும், ஒரு சிலர் தங்களது வாழ்வாதாரப் பிரச்சினைகளை முன்நிறுத்தியும் இருந்தனர். அத்துடன், ஆணைக்குழுவும் சாட்சியமளித்தவர்களது வாழ்வாதாரம் குடும்ப நிலைமைகள் குறித்து முக்கியப்படுத்தி விசாரித்தது.

சாட்சியங்களில், கிழக்கில் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்துகொண்ட கருணா தரப்பினரும் அவர்களில் இருந்து பிரிந்து செயற்பட்ட பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் நடத்திய கடத்தல்கள் காரணமாக பாதிக்கப்பட்டதாகச் சொல்லும் பெருந்தொகையானோர் முறைப்பாட்டுச் சாட்சியங்களை வழங்கினர்.

இவற்றில் ஒரு வயோதிபப் பெண் கடத்தப்பட்ட எனது மகனை விடுவிப்பதற்காக இரண்டு இலட்சம் ரூபா பணம் கப்பமாக கேட்டு பணத்தை வழங்கியும் எனது மகன் இதுவரை விடுவிக்கப்படவில்லை என ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தபோது கண்ணீர மல்க கூறினார்.

நாங்கள் மட்டக்களப்பு பழுகாமத்தில் வசித்து வந்தோம். யுத்தத்தினால் அங்கிருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பு கல்லடியில் வசித்துவந்தோம். எனது மகனின் பெயர் இரத்தினசிங்கம் கேதீஸ்வரன் கால்நடை அலுவலகத்தில் தற்காலிக ஊழியராக கடமையாற்றிவந்ததுடன் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்களையும் நடத்திவந்தார்.

காணாமற்போன 29வயதான எனது மகன் 01.01.2009 அன்று மரணவீடு ஒன்றுக்காக சென்று கொண்டிருந்தபோது களுவாஞ்சிகுடி இராணுவ முகாமுக்கு முன்னால் வைத்து இராணுவத்தினரால் கடத்தப்பட்டார். எனது மகன் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருக்கவில்லை. எனது மகனைத் தேடி பல இடங்களுக்கும் சென்றேன். அப்போது மட்டக்களப்பிலுள்ள இராணுவ முகாமுக்கு சென்று முகாமிலுள்ள கெப்டன் சிவா என்பவரை சந்தித்தேன். உமது மகனை அடித்து கை மற்றும் கால் என்பன உடைக்கப்பட்டுள்ளன. அவரை நீங்கள் பார்ப்பதற்கும் அவரை விடுவிப்பதற்குமாக இரண்டு இலட்ச ரூபா பணம் தரவேண்டும் எனக்கூறினார். அப்போது நாங்கள் ஐம்பதாயிரம் ரூபா பணத்தினை கொடுத்தோம். பின்னர் மகன் கொழும்பிலுள்ளதாகத் தெரிவித்தார்.

அங்கு மகனை பார்ப்பதற்காக நானும் எனது கணவரும் எனது சகோதரனும் கொழும்புக்கு கெப்டன் சிவாவுடன் சென்றோம். அங்கு எங்களை ஒரு லொட்ஜில் விட்டு சென்றார். பின்னர் எங்களுக்கு தொலைபேசியில் மிகுதி பணத்திணை தருமாறு கூறப்பட்டது. கொழும்பில் முச்சக்கர வண்டியில் அலைந்து திரிந்து இந்த அலுவல்களை பார்ப்பதற்காக மேலும் இரண்டாயிரம் ரூபா கேட்கப்பட்டது. அந்த பணத்தையும் கொடுத்தோம். எங்களை யாருடனும் தொலைபேசியில் தொடர்புகொள்ள வேண்டாம் எனவும் கூறப்பட்டது.

பணத்திணை இராணுவ கப்டன் சிவா என்பவரே வாங்கி எடுத்தார். ஆனால், ஏமாற்றத்துடன் கொழும்பிலிருந்து ஊர் திரும்பினோம். மகனை இதுவரையில் நாம் பார்க்கவில்லை. எனது மகனை கண்டுபிடித்து தாருங்கள். எனது மகனுக்கும் வெல்லாவெளி பிரதேச சபையின் அன்றைய தவிசாளராக இருந்தவருக்குமிடையில் முரண்பாடுகள் இருந்ததாகவும் அறிவேன் என்றும் தெரிவித்தார்.

இவ்வாறு சாட்சியமளித்த இன்னொரு பெண், பிள்ளையானிடம் விளக்கம் இருப்பதாகக் கூறி வெள்ளைவானில் வந்தோர் தனது நெஞ்சில் துப்பாக்கியை வைத்து தன்னை தள்ளிவிட்டு தனது மகனைக் கடத்திச் சென்றதாகவும் வெள்ளை வானில் வந்த ஆறு பேர் இவ்வாறு தனது மகனை கடத்திச் சென்றதாகவும் வானின் இலக்கமும் தன்னிடம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பராணகம, தமக்கு வடக்கு - கிழக்கில் காணாமல்போனோர் தொடர்பிலேயே விசாரணை செய்வதற்கு பணிக்கப்பட்டுள்ளதாகவும் அதன்காரணமாக அப் பகுதிக்கு உட்பட்ட பகுதிலேயே விசாரணை செய்யமுடியும் என்று தெரிவித்ததுடன், கடத்தப்பட்டு காணாமல்போய் இதுவரையில் சம்பளமோ, ஓய்வூதியமோ கிடைக்கவில்லையாயின் சம்பளம் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்து தருவதாகவும், தனக்கு ஒரு வேண்டுகோள் கடிதத்தினை அனுப்புமாறும் கூறினார்.



ஆவணப் படம்

- கிழக்கான் -

இதேவேளை தனது மகன் சின்ன ஊறணியில் உள்ள வீட்டில் இருந்தபோது வெள்ளைவானில் வந்தவர்கள் தனது மகனை ஆயுதமுனையில் கடத்திச் சென்றதாகவும் தனது மகனை விடும்படி கெஞ்சியபோது தனது நெஞ்சில் ஆயுதத்தினை வைத்து தள்ளிவிட்டு கடத்திச்சென்றதாகவும் தாயார் ஒருவர் முறையிட்டார். 24-07-2009 அன்று சின்ன ஊறணியில் உள்ள செல்வரெட்னம் இராஜேந்திரன் என்பவரே கடத்திசெல்லப்பட்டதாகவும் அவரது தாயார் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். கடத்தப்படுவதற்கு முதல் நாள் அவரின் மனைவியின் வீட்டுக்கு மூன்று மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத நபர்கள் தனது மகன் தொடர்பில் விசாரணை நடத்திச்சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

கடத்தப்பட்ட தினம் தனது மகனின் வீட்டுக்கு 58-6974 என்ற இலக்கத்தினையுடைய வெள்ளைவானில் வந்தோர் மனைவியிடம் மகன் தொடர்பில் விசாரித்துள்ளனர். அவர் தனது கணவன் வெளியில் சென்றுள்ளதாக தெரிவித்துள்ளார். எனினும் அதனை நம்பாத அவர்கள் மகனின் வீட்டில் இருந்து நான்கு வீடு தள்ளியுள்ள எனது வீட்டுக்கு வந்து அங்கிருந்த மகனை வலுக்கட்டாயமாக பிடித்துச்செல்ல முற்பட்டனர். இதன்போது நான் அவர்களிடம் எனது மகன் எதுவித அமைப்புகளுடனும் தொடர்புபடாதவன் ஏன் அவனை பிடித்துச்செல்கிறீர்கள் எனக் கேட்டேன். அவர்கள் இவரை பிள்ளையான் விசாரணை செய்யவேண்டும் விசாரணை முடியவிடுவோம் எனக் கூறினர்.

இதேநேரம் 1990-10-25 ஆம் திகதி திருப்பெருந்துறையில் உள்ள தனது வீட்டுக்குவந்த இராணுவத்தினரும் ரெலோ இயக்கத்தினை சேர்ந்த இருவரும் 16 வயதுடைய சேடி சசிகுமார் என்னும் தனது மகனை கடத்திச் சென்றதாக இன்னொரு தாய் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். விசாரணைக்கெனவே தனது மகனை அழைத்துச்சென்றதாகவும் இதுவரையில் வீடு திரும்பவில்லையெனவும் அவர் தெரிவித்தார். தனது மகன் புனித மிக்கேல் கல்லூரியில் கல்விகற்றுக்கொண்டிருந்தவர் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு பலவாறான வகைகளிலும் முறைப்பாட்டுச் சாட்சியங்களை வழங்கியவர்கள் தெரிவித்தனர். அத்துடன் மட்டக்களப்பில் சிறு குழந்தையைக் கடத்திப் பணம் வசூலிக்க முயன்று முடியாமல் போகவே அருகில் இருந்த கிணற்றுக்குள் குழந்தையைக் கொண்டு போட்டிருந்தமை தொடர்பில் காணாமல்போனவர்களது தகவல்களை அதனை மறைத்து வெறுமனே காணாமல் போனதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதும் சாட்சியங்கள் பதிவுசெய்யப்படுவதும் உண்மைகளைக் கண்டறிவதற்கும் பதிவு செய்வதற்காகவும் என்றவகையில் சிலர் உண்மைகளை மறைத்துத் தகவல்களை வழங்க முற்படுவது ஆணைக்குழுவுக்கு மாத்திரமல்ல எதற்கும் பிரயோசனம் அற்றதாக இருக்கும். ஒரு சிலர் தன் மகனை காணவில்லை என்று கூறும் திகதிக்கும் அவற்றுக்கு இடையில் இருக்கும் வித்தியாசத்திற்கும் பலவாறான முரண்பாடுகள் இருக்கின்றன.

ஆனால், பல விடயங்களைச் சரியாகச் சொல்பவர்கள் சில விடயங்களை மறைக்க முற்படுகின்றனர். அவ்வாறான வேளைகளில் விசாரணை ஆணைக்குழு எந்தளவிற்கு சரியாக அறிக்கைகளைச் சமர்ப்பிக்க முடியும் என்பது கேள்வியாகும். ஆனாலும், சிலர் வெளிப்படையாகச் சொன்னாலும் பலர் சில விடயங்களை மறைக்கவே செய்கின்றனர். இவ்வாறு நடைபெறும் போது மேலும் மேலும் துருவித்துருவிச் சரியான தகவல்களை பெறவேண்டியது ஆணைக்குழுவுக்குக் கட்டாயமாகும்.

ஆனால் அவை தவிர்க்கப்படும் நிலை விசாரணைகளின்போது தெரிகிறது. அந்த வகையில் இந்த ஆணைக்குழு வெறுமனே ஒரு கணக்கெடுப்பைச் செய்வதற்காகவும் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காகவும் தொடங்கப்பட்டது என்று எண்ணத் தோன்றுகிறது.

ஏற்கனவே ஜனாதிபதியின் நல்லிணக்க ஆணைக்குழுவில் சாட்சியமளித்தவர்கள் கூட இந்த ஆணைக்குழுவிலும் சாட்சியம் அளிக்கின்றனர். அவ்வாறானால், நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளோ அதில் செய்யப்பட்ட பதிவுகளோ நடைமுறைப் படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அர்த்தப்படுமல்லவா. அதே நேரம் சில முன்னுரிமைகள் வழங்கப்படுகின்றனவா என்பதும் சந்தேகமாக இருக்கிறது. இவ்வாறு விசாரணைகள் என்றுவந்தால் நடைபெறவேண்டிய பல முக்கிய படு-கொலைகளின் விசாரணைகள் சரியாக மேற்கொள்ளப்படவேண்டும் என்றே இந்த ஆணைக்குழு குறித்து குறிப்பிட்டுக் கொள்ளமுடியும்.

ஆணைக்குழுவை விமர்சிக்க முடியாது என்பதனால் சில விடயங்களை எழுத வேண்டியும் இருக்கிறது என்றவகையில் இது பதிவு செய்யப்படுகிறது. ■




இப்படம் கோலாலம்பூர் - பீஜிங் விமானசேவை ஒழுங்கின்படி அவ்விமானம் பயணித்திருந்திருக்க வேண்டிய பாதையைக் காட்டுகிறது)

வான்வெளி எல்லையில் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானமும் பறந்துள்ளது. அது மட்டும் அந்நாடுகளின் ராடர் திரைகளில் தெரிந்துள்ளது. ஆனால் மலேசிய விமானம் தெரியவில்லை. அது தெரியாமல் இருக்க சிங்கப்பூர் விமானத்தில் பின்னாலேயே மலேசிய விமானமும் இயக்கப்பட்டிருக்கலாம்.

என்பன போன்ற கோணங்களில் மலேசிய பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### Thursday 20 March 2014 நிலைவரம்

### விமானி அழித்த பைல்களை எடுக்க முயற்சி!

மாயமான மலேசிய விமானத்தை செலுத்திச்சென்ற பிரதான விமானி ஸஹரிர் அஹ்மத் ஷாவின் இல்லத்தில் இருந்த பிளைட் சிமுலேட்டர் (flight simulator) பற்றியும் இந்த கருவியில் இருந்த சில பைல்கள் சமீபத்தில் அழிக்கப்பட்டுள்ளது. பற்றியும் தகவல்கள் வெளியாகின. அழிக்கப் பட்ட பைல்களை மீண்டும் எடுக்கும் முயற்சிக்கு, அமெரிக்க புலனாய்வுத்துறை FBI-ன் உதவி கோரப்பட்டுள்ளது. இந்தியக் கடலின் தெற்குப் பகுதியில், ஆஸ்திரேலியா அருகே மிதக்கும் இரு பொருட்கள், இந்த விமானத்தின் பாகங்களாக இருக்கலாம் என்று தற்போது கூறப்படும் நிலையிலும், மலேசியாவில் இருந்து சீனா. செல்லவேண்டிய விமானம் ஏன் பாதையில் இருந்து விலகிச்சென்றது என்ற மர்மத்துக்கு விடைகாணும் முயற்சியில் புலனாய்வாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த புலனாய்வுக்கு, விமானி ஷாவின் இல்லத்தில் இருந்த பிளைட் சிமுலேட்டரிலிருந்து அழிக்கப்பட்ட பைல்களை மீண்டும் எடுப்பது அவசியமாகிறது. பைல்களை மீண்டும் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட மலேசிய புலனாய்வாளர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. இந்த பிளைட் சிமுலேட்டரில் இருந்து பைல்கள் அழிக்கப்படும்போது, மூன்றுவிதங்களில் அழிக்கலாம். முதலாவது சாதாரண அழித்தல். இரண்டாவது ஆழமான அழித்தல். மூன்றாவது முழுமையாக அழித்தல். இதில் முதலாவது ரகத்தில் பைல்கள் அழிக்கப்பட்டிருந்தால், அதை மீண்டும் எடுப்பதற்கு புலனாய்வாளர்களே வரத் தேவையில்லை. நாமே எடுத்து கொள்ளலாம். இரண்டாவது ரகம் என்றால், மலேசிய புலனாய்வாளர்களால் திரும்ப எடுக்கமுடியும். தற்போது அமெரிக்க புலனாய்வுத்துறை FBI-ன் உதவி கோரப் பட்டுள்ளது என்பதால், பைல்கள் முழுமையாக அழித்தல் – அதாவது ஹார்ட் டிரைவில் இருந்தே நீக்குதல் நடந்திருக்கிறது என ஊகிக்கலாம். சரி. FBI வந்தால் மட்டும், ஹார்ட் டிரைவில் இருந்தே நீக்கப்பட்ட, பைல்களை திரும்ப எடுக்கமுடியுமா? இன்று அமெரிக்க டிவி. சேனல் பொக்ஸ் நியூஸில், FBI-ன் முன்னாள் ஆய்வாளர் ஒருவர், "நீங்கள் திறமைசாலியாக இருந்தால், உங்கள் கம்பியூட்டரில் இருந்து ஒரு இரகசிய பைலை மறைக்கலாம். ஆனால், அந்த கம்பியூட்டருக்குள் FBI வந்துவிட்டால், அதன்பின்னரும் அந்த பைல் இரகசியம் அல்ல" என்று கூறியதாக சொன்னார்கள்.அதுதான் FBI-யை மலேசியாவரை அழைத்திருக்கிறார்களோ!

### Saturday 22, March, 2014 நிலைவரம்

### தேடலில் விரக்தி... பிளஸ் சந்தேகங்கள்!

இந்தியக் கடலின் தெற்குப் பகுதியில் மாயமான மலேசியன் ஏர்லைன்ஸ் விமானத்தை தேடும் நடவடிக்கைகள் ஆரம்பமாகி உள்ளன. தேடலும், எவ்வித பலனும் இன்றியே முடிவுக்கு வந்தது. இதனால் பலத்த விரக்தியும், சந்தேகங்களும் ஏற்பட்டுள்ளன. நிஜமாகவே இங்கு மிதந்த பொருள் விமானத்தின் பாகமா? அல்லது, இதுவே ஒரு திசைதிருப்பலா என சர்வதேச மீடியாக்களிலும் கேள்விகள் எழ தொடங்கி விட்டன. விமானத்தின் பாகங்களாக இருக்கலாம் என சட்டலைட் இமேஜ்களை ஆஸ்திரேலியா வெளியிட்டபோதே, அந்த இமேஜ்கள் எடுக்கப்பட்டு 4 தினங்கள் ஆகிவிட்டிருந்தது. அந்த 4 நாட்கள் பழைய சட்டலைட் இமேஜை வைத்து, கடலில் மிதக்கும் பொருட்களை தேடுவது குறித்து, ஆரம்பத்திலேயே சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. இப்படியான சந்தேகங்கள் எழுந்தநிலையில் கருத்துத் தெரிவித்த ஆஸ்திரேலிய துணை பிரதமர் வாரன் ட்ரஸ், "சட்டலைட் இமேஜில் தெரிந்த பொருட்கள் இவ்வளவு நாட்களில், வேறு எங்காவது அடித்துப் போகப்பட்டு இருக்கலாம். அல்லது அவை கடலில் அமிழ்ந்து போயிருக்கலாம். கடலின் அடிப்பாகத்துக்குகூட போயிருக்கலாம்" என்றார். கடலில் மிதந்த பொருட்கள் விமானத்தின் பாகங்களாக இருக்கவேண்டுமானால், விமானம் கடலில் வீழ்ந்து, கடலின் அடியே போனபின், அதிலிருந்து பிய்ந்துபோன பாகங்கள் மேலே வந்து மிதந்திருக்கலாம் என்பதாக ஒரு தியரி சொல்லப்படுகிறது. அப்படியானால், மேலே வந்து கடல் மட்டத்தில் மிதந்த பொருட்கள், மீண்டும் கடலின் அடியே ஏன் போகப்போகிறது? என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக மற்றொரு விஷயம், இந்த சட்டலைட் இமேஜ்கள் தமது சொந்த சட்டலைட்டில் எடுக்கப்பட்டவை அல்ல எனக் கூறியுள்ள ஆஸ்திரேலியா, "தனியார் நிறுவனத்தின் வர்த்தக சட்டலைட்டால் எடுக்கப்பட்ட இமேஜ்கள் அவை" என்று கூறியிருந்தது. டிஜிட்டல் குளோப் என்ற தனியார் நிறுவனத்தின் வேர்ள்ட்வியூ-2 என்ற சட்டலைட் மூலம் எடுக்கப்பட்ட இமேஜ்கள் அவை. சரி. இந்த டிஜிட்டல் குளோப் எந்த நாட்டைச் சேர்ந்த நிறுவனம்? அது ஒரு அமெரிக்க நிறுவனம்!

# மலேசியாவின் மறைந்த விமானமும் மர்மங்களும்

**Exclusive report**

## தொடரும் விசாரணைகள்

**மலேசிய** தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீன தலைநகர் பெய்ஜிங்குக்கு சென்ற மலேசிய விமானம் கடந்த 8ஆம் திகதி திடீரென மாயமானது. விமானம் மாயமாகி 19 நாட்களாகியும் அதுபற்றிய தகவல்கள் தெரியவில்லை. விமானம் கடலில் விழுந்ததா? அல்லது தீவிரவாதி களால் கடத்தப்பட்டதா? என விசாரணை நடந்துவருகிறது. அமெரிக்கா, இந்தியா உட்பட 26 நாடுகள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு உள்ளன. இதற்கிடையே மலேசிய உளவுத்துறை மாயமான விமானம் குறித்து 13 கோணங் களில் விசாரணை நடத்திவருகிறது.

★ விமானம் தனது கட்டுப்பாட்டில் இருந்து விலகுவதற்கு சிறிதுநேரத்துக்கு முன்பு விமானிகள் அறையில் இருந்து மலேசிய விமான கட்டுப்பாட்டு அறையுடன் பேசிய விவரம் வெளியாகி உள்ளது. விமானி அறையில் இருந்து பேசியவர் அனைத்தும் சரியாக உள்ளது. இரவு வணக்கம் (ஆல் ரைட், குட்நைட்) எனப் பேசியுள்ளார். அதன் பிறகுதான் கட்டுப்பாட்டு அறையுடனான விமானத்தின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இதற்கு 12 நிமிடத்திற்கு முன்னதாகவே விமானம் மேற்குநோக்கி பயணிப்பதற்கான பாதை கம்பியூட்டரில் மாற்றி அமைக்கப்பட்டு உள்ளது. இந்நிலையில், மலேசிய விமானம் தொடர்பில் இருந்து துண்டிக்கப்படுவதற்கு முன்பாக விமானிகள் அறையில் இருந்து, அனைத்தும் சரியாக உள்ளது. இரவு வணக்கம் என்று பேசியது உதவி விமானி பாரீக் அப்துல் ஹமீது என்று புதிய தகவல் தெரிவிக்கின்றது.

★ மாயமான விமானம் குறித்து தேடுதல் வேட்டையில் 2.24 கடல் மைல் தூரத்தில் ஆஸ்திரேலியா கடல். பகுதியில் தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

★ இந்தோனேஷியாவில் இருந்து தெற்கு இந்திய பெருங்கடல் வரை தேடப்படுகிறது. விமானம் விபத்துள்ளாகி இந்திய பெருங்கடலில் விழுந்து உள்ளதா எனவும் தேடப்படுகிறது. ஆனால் அவ்வாறு இருந்தால் விமானத்தை தேடுவது எனபது கடினமான காரியம். இந்திய பெருங்கடலின் மொத்த பரப்பளவு 73,556,000 சதுர கிலோமீற்றர் ஆகும்.

★ விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது வித்தியம் பேட்டரியில் இருந்து தீப்பொறி ஏற்பட்டு அது விமானத்தில் ஏற்றப்பட்டிருந்த சரக்கு பகுதியில் பிடித்து விபத்து இருக்கலாம்.

★ விமானத்தில் பயணம் செய்த நபர் விமானியின் ஹொக்பிட் எனக் கூறப்படுகிற விமானியின் அறைக்கு சென்று கடத்தலில் ஈடுபட்டிருக்கலாம். ஒரு வேளை கடத்தி இருந்தால் அவர்களின் கோரிக்கை என்ன எனத் தெரியவில்லை.

★ ஒருவேளை விமானம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டிருக்கலாம். அவ்வாறு நடந்திருந்தால் 35 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து விழுந்த விமானத்தின் உடைந்த பாகங்கள் மற்றும் எரிபொருள் துகள்கள் கடலில் மிதந்திருக்கவேண்டும். ஆனால் அதற் கான அறிகுறி எதுவும் இல்லை.

★ 2ஆவது உலகப் போரின்போது அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் உருவாக்கப்பட்ட இரகசிய ஓடுதளத்தில் அது தரை இறக்கப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

★ சமீபத்தில் மலேசிய எதிர்க்கட்சி தலைவர் அன்வர் இப்ராகிம் ஓரினச் சேர்க்கை புகார் காரணமாக ஜெயிலில் அடைக்கப்பட்டார். அதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக இப்ராஹிமின் தீவிர ஆதர்வாளரான விமானத்தின் கப்டன் ஷகாரி அகமது ஷா (53) விமானத்துடன் சென்று தற்கொலை செய்திருக்கலாம்.

★ சீனாவைச் சேர்ந்த விமான என்ஜினியர் மொகுத் கைருல் அமிர் சலாமத் (29) என்பவர் பயணம் செய்துள்ளார். அவர் தொழில்நுட்பம் தெரிந்தவர். அவர் விமான கம்பியூட்டரில் விமானப் பாதையை மாற்றி நாசவேலையில் ஈடுபட்டிருக்கலாம்.

★ அமெரிக்காவின் இரகசிய கடற்படை தளம் இந்திய பெருங்கடலின் டிகோ கார்சியா தீவில் உள்ளது. அமெரிக்கா அந்த விமானத்தை திசை திருப்பி அங்கு மறைத்து வைத்திருக்கலாம் என ரஷ்யாவின் உளவுத்துறை தெரிவித்துள்ளது. ஆனால் அதை அமெரிக்கா திட்டவட்டமாக மறுத்துள்ளது.

★ ராடர் கருவியில் தெரியாமல் இருக்கும்வகையில் விமானத்தை தாழ்வாக பறக்க வைத்து ஆப்கானிஸ்தானுக்கு தலிபான் தீவிரவாதிகள் கடத்தியிருக்கலாம். அமெரிக்காவில் நடந்த தாக்குதல் போன்று இந்தியாவில் அரங்கேற்ற விமானம் கடத்தப்பட்டிருக்கலாம் என அந்நாட்டு முன்னாள் மந்திரி ஸ்ட்ரோப் தல்போ தெரிவித்து இருந்தார். அதை இந்திய உளவுத்துறை மறுத்துள்ளது.

★ ஒருவேளை மனிதர்கள் பற்றி அறிய விண்கலன்மூலம் இந்த விமானத்தை வேற்றுக்கிரகவாசிகள் கடத்தி சென்றிருக் கலாம்??? (இந்த ஊகம் விஞ்ஞானப் புனைகதை எழுத்தாளர்களைக் கவரும்)

★ மலேசிய விமானம் பறந்த அதே வேளையில் இந்தியா, பாகிஸ்தான்

தொகுப்பு: வேணு கிருஷ்ணா





(கீழே உள்ள படம் அவ்விமானம் திசைதிரும்பிய பாதையைக் காட்டுகிறது)

### Saturday 22, March, 2014 நிலைவரம்

### மலேசிய விமான ஹொக்பிட் (Cockpit) ரேடியோவின் 54 நிமிட உரையாடல்...

மாயமாக மறைந்த மலேசியன் ஏர்லைன்ஸ் விமானத்தின் ஹொக்பிட்டில் இருந்து தரைக்கு வந்த ரேடியோ உரையாடல்களில், அந்த விமானம் மாயமாக மறையப்போவது குறித்த எவ்வித அறிகுறியும் இல்லை என்று தற்போது

# ஏமாறும் தமிழர்களும் ஏமாற்றும் சர்வதேசமும்



அளவெட்டி ப.உதயகுமார்

தமிழர் தரப்பின் உரிமைக்கான போராட்டம் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை அரசியல்வாதிகள் பொய்யிலேயே பிறந்து, பொய்யிலேயே வாழ்பவர்களாகவே உள்ளனர். தமிழர்களின் பிரச்சினைகளை மையப் பொருளாக்கி, சர்வதேசத்தின் கண்களைத் திறந்துள்ளன. சர்வதேசத்தின் பார்வை இலங்கைமீது திரும்பியுள்ளது. பிரச்சினை தீரப்போகின்றது என்ற மாயையை உருவாக்கி பிரதேச-சபைகள், மாகாண சபை, பாராளுமன்றம் ஆகிய தேர்தல்களில் வெற்றிவாகை சூடிய கூட்டமைப்பு, சர்வதேசத்தை இங்கு கூட்டிவந்து தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைத்துவிட்டார்களா??

இதுஇவ்வாறிருக்க, இவ்வாண்டு ஜெனிவாவின் பிடியிலிருந்து இலங்கை ஒருபோதும் தப்பாது. இலங்கையின் மரணம் நிச்சயம், இலங்கைப் பிரச்சினையை ஜெனீவா தீர்த்து வைக்கப்போகின்றது. எங்கள் பிரச்சினையை அமெரிக்கா புரிந்துகொண்டுள்ளது என்றெல்லாம் ஆறுமாதங்களுக்கு முன்பாகவே கூட்டமைப்பினர் முழங்கத் தொடங்கினார்கள். இவர்கள் சொல்வதெல் லாவற்றையும் வேதவாக்கு என்று நம்பிய, இவர்களின் மகுடிக்கு ஆடும் ஊதுகுழல் யாழ்ப்பாண பத்திரிகைகளும் முன்பக்கச் செய்தியாக்கி பத்திரிகைகளை விற்றுக் காசாக்கிவிட்டது.

ஆனால், சர்வதேசம் ஏமாற்றி விட்டது என்று கருணாநிதி-முதல் தமிழ் தலைவர்கள்வரை நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்கள். ஆனால் மாகாண சபை உறுப்பினரான அனந்தி கூட்டமைப்பும் சுமந்திரனும் தன்னை ஏமாற்றி விட்டது என்று புலம்பித்திரிகின்றனர். யாரை யார் ஏமாற்றுகின்றார்கள் என்பது எவருக்கும் இன்னும் விளங்கவில்லைப் போல் தெரிகின்றது.

சர்வதேசம், சர்வதேசம் என்று கூட்டமைப்பு காலம் காலமாக ஏமாற்றிவருகின்றார்கள் என்பது உலகறிந்த விடயம். இப்போது ஜெனிவா பிரச்சினை முடிந்துவிட்டது இனி என்ன துருப்புச் சீட்டினை இவர்கள் பயன்படுத்தப் போகின்றார்கள்?? கூட்டமைப்பினரின் கோமாளித்தனங்களை ஒருபுறம் வைத்துவிட்டு இவர்கள் நம்பும் நம்பிக் கொண்டிருக்கும் சர்வதேசம், மற்றும் அண்டை அயல்நாடுகளின் தலைவர்கள் பற்றியும் அலசி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதலில் இந்தியாவை எடுத்துக் கொண்டால் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசு தமிழர்கள்மீது கட்டவிழ்த்துவிட்ட யுத்தம் மற்றும் பொருளாதாரத்தடை என்பனவற்றைப் பார்த்து அன்று நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான யுத்தத்தையே கடுமையான தொனியிலே விளங்கிக் கொண்ட இந்திய அரசு, இலங்கை அரசின் வான் பரப்பு அனுமதி ஏதுமின்றி தமிழர் தாயகப் பகுதிகளுக்குள் ஊடுருவி பொட்டலங்களையும் அத்தியாவசியப் பொருட்களையும் போட்டது.

இந்தியாவின் இந்த அதிரடியால் ஆட்டம் கண்ட இலங்கை அரசு இந்தியாவுடன் இணைந்து இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவாக வழி கிடைத்தது. அன்று உருவான இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழர் பிரச்சினைக்கு அருமையான தீர்வாக இருந்தது. ஆனால், தமிழர் தரப்பு வேண்டாமென்று தனித்தமிழீழமே வேண்டுமென்று அடம்பிடித்தார்கள். காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் வடக்கும், கிழக்கும் இணைந்து இருந்தது. ஆனால் இன்று இரண்டு மாகாணமும் பிரிந்து, காணி, பொலிஸ் இல்லாத அம்மணமான மாகாண சபையை கூட்டமைப்பு வைத்துள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழர் தரப்புக்களால் தூக்கி எறியப்பட்டு, இந்தியாவின் பிரதமர் ராஜீவ்காந்தியும் கொல்லப்பட்டு, நிலைமை அலங்கோலமாகியது! இதெல்லாம் பழங்கதை. ஆனால் இனி வரப்போகும் காட்சி, புதுக் கதை.

அன்று சாதாரணமாக நடைபெற்ற யுத்தத்தைக் கண்டு பொறுத்துக் கொள்ளாத இந்திய அரசு, ராஜீவ் காந்தியின் இழப்புக்குப் பின்னர்- நடைபெற்ற இறுதி யுத்தம், மற்றும் முள்ளிவாய்க்கால் யுத்தம் என்பன நடைபெற்று தமிழர் தரப்பின் பகுதிகளில் இரத்த ஆறு ஓடிய போது, குடும்பம், குடும்பமாக தமிழர்கள் வகை, தொகையின்றி செத்தபோது, செத்துக் கொண்டிருந்த போது இந்திய அரசு என்ன செய்தது??, இலங்கை அரசுக்கு கடும் அழுத்தம் கொடுத்தார்களா?? அல்லது யுத்தத்தை நிறுத்துங்கள் என்று சத்தம் போட்டார்களா?? எதுவுமே நடக்கவில்லை. மாறாக விடுதலைப் புலிகள் வளரக்கூடாது என்பதற்காக ஆயுதம்கொடுத்து, பயிற்சிகொடுத்து இலங்கை அரசுக்கு ஊக்கம் கொடுத்தது.

இதுஇவ்வாறிருக்க, ராஜீவ் காந்தியின் கொலையிலே சம்பந்தப் பட்டவர்களின் மரண தண்டனையிலிருந்து விடுவித்து தீர்ப்பு வழங்கியது உச்ச நீதிமன்றம். தமிழக முதல்வர் இவர்கள் 7 பேரையும் விடுதலை செய்ய முயன்றபோது இந்திய அரசும் காங்கிரசும் கொதித்தெழுந்தது. இப்போது இவர்களின் விடுதலை கேள்விக்குறியாகியுள்ளது.

ஏழுபேரை விடுதலைசெய்ய மறுக்கும் இந்தியா தமிழர் பிரச்சினையைத் தீர்க்க ஒருபோதும் முன்வராது. எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பினரே இனியும் இந்தியா என்றுசொல்லி பம்மாத்து அரசியல் செய்யாதீர்கள்??

தமிழக முதல்வர் ஜெயலலிதா அம்மையாரைப் பொறுத்தமட்டில் இந்திய தேசத்தின் பிரதமராகிவிட வேண்டும் என்பது அவருடைய நீண்டநாள் ஆசை. அதற்கான தருணம் இது. அடுத்த மாதம் அங்கே தேர்தல் நடைபெற உள்ள நிலையில்தான் கைதிகள் விடுதலையை முன்னெடுத்தார். எதிர்ப்பினை கண்டு அந்த திட்டத்தையே மறந்துவிட்டார். இவர்தான் தமிழ் நாட்டில் தடாச் சட்டத்தை கொண்டுவந்து ஒரு கலக்கு கலக்கிய அம்மணி.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை கையிலெடுத்தால் போதும் சுலபமாக வென்றுவிடலாம் என்பதாலேயே அம்மணி துள்ளிக் குதித்தவர்.

ஆக, அரசியல் தலைவர்களுக்கு தேர்தலில் செல்வாக்கு கிடைக்கும் துருப்புச் சீட்டு தமிழர் பிரச்சினை தான் என்பதனை உலகமே புரிந்து வைத்துள்ளது.

தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி ஐயாவும் கண்டபடி அறிக்கை விட்டுக்கொண்டிருந்தார். ஜெனிவா தமிழர்களை ஏமாற்றி விட்டதாக இப்போது சொல்கின்றார். இவரும் தமிழர்களுக்காக பரிந்து பேசுவது சரிந்து போயுள்ள, விழுந்து கிடக்கும் தன்னுடைய கட்சியை தூக்கி நிறுத்திச் சட்டமன்றத் தேர்தலில் வெல்லத் துடிக்கின்றார்! இவர் முதல்வர் பதவியில் இருக்கும்போது தமிழர்களுக்காக என்ன செய்தவர்?? எல்லாம் அரசியல் நாடகம்தான்.

பிரித்தானியப் பிரதமர் கமரூன் வந்தார். யாழ்ப்பாணம் வந்த அவர் சுன்னாகம் பகுதி இடம்பெயர்ந்தோர் இல்லமொன்றுக்கு சென்றார். மக்களைச் சந்தித்தார். குறைபாடு-களை கேட்டார். அதையெல்லாம், விழுந்து விழுந்து வீடியோ பிடித்தார்கள் - எடுத்தார்கள். எங்கடை ஆக்களில்லை. கமரூனின் ஆட்கள். இதையெல்லாம் பிரிட்டனில் போட்டுக்காட்டி தேர்தலில் வெல்ல அவர் துடிக்கின்றார்.

அதேவேளை அன்றைய தினம் யாழ்.பொது நூலக வாசலில் ஆயிரக்கணக்கான காணாமல் போனவர்களின் உறவுகள் கூடியிருந்து கமரூனை சந்திக்க துடித்தனர். ஆனால் கூட்டமைப்பினர் மட்டும் அவரை சந்தித்துப் பேசினார்கள். மக்களைச் சந்திக்க பிரதமர் விரும்பவேயில்லை. அதனால் அவர் முன்கதவால் தப்பியோடினார். கொழும்பு திரும்பியதும் இலங்கை அரசை வற்புறுத்துவேன் - பிரச்சினை தீரப்பாடுபடுவேன் என்று பகட்டாகச் சொன்னவர் - இன்று இதையெல்லாம் மறந்துவிட்டார். ஆக யாழ்.நூலக வாசலில் நின்ற நூற்றுக்கணக்கானவர்களின் குறையைக் கேட்கமுடியாமல் ஓடியவர். இலட்சக்கணக்கானோரின் பிரச்சினையை அவர் தீர்ப்பாரா??, இவர்களையெல்லாம் நம்புகின்ற, நம்பிவருகின்ற கூட்டமைப்பினர், இவர்கள் சர்வதேச சமூகம் என்று கதையளந்து ஏமாற்றி வருகின்றார்கள்.

கூட்டமைப்பினரின் நம்பிக்கையான இன்னொரு சர்வதேசம் அமெரிக்கா. இந்த வருடமும் ஜெனிவாவில் பிரச்சினையைத் தூக்கிக் கொண்டு வந்தது. அமெரிக்காதான். இந்த அமெரிக்கா, இலங்கைத் தமிழர்கள்மீது அக்கறை கொண்டிருந்தால் முள்ளிவாய்க்கால் யுத்தம் நடைபெற்று, மிகப்பெரிய மனித அவலங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை இலங்கை அரசை கட்டுப்படுத்தி தமிழ் மக்களைக் காப்பாற்றியிருக்கவேண்டும்? ஆனால் அமெரிக்கா அதனை செய்ததா??

அமெரிக்கா பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழிக்கவேண்டும் என்று விரும்பியது - அதன் பயனாக விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு திரைமறைவில் ஒத்துழைப்பு வழங்கியது. அதேவேளை அமெரிக்கா தன்னை மீறி எவரும் செயற்படக்கூடாது என்பதிலேயே அக்கறை உடைய நாடு. அதனால் தான் யுத்தம் நடைபெறும் நாடுகளில் தன் மூக்கை நுழைத்து பிரச்சினையைத் தீர்த்து வைத்தும் வருகின்றது.

இலங்கையில் சீனா மற்றும் இந்தியாவின் ஆதிக்கம் உண்டாகுமானால் தனக்கு பாதிப்பு வருமா?? என்ற அச்சமும் அமெரிக்காவுக்கு உள்ளது. சீனாவும் - இந்தியாவும் வல்லரசாகுவதை விரும்பாத அமெரிக்கா இலங்கைமீது அழுத்தம்கொடுத்து இலங்கையில் கால்பதிக்க நினைத்திருக்கின்றது. இதுதான் உண்மையே தவிர இலங்கை தமிழர்மீது உண்மையான அக்கறை கிடையாது. இப்படியானவர்கள் எமது நாட்டுக்கு படையெடுத்து வந்து பிரச்சினையைத் தீர்க்கும் என்று கூட்டமைப்பினர் இன்னும் எவ்வளவு காலத்துக்கு சொல்லப் போகின்றார்கள்?

இவ்விடத்தில் கூட்டமைப்பினரின் இன்னொரு தில்லுமுல்லுகளையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய தேவை உள்ளது. அதாவது தற்போது ஜெனிவாவுக்கு தமிழர் தரப்பின் பிரதிநிதிகளாகச் சென்ற தேசியப் பட்டியல் எம்.பி. சுமந்திரன் - மாகாணசபை அம்மணி அனந்தி ஆகியோர் அங்கேயே அடிபட்டுக் கொண்டனர்.

சுமந்திரன்மீது அனந்தி பல குற்றச்சாட்டுக்களை முன் வைத்துள்ளார். தன்னை அங்கு பேசவேண்டாம் என்றும் அனந்தி புலிகளின் முக்கிய தளபதியின் மனைவி என்பதால் புலி முத்திரை குத்தப்படும் என்றும் தேசியப் பட்டியல் மறித்துள்ளதாக பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டி உள்ளார்.

அனந்தி புலிகள் தளபதியின் மனைவி என்பது அமெரிக்காவுக்குப் போனதன் பிற்பாடுதான் கூட்டமைப்புக்குத் தெரியுமா?? யாரை யார் ஏமாற்றுகின்றார்கள். அனந்தியை வைத்து ஜெனிவாத் தீர்மானத்துக்கு வலுச்சேர்க்கவே கூட்டமைப்பு அனந்தியை அனுப்பியது. ஆனால், அங்கே நிலைமை தலைகீழாக மாறும் என்பதை கூட்டமைப்பு முன்கூட்டியே அறியவில்லையா? எல்லாம் முன்கூட்டியே தெரிந்துள்ள இவர்கள் இன்னும் ஏன் மக்களை ஏமாற்றுகின்றார்கள்.

இலங்கைப் பிரச்சினையை இலங்கை அரசுடன் தீர்த்துக் கொள்ள முடியும் என்பது கூட்டமைப்பினருக்கு தெரியாதா??

இதேவேளை இவர்கள் தமிழர்களை ஏமாற்றுவது போதாது என்று கனடாவில் இருந்து பறந்து வந்த ராதிகா எம்.பி.யும் நன்றாக தமிழர்களை ஏமாற்றி தன் வாக்கு வங்கியை நிரப்பவே முன்வந்தார். அதனால்தான் கிளிநொச்சி ஐயாவின் தயவில் மறைந்திருந்துகொண்டு தன்னை இலங்கை அரசு கடத்திவிட்டதாக அறிக்கைவிட்டார். எல்லோரும் ஒரு கணம் பதறிப்போனார்கள். ஆனால், ராதிகா கனடாவில் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிட உள்ளார். அங்கே அவருடைய செல்வாக்கு செல்லாக்காசாகி வருவதை உணர்ந்தவர் இங்கு வந்து செல்வாக்கை உயர்த்தவே கடத்தல் நாடகமாடினார்.

ராதிகா எம்.பி. தன்னுடைய அரசியலின் எதிர்காலத் தேடலுக்கு இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைதான் அவருக்கு துருப்புச் சீட்டாக அமைந்துள்ளது. இந்த நிலை பிரித்தானியா, இந்தியா ஆகிய நாடுகளுக்கும் பரவி கனடாவிலும் கால்பதித்துள்ளது. ஆக, தமிழர்களின் பிரச்சினைக்குத் தாங்கள் பாடுபடுவதாகவும், தமிழர்களின் அனுதாபிகள் போலவும் காட்டிக்கொண்டு தங்களின் வாக்கு வங்கியை நிரப்பிக் கொண்டு தமிழர்களை தொடர்ந்து ஏமாற்றிவருகின்றார்கள்.

மொத்தத்தில் தமிழர்களை நம்பியே இவர்களின் அரசியல் உள்ளது. காலங்காலமாக தமிழர் வைத்து வாக்குத்தேடி தமக்குரிய அரசியலை அவர்கள் அதுதான் கூட்டமைப்பு நம்பிக்கொண்டிருக்கும் சர்வதேசங்கள் செய்கின்றது.

ஒருபுறத்தே கூட்டமைப்பும் - மறுபுறத்தில் சர்வதேசமும் தமிழர்களை ஏமாற்றிப் பிழைப்பு நடத்துகின்றார்கள் - கூட்டமைப்பினரே உங்களுக்கு ஒரு பகிரங்க வேண்டுகோள்.

இனிமேலும் நீங்கள் சர்வதேசம், ஜெனிவா, அமெரிக்கா, இந்தியா என்று கதைவிட வேண்டாம். எங்கள் நாட்டிலுள்ள பிரச்சினையை உள்நாட்டின் அரசுடன் மட்டுமே பேசுங்கள். அதன்மூலமே பிரச்சினையை தீர்க்கமுடியும் நம்புங்கள் - வாக்குப்போட்ட மக்களுக்கு நீங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயலுங்கள் - இல்லையேல் உங்களைத் தூக்கி எறிய தமிழர்கள் தயாராகிவிடுவார்கள் மறந்துவிடாதீர்கள். சர்வதேசமும், தலைமைகளும் எங்கள் பிரச்சினைகளை ஒருபோதும் தீர்த்துவைக்க முன்வரமாட்டார்கள். இதுதான் உண்மை.



சுமந்திரன் மீது அனந்தி பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். தன்னை அங்கு பேசவேண்டாம் என்றும் அனந்தி புலிகளின் முக்கிய தளபதியின் மனைவி என்பதால் புலி முத்திரை குத்தப்படும் என்றும் தேசியப் பட்டியல் மறித்துள்ளதாக பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டி உள்ளார்.

அனந்தி புலிகள் தளபதியின் மனைவி என்பது அமெரிக்காவுக்குப் போனதன் பிற்பாடுதான் கூட்டமைப்புக்குத் தெரியுமா?? யாரை யார் ஏமாற்றுகின்றார்கள். அனந்தியை வைத்து ஜெனிவாத் தீர்மானத்துக்கு வலுச்சேர்க்கவே கூட்டமைப்பு அனந்தியை அனுப்பியது.





# பாப்பா முரசு

**இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**

## மோக்ளி குருவியும் சொண்டி யானையும்

**அந்த** அழகிய அடர்ந்த காட்டில் பருவமழை நன்றாகப் பெய்தது. பயிர்கள் எல்லாம் செழிப்பாக வளர்ந்தன.

அந்தக் காட்டில் மோக்ளி குருவியும், சொண்டி யானையும் நண்பர்களாக இருந்தனர். இருவரும் சேர்ந்து விவசாயம் பார்க்கலாம் என்று சொண்டி யானை, மோக்ளி குருவியிடம் கூறியது.

குருவி, விளைச்சலில் ஆளுக்குப் பாதி எடுத்துக்கொள்ளலாம் என்று கூறியது. ஆனால், சொண்டி யானையோ, வேண்டாம் என்று கூறியது. அந்த சின்னக்குருவியை ஏமாற்றும் நோக்கத் தோடு நாம் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்றுகூறியது.

ஒப்பந்தத்தில் ஆளுக்கு ஓர் உரிமை தரப்பட்டது. பயிரில் எந்தப் பகுதி யாருக்கு என்று தீர்மானிக்கும் உரிமை முதலில் யானைக்கு என்றும், என்ன பயிரிடுவது என்று தீர்மானிக்கும் இரண்டாவது உரிமை குருவிக்கு என்றும் தீர்மானம் ஆயிற்று.



பரிசோதனை தொடங்கியது, "விவசாயம் செய்ய ஆரம்பிப்போம் நண்பா! பயிரில் உனக்கு எந்தப் பகுதிவேண்டும்'' என்று கனிவோடு கேட்டது மோக்ளி குருவி.

சொண்டி யானை விறைப்பாகக் கூறியது, "பயிரின் கீழ்ப்பகுதி எனக்கு, மேல்பகுதி உனக்கு'' என்று தன் முதல் உரிமையை நிலைநாட்டியது.

குருவி சரி என்றது. பயிரைத் தேர்ந் தெடுக்கும் இரண்டாவது உரிமை குருவி யிடம் இருந்தது. குருவி நெல்லைத் தேர்ந்தெடுத்துப் பயிரிட்டது. யானைக்கு இந்தத் தடவை தாளும், குருவிக்கு நெல்மணியும் கிடைத்தது. யானை ஏமாந்தது.

அடுத்த முறை சொண்டி யானை, ஜாக்கிரதையாகச் சொன்னது. "இந்த முறை மேல் பகுதி எனக்கு கீழ்ப்பகுதி உனக்கு''

"சரி, சரி"யென்று குருவி ஒப்புக் கொண்டது. குருவி இந்த முறை கடலை பயிரிட்டது. குருவிக்குக் கடலை கிடைத்தது. யானைக்கு செடியின் இலைகள் கிடைத்தன. ஏமாற்றத் தால் யானை தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டது.

அடுத்த முறை குருவி, யானையிடம் பயிரில் எந்தப் பகுதி வேண்டும் என்று கேட்ட போது, பதில் சொல்ல யானை வெகுநேரம் எடுத்துக்கொண்டது. கடைசியில் "மேல்பகுதி, கீழ்ப்பகுதி இரண்டுமே எனக்கு. நடுப்பகுதி தான் உனக்கு'' என்றது.

இப்போது குருவி சிறிது சிரித்துக்கொண்டே "சரிப்பா! வச்சுக்கோ'' என்றது. இந்த முறை குருவி கரும்பு பயிரிட்டது. யானைக்கு வேரும், தாளும் கிடைத்தன. குருவிக்கு இனிப்பான நடுப்பகுதி. ஆனால், குருவிக்கு நடுப்பகுதியைத் தான் மட்டும் எடுத்துக்கொள்ள மனம் வர வில்லை. பின் சொண்டி யானையைப் பார்த்து இப்படிக் கூறியது-

"நண்பா! இந்த முறையும் உனக்கு ஏமாற்றம்தான். எனக்கு இனிப்பான நடுப்பகுதியை ஏற்றுக் கொள்ள என் மனம் இடம் தரவில்லை. அதுவும் உனக்கு கரும்பு என்றால் உயிர். எனவே இம்முறையும், அடுத்து பயிரிடுவதிலும் ஆளுக்குப் பாதியாகவே பிரித்துக் கொள்ளலாம். ஒப்பந்தம் ஒத்து வராது. இந்தக் கரும்பு விளைச்சலில் நீ பாதி எடுத்துக்கொள். நானும் பாதி எடுத்துக்கொள்கிறேன்.

யானை நினைத்தது. எவ்வளவு சிறிய குருவிக்கு இவ்வளவு பெரிய உள்ளம் இருக்கிறது. இவ்வளவு பெரிய உருவமான எனக்கு எவ்வளவு சின்னப் புத்தி இருந்திருக்கிறது என்று மனதிற்குள் எண்ணி வெட்கித் தலை குனிந்தது. பின் சரியென்று குருவியிடம் ஒப்புக்கொண்டது. கரும்பை ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக்கொண்டன.

பின்னாட்களில் கம்பு, கேழ்வரகு, சோளம் எனப் பல பயிர்களை இட்டு இருவரும் சரிசமமாகப் பிரித்துக்கொண்டு சந்தோஷமாக வாழ்ந்தனர்.

## வாரம் ஒரு திருக்குறள்


### சுற்றந் தழால்



**காக்கை கரவா கரைத்துண்ணும் ஆக்கமும்**
**அன்ன நீ ரார்க்கே உள.**

காக்கை (தனக்குக் கிடைத்ததை) மறைத்து வைக்காமல் சுற்றத்தைக் கூவி அழைத்த உண்ணும்; ஆக்கமும் அத்தகைய இயல்பு உடையவர்க்கே உண்டு.


குறள்:527




### வாசகர் கடிதம்

பத்திரிகைகளில் "வாசகர் கடிதங்கள்'' என்ற பகுதி வெளி வருகிறது அல்லவா? இதை முதன்முதலில் வெளியிட்டது "கொல்கத்தா ஜேர்னல்'' என்ற வாரமிருமுறை வெளியான பத்திரிகைதான். 1878-ஆம் ஆண்டில் இது வெளியானது. பிறகு எல்லா இதழ்களிலும் கடிதங்கள் பகுதி வெளிவரத் தொடங்கியது.

### ரயிலில் தூங்கும் வசதி....



1858-ஆம் ஆண்டில் பயணிகள் ரயிலின் இரு பெட்டிகளில் தூங்கும் வசதி கள் செய்யப்பட்டு பரீட் சார்த்தமாக விடப்பட்டன. ஆனால் ஜோர்ஜ் புல்மன் என்ற அமெரிக்கர்தான் முதன்முதலில் தூங்கும் வசதியைக் கொண்ட ரயில் பெட்டிக்களை உருவாக்கினார். இந்தப் பெட்டிகள் புல்மன் கார் என்று இவர் பெயராலேயே அழைக்கப்பட்டன.



### உலகின் பள்ளமான தெரு.


உலகிலேயே மிகவும் பள்ளமான தெரு நியூசிலாந்து நாட்டில் அமைந்துள்ளது. பால்டின் என்ற நகர்மன்ற உறுப்பினரின் நினைவாக அவரது பெயர் இந்தத் தெருவுக்கு சூட்டப்பட்டுள்ளது. இது 350 மீற்றர் நீளமுள்ளது. இந்தப் பகுதி நிலம் ஏற்றத்தாழ்வாக இருப்பதால் இந்தத் தெரு இவ்வாறு உள்ளது.

### கும்ப கர்ணன் பறவை




பறவைகள் சின்ன சத்தம் கேட்டால்கூட விழித்துக்கொண்டு கூட்டில் இருந்து பாய்ந்தோடிவிடும். ஆனால், ஆஸ்திரேலியாவில் காணப்படும் தவளைவாயன் என்ற பறவை சரியான கும்பகர்ணன். அதைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டாலும் தூக்கம் கலையாது.

### செங்கடலின் சிவப்பு




செங்கடல் சிவப்பாகத் தோன்று வதற்குக் காரணம் அல்கா என்ற சிவப்பு நிறக் கடல் தாவரம்தான்.

### தேள்



நீளமான தேள்களும், சிறிய குட்டித் தேள்களும் மனிதர்களை அதிகம் கொட்டுவதில்லை. நடுத்தர சைஸ் கொண்ட தேள்களே அதிக மாகக் கொட்டுகின்றன. வடக்கு ஆப்பிரிக்காவில் காணப்படும் 'கொளுத்த வால் தேள்' கொட்டினால் மனிதனுக்கு 4 மணி நேரத்தில் மரணம் உறுதி. நாய்க்கு 7 நிமிடம் போதும்.



### முதல் தேர்வு

கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் மனிதன். முதல் தேர்வை எழுதினான். சீனச் சிவில் பணிக்காக இத் தேர்வை அவன் எழுதினான். இப்படி சீனாவே தேர்வு எழுதும் முறையை அறிமுகம் செய்தது.

### பொஸ்பரஸ்


பொஸ்பரஸ் எதன் அடியில் சேமித்து வைக்கப்படுகிறது தெரியுமா? தண்ணீருக்கு அடியில். மஞ்சள் பொஸ்பரத்தை 250 டிகிரி சென்டிகிரேடு அளவு சூடு படுத்தினால் சிவப்பு பொஸ்பரம் கிடைக்கும்.

### செவிட்டு மேகம்...



**வானம்** கறுத்திருந்தது. ஆகாயத்தைப் பார்த்த விவசாயி தன் நண்பரிடம், "இன்று கண்டிப்பாய் மழை வரும்'' என்றார். அந்த வழியே சென்ற மழைக்கு அதிபதியான வருண பகவான் இதைக்கேட்டு கோபம் கொண்டார். "மழைக்கும், காற்றுக்கும் அதிபதியான நான் இருக்கையில், ஒரு சாதாரண விவசாயி அதைத் தீர்மானிக்கலாமா?'' உடனே எல்லா மேகங்களையும் அழைத்து, "மேகங்களே... இன்று மாலை அந்த அகங்காரம் கொண்ட விவசாயி நிலத்தில் மட்டும் மழையைப் பொழிவிக்கக்கூடாது'' என்று கட்டளையிட்டான். அதில் ஒரு செவிட்டு மேகம் அந்த விவசாயி நிலத்தில் மழை பெய்யச் சொல்வதாக நினைத்து, அவ்வாறே மழையைப் பொழிவித்தது. உழவனின் வாக்கு என்றுமே பொய்யாகாது!

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 08.04.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1037 தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 1035

G.சர்வினா,
பழைய நீர்கொழும்பு றோட், வத்தளை.

பரிசுக்குரியவர்: 1035

பாராட்டுக்குரியவர்கள்

01. யோ.சுபாஷினி, சரசாலை தெற்கு, சரசாலை.
02. எம்.கவிந்தா, பம்பைமடு.
03. B.நேத்தன், திருகோணமலை வீதி, கண்டி.
04. H.B.F.றிப்ஹத், பெரிய பள்ளி வீதி, புத்தளம்.
05. ம.செந்துஷா, மாவை கலட்டி, தெல்லிப்பழை.
07. சி.பார்த்தீபன், பிரதான வீதி, சாவகச்சேரி.
08. B.அம்ருதா, உடப்பு, புத்தளம்.

**இனி...**

**நடனத்தை அவள் கற்றுத்தரும் போதே அமீன் அவளிடம் தனக்குப் பிடித்த இடங்களைத் தொட்டுப்பார்க்க அவளும் அனுமதிக்க, அமீனின் கட்டில் இருவரையும் எடை பார்த்தது.**

"என்ன செய்து கொண்டிருக்கிறாய், என் இனிய லெப்டினன்ட்?" என்று கிண்டல் கலந்து அமீன் கேட்ட கேள்விக்கு என்ன பதில்சொல்வது என்று தெரியாமல், கட்டிலில் விரித்த புத்தகம் போலக் கிடந்த ரீனாவை நோக்கினான் மலையமுங்கு. அவள் அவனுக்கு

கம்பாலாவின் புறநகர் பகுதிகளில் இருந்த நியான்ஸா துணி ஆலையில் வாயிற்காப்பாளனாகப் பணியாற்றினான்.

ரீனாவை பார்த்ததுமே அமீனுக்குள் பற்றிக்கொண்டது ஆசை. நீவிவிட்ட குதிரை மாதிரி அவள் நடந்து வந்துபோதே மனதிற்குள் கட்டில் போட்டு அவளை ஆக்கிரமித்துக்கொண்டான்.

நடனத்தை அவள் கற்றுத்தரும் போதே அமீன் அவளிடம் தனக்குப் பிடித்த இடங்களைத் தொட்டுப்பார்க்க அவளும் அனுமதிக்க, அமீனின் கட்டில் இருவரையும் எடை பார்த்தது.

ரீனா புத்திசாலி. அமீனை அளந்து கொண்டு அவனுக்கேற்ப நடந்துகொண்டு

படத்தை வீட்டில் மாட்டி வைத்திருக்கிறான், அத்தனை பற்றுதல்!"

அடுத்த நொடியே அவர்கள் இருவரும் எதிர்பாராத வார்த்தைகளை உதிர்த்தான் அமீன்.

"நாளை முதல் நீ இராணுவத்தில் சேர்கிறாய். மூன்று மாதம் பயிற்சி. பின்னர் உயர்ந்த பதவி தருகிறேன். உன் விசுவாசத்தைக் காட்டு. உனக்கு அதிர்ஷ்டம் உன் சகோதரி ரூபத்தில் வந்திருக்கிறது!" என்றான். இடியாய் நகைத்தான்.

அன்றிலிருந்து ஐந்து மாதத்தில் மலையமுங்குவுக்கு இடி அமீன் ஆட்சிக்கு எதிரானவர்களை கவனிக்கும் பிரிவில் பொறுப்பதிகாரியாக பதவி உயர்வு கிடைத்தது. அவனுக்காகவே அப்பிரிவை புதிதாக உருவாக்கித் தந்தான் அமீன்.

இடி அமீனே பிரமிக்கும்படி விசுவாசத்தையும் கொடூரத்தையும் காண்பித்தான் மலையமுங்கு.

மலையமுங்குவை இடி அமீனை உடனே வரச் சொன்னதற்குக் காரணம், மசாகா நகர மேயர் பிரான்சிஸ்.

பிரான்சிஸ் முன்னாள்



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

உண்மைத் தொடர்...

**அதிர் இடி 31**

கிறக்கம் தரக்கூடியவாறு தன் நாவை அசைத்துக் காட்டினாள். அந்த ரீனாவை அளவெடுத்துக் கொண்டிருக்கிறாயா லெப்டினன்ட்? என்ற அடுத்த கேள்விக்கு மலையமுங்கு ஆச்சரியப் பட்டான்.

இடி அமீன் ஆட்சிக்கு எதிராக நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை கவனிப்பதற்கான பிரிவில் தலைவனான மலையமுங்கு மகாகொடூரன்.

இடி அமீன்கூட அவனது கொடூரத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறான்.

மலையமுங்குமீது இடி அமீனின் பார்வை கிடைத்ததுக்குக் காரணம், அவனது அழகான சகோதரி.

இடி அமீன் உகண்டா அதிபரானதும் உயர்தர விருந்துக் கேளிக்கைகளில் கலந்துகொள்ள வேண்டி ஏற்பட்டது.

அவ்வாறு கலந்துகொள்ளும் போது ஆங்கில நடனம் ஆடத்தெரிந்திருந்தால், பெரும் சீமாட்டிகளின் இடைகளை வளைத்தபடி நடனமாடலாம். ஆடியபடியே தன்னை நாடிவரவும் வைக்கலாமே என்று நினைத்தான் அமீன்.

நடனம் கற்றுக்கொள்ள ஆள்தேடியபோது சிலரைக் கொண்டுவந்து அவன்முன் நிறுத்தினார்கள் உதவியாளர்கள். அத்தனைபேரும் ஆண்கள். அமீனுக்கு மூக்கின்மேல் கோபம்.

"மடையர்களே, நடனத்தை ஆண்களிடம் கற்றுக்கொள்வதில் என்ன சுவாரசியம் இருக்கப் போகிறது, கற்றுக்கொடுக்கவும் வசதியாக நடன ஆசிரியையாகப் பாருங்கள்!" என்றான்.

என்றதும், எங்கும் தேடியதில் கிடைத்தவள்தான் ரீனா! அவளது அண்ணன் மலையமுங்கு அப்போது

கைக்குள் போட்டுக்கொண்டாள். சில புது அனுபவங்களையும் கொடுத்தாள்.

ரீனாவுடன் ஒரு தடவை அவளது சகோதரன் மலையமுங்குவும்கூட வந்திருந்தான். காட்டெருமை மாதிரி இருந்த அவனது தோற்றம்

ஜனாதிபதி ஒபேடேயுடன் இரகசியத் தொடர்பு வைத்திருக்கிறார். எதிர்காலத்தில் ஆட்சிக்கு எதிராக சக்திகளை ஒன்று திரட்டும் திட்டமும் வைத்திருக்கிறார் என்று அமீனுக்கு உளவுப்பிரிவு



அமீனுக்குப் பிடித்திருந்தபோதும், ரீனாவுடன் சேர்ந்துவந்ததால் சந்தேகப்பட்டான்.

"அந்தச் சந்தேகத்துடனேயே ரீனாவின் கண்களை நேராகப் பார்த்தபடி இது?" என்றான்.

"என் சகோதரன், மலையமுங்கு என்ற பதிலுக்கு திருப்தியாகி என்ன வேலை செய்கிறாய்?" என்றான்.

"துணி ஆலையில் வாயிற் காப்பாளன்" என்றாள் ரீனா சற்றுச் சோகமாக.

சட்டென்று மலையமுங்குவிடம் அமீன், "என் ஆட்சி உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்றான்.

அக்கேள்விக்கு ரீனாவே பதில் சொன்னாள்: "உங்கள்

தகவல் கூறியது.

அந்தத் தகவலை ஆராயத்தான் மலையமுங்குவை அழைத்திருந்தான் அமீன்.

பிரான்சிஸ் மக்களால் தெரிவான நகரமேயர். அதனால் கைவைக்கும்போது மக்கள் நம்மீது கோபப்படாத அளவுக்கு கை வைக்கவேண்டும் என்ற அமீன் அதற்குரிய திட்டத்தையும் போட்டுக்கொடுத்தான்.

இரவோடு இரவாக நகர மேயரின் அலுவலகத்தில் கைக்குண்டுகள், துப்பாக்கிகள் ஆகியன மறைத்து வைக்கப்பட்டன.

(தொடரும்)

முரசு

## குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 566

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| | | | 16 | | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | | 34 | 35 | |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய வீடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **08.04. 2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 566
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான வீடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 564- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சி 1 | சு 2 | த் 3 | து 4 | ம் 5 | வ 6 |
| த் 7 | ரு 8 | தி 9 | வி 10 | | சீ 12 |
| தா 13 | மி 14 | ர 15 | ம் 16 | | க 18 |
| ந் 19 | | ம் 21 | த 22 | த 23 | ரி 24 |
| த 25 | | ரி 27 | | சி 29 | ப் 30 |
| ம் 31 | த 32 | ச 33 | | ரி 35 | பு 36 |

**இடமிருந்து வலம்**

01. சொற்கருத்து. வார்த்தை முகாந்திரம். (குழம்பியுள்ளது)
07. பெண். (திரும்பியுள்ளது)
11. அடங்கல். வயிறு. (திரும்பியுள்ளது)
19. ஒரு வகை தோசை.
27. கணவன். கொழுநன்.
31. லாயம். கொட்டில். (திரும்பியுள்ளது)
34. பொய். மது. (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. இதன் தண்டு நார்ச்சத்து நிறைந்தது.
02. கல. சிந்தி.
03. எலி. பெருச்சாளி. (திரும்பியுள்ளது)
05. மடமைத்தன்மையுள்ளவள்.
06. நாம் சாப்பிடும்போது நம்கால்களை மடக்கி சுக ஆசனத்தில் இருந்து சாப்பிடுவதை இப்படி அழைப்பர். (குழம்பியுள்ளது)
16. தினசரி இந்தப் பழத்தில் ஒன்றை உண்பதன் மூலம் வைத்தியர்களை நம் அருகில் நெருங்கவிடாமல் வைத்திருக்கலாம்.
19. இது. ஒரு மனிதனின் நேர்மையீனத்தை வெளிப்படுத்தும்.
21. ஒரு சாரியையுருபு.
23. கூற. சொல்ல.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 564 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

**எம்.எம்.அஷ்மிதா, பிரதான வீதி, நுவரெலியா.**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. எம்.சாமிநாதன், கடற்கரை வீதி, மன்னார்.
02. ஆர்.ரீனா, நெல்சன் பிளேஸ், கொழும்பு -06.
03. டி.வதனிகா, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
04. தா.அபிராமி, மாசார், பளை.
05. றொ.சைந்தன், தும்பளை, பருத்தித்துறை.
06. தி.யசோதை, குருநகர், யாழ்ப்பாணம்.
07. க.சிந்துஜன், நல்லூர், யாழ்ப்பாணம்.
08. இ.ராணிமலர், கொடிகாமம் வீதி, புலோலி.
09. எஸ்.சுப்பிரமணியம், ரெட்பானா, விசுவமடு.



கோச்சடையான்



பள்ளிக்கூடம் போகலாமே

# அதிக தொகைக்கு வெளிநாட்டு உரிமம்!

பாண்டிய நாடு படத்தின் வெற்றியை அடுத்து விஷாலின் 'நான் சிவப்பு மனிதன் படத்திற்கு பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. வரும் ஏப்ரல் 11ஆம் திகதி உறுதியாக ரிலீஸாகும் எனப் படக்குழுவினர் தரப்பில் இருந்து உறுதியான தகவல்கள் வெளியாகியுள்ளன.

நான் சிகப்பு மனிதன் படத்தின் வெளிநாட்டு உரிமையை யுனிட்டைட் எக்ஸ்போர்ட்ஸ் என்ற நிறுவனம் உரிமம் பெற்றுள்ளது. இந்தியா தவிர உலகம்முழுவதும் இந்த நிறுவனம் 'நான் சிவப்பு மனிதன்' படத்தை அதிக அளவிலான தியேட்டர்களில் ரிலீஸ் செய்ய முடிவெடுத்துள்ளது. இதுவரை போகாத மிகப்பெரிய தொகைக்கு வெளிநாட்டு உரிமம் விற்பனை ஆகியுள்ளதாகவும், விஷால் போட்ட முதலீட்டின் பெரும் பகுதி இந்த வெளிநாட்டு உரிமத்திலேயே வந்துவிட்டதாகவும் கூறப்படு கிறது. இதனால் விஷால் மிகுந்த உற்சாகத்தில் உள்ளார். விஷால் - திரு இணையும் மூன்றாவது படம் என்பதால் இந்த படத்திற்கு ரசி கர் களிடையே பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டு ள்ளது. ஊடகங் களும் படத்தை குறித்து பபரப்பான செய்தி களை வெளி யிட்டு வருவ தால் ரசிகர்கள் ஆர்வம் மிகுதியா வதாக கூறப்படு கிறது.



அஜீத், தமன்னா மற்றும் பலர் நடித்த 'வீரம்' தமிழில் மாபெரும் வெற்றி பெற்றது. இந்த படத்தின் தெலுங்கு டப்பிங் Veerudokkade என்ற படம் ஆந்திராவில் இன்று ரிலீஸ் ஆகிறது. இந்த படத்திற்காக அதிக-ளவில் தியேட்டர்கள் புக் ஆகியுள்ளதாக ஆந்திராவில் இருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

# திருப்தியடைந்த தயாரிப்பாளர் திருப்தியடைந்தார்!

மேலும் இந்த படத்தை குறித்து சில நாட்களுக்கு முன் எழுந்த ஒரு கிசுகிசு தமன்னாவை அதிர்ச்சியடைய செய்துள்ளது. இப்படத்தின் தெலுங்கு டப்பிங் பாடல் வெளியீட்டு விழாவுக்கு வருமாறு தமன்னாவை தயாரிப்பு தரப்பு அழைத்தபோது, தனக்கு ரூ.15 லட்சம் கொடுத்தால் மட்டுமே வரமுடியும் என்று டிமாண்ட் செய்ததாக கூறப்படுகிறது.

இதனால் கடும் கோபம் அடைந்த அந்த தயாரிப்பாளர். உடனடியாக தயாரிப்பு சங்கத்தை கூட்டி, தமன்னாவை இனிமேல் எந்த தயாரிப்பாளரும் ஒப்பந்தம் செய்யக்கூடாது என்று தடை போட்டாராம்.

அந்த தயாரிப்பாளர்மீது மிகுந்த மரியாதை வைத்துள்ள தெலுங்கு படத்தயாரிப்பாளர்கள் உடனே அவருக்குப் பேச்சுக்கு கட்டுப்படு. இனி தங்கள் படங்களில் தமன்னாவை புக் செய்யமாட்டோம் என்று உறுதியளித்துள்ளார்கள்.

இந்த விஷயத்தை கேள்விப்பட்ட தமன்னா அதிர்ச்சியாகி, பின்னர் தயாரிப்பாளரின் கெஸ்ட் ஹவுஸுக்கு சென்று அவரை மணிக்கணிக்கில் தனிமையில் சமாதானப்படுத்தியதாக கூறப்படுகிறது. தமன்னாவில் சமாதானத்தில் திருப்தி அடைந்த தயாரிப்பாளர் தற்போது தடையை நீக்கிவிட்டார் எனக் கூறப்படுகிறது.



கண்ணுக்குள்

# சிவப்பு விளக்கு பிரதேச அனுபவம்

ஜே.எஸ்.கே பிலிம் கார்ப்பரேஷன் நிறுவனம் தயாரிக்கும் புதிய திரைப்படத்தின் பெயர் 'சிவப்பு எனக்கு பிடிக்கும்'. சிவப்பு விளக்கு பகுதியில் வாழும் பாலியல் தொழில் செய்யும் பெண்களின் உணர்ச்சிகரமான கதையை இந்த படம் விளக்குகிறது. சமீபத்தில் இந்த படத்தின் பத்திரிகையாளர்கள் சந்திப்பு சென்னை பிரசாத் லேப்பில் நடந்தது.

இந்த படத்தில் சிங்கப்பூர்ரை சேர்ந்த தமிழர் ஒருவர் இசையமைப்பாளராக அறிமுகம் ஆகிறார். அவரது பெயர் சிவா சரவணன். இவர் டிரம்ஸ் சிவமணியிடம் உதவியாளராக இருந்தவர். மேலும் விக்ரம் பிரபு நடிக்கும் அரிமா நம்பி படத்தின் இசையமைப்பாளரும் இவர்தான். மேலும் தற்போது ஸ்ரீநாத் ராமலிங்கம் இயக்கும் புதிய படத்திற்கும் இசையமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். சிங்கப்பூரில் சிவப்பு விளக்கு பகுதியில் வாழும் பெண்களின் வாழ்க்கையை தான் நேரில் பார்த்துள்ளதாகவும், அவர்கள்பட்ட துன்பத்தை நேரில் பார்த்ததால், இந்த படத்திற்கு என்னால் உணர்ச்சிகரமான இசையை கொடுக்க முடிந்தது என சிவா சரவணன் நேற்று செய்தியாளர்களிடம் கூறினார். இந்த படம் அடுத்த மாதம் ரிலீஸ் ஆகிறது.



ஈரோடு 27KM

வருவதாகவும் ...
... மொ...

# சமந்தா... அதிர்...

சூர்யா நடிக்கும் 'அஞ்ச...
செய்திகள் கசிந்தன. இது...
நடித்தது இல்லை. ஆனால்...
விடும் என்று கூறப்படுகிறது...
சமந்தாவின் கிளாமரான அ...
இதை பார்த்த ம...
தங்கள் படத்தில் சமந்தா ...
நடிக்...




## லிங்குசாமி கைகளில் புரளும் கோடிகள்!

ஒரே சமயத்தில் கமல்ஹாசனின் உத்தமவில்லன், சூர்யாவின் அஞ்சான், மற்றும் விஜய் சேதுபதி, பாலாஜி சக்திவேல், விஜய் மில்டன் உட்பட பல படங்களை தயாரித்து வருகிறார் லிங்குசாமி. ஒரு நேரத்தில் ஒரு படம் தயாரிப்பதே ஒரு தயாரிப்பாளருக்கு பெரிய விஷயம்.

அதுவும் பெரிய ஹீரோக்களை வைத்து படமெடுக்கும் தயாரிப்பாளர்கள் படத்தை முடிக்கும் முன்னர் கடுமையாக நிதி நெருக்கடியை சந்திப்பார்கள். ஆனால் ஒரே தயாரிப்பாளர் ஒரே நேரத்தில் எப்படி இத்தனை பெரிய மற்றும் சிறிய பட்ஜெட் படங்களை தயாரிக்கின்றார் என்பதே இப்போதைய கொலிவூட்டின் உச்சபட்ச டாக்.

இதுகுறித்து கொலிவூட்டில் பலவித கிசுகிசுக்கள் கசிந்துவருகிறது. மு.க. அழகிரியின் மகன் துரை தயாநிதி லிங்குசாமிக்கு சுமார் 200கோடி ரூபாய் வட்டிக்கு பணம்கொடுத்து வைத்திருப்பதாகவும், அந்த பணத்தை வைத்துத் தான் லிங்குசாமி இத்தனை படங்களையும் தயாரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், இன்னொரு தரப்பினரோ மதுரை அன்புவிடம் மொத்தமாக 50 கோடிக்கும் மேல் லிங்குசாமி கடன்வாங்கி ஒவ்வொரு மாதமும் கரெக்டாக வட்டிகொடுத்து வருவதாகவும் கூறுகின்றனர். இந்த இரண்டு கிசுகிசுக்களும் கொலிவூட்டை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.







## தனிமையில் இதழ் கடித்தார் இலியானா!

பொலிவூட் படத்தில் அறிமுகமான நடிகர் வருண் தவான், அடுத்தாக நடிக்கும் படம் Main Tera Hero இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக பிரபல நடிகை இலியானா நடிக்கிறார்.

தமிழ், தெலுங்கு, இந்தி என மூன்று மொழிகளில் பிரபலம் அடைந்த இலியானா, புதுமுக நடிகருடன் நடிக்க முதலில் தயங்கியதாகவும், ஆனால் படத்தில் இலியானாவின் கேரக்டர் மிகவும் சிறப்பாக இருந்ததால் இந்த படத்தில் நடிக்க அவர் ஒப்புக்கொண்டதாகவும் தெரிகிறது.

சமீபத்தில் இந்த படத்திற்காக ஒரு முத்தக்காட்சி மும்பையில் உள்ள ஒரு ஸ்டூடியோவில் படமாக்கப்பட்டது. ஒரு பிரபல நடிகையுடன் இதழோடு இதழ் பதிக்க தயங்கினார் வருண் தவான். கூச்ச சுபாவத்தோடு நடித்ததால் முத்தக்காட்சி சிறப்பாக அமையவில்லை என இயக்குனர் அதிருப்தி அடைந்தார். பின்னர் இயக்குனர் உட்பட படக்குழுவினர்கள் அனைவரையும் வெளியேற்றிவிட்டு, ஒளிப்பதிவாளரை மட்டும் வைத்துக்கொண்டு லிப் லொக் காட்சியை இலியானாவே இயக்கி படப்பிடிப்பை வெற்றிகரமாக முடித்துள்ளார்.

## கர்ப்பமானார் வித்யாபாலன்

கர்ப்பிணிப் பெண் ஒருவர் காணாமல்போன தனது கணவனை தேடும் கதையம்சம் கொண்ட கஹானி படத்தை இயக்குனர் Sujoy Ghosh பொலிவூட்டில் எடுத்து மிகப்பெரிய வெற்றியை பெற்றார். தற்போது இதே கதையை நயன்தாராவின் நடிப்பில் அனாமிகா என்ற தெலுங்கு படத்தையும், நீ எங்கே என் அன்பே என்ற பெயரில் தமிழ் படத்தையும், சேகர் கம்முல்லா என்பவர் இயக்கிவருகிறார். இந்த படங்கள் கூடிய விரைவில் வெளியாக உள்ளது.

இந்நிலையில் Sujoy Ghosh தனது அடுத்த படத்தில் நடிக்க மீண்டும் வித்யாபாலனை ஒப்பந்தம் செய்தார். இந்த படத்தின் பெயர் Queen என்பதாகும். வீரதீர செயல்புரியும் ராணி ஒருவரின் உண்மைக்கதை. இதில் நடிக்க வித்யாபாலன் வாள்சண்டை, குதிரை சவாரி ஆகியவற்றை கற்றுவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதற்கட்ட படப்பிடிப்பு முடிந்துள்ள நிலையில் திடீரென வித்யாபாலனை இந்த படத்தில் இருந்து நீக்கிவிட்டார் இயக்குனர். காரணம் வித்யாபாலன் தற்போது கர்ப்பமாக உள்ளார். கடந்த 2012ஆம் ஆண்டு தொழிலதிபரை திருமணம் செய்த வித்யாபாலன், குழந்தை பிறப்பை தள்ளி வைத்திருந்தார். ஆனால் எதிர்பாராதவிதமாக திடீரென கர்ப்பமானதால், அந்த கர்ப்பத்தை சினிமா வாய்ப்புக்காக கலைக்க விரும்பாத அவர், இயக்குனரிடம் தன்நிலையை எடுத்துக்கூறி படத்தில் இருந்துவிலகினார்.



## சமந்தாவின் கவர்ச்சியால் அதிர்ந்தார் சித்தார்த்

சூர்யா நடிக்கும் 'அஞ்சான்' படத்தில் சமந்தா படுகிளாமராக நடிப்பதாக செய்திகள் கசிந்தன. இதுவரை சமந்தா தமிழில் மிக அதிகளவில் கிளாமராக நடித்தது இல்லை. ஆனால் அஞ்சான் படம் அந்த சாதனையை முறியடித்து விடும் என்று கூறப்படுகிறது. அதை மெய்ப்பிப்பதுபோல் சமீபத்தில் சமந்தாவின் கிளாமரான அஞ்சான் பட ஸ்டில்கள் வெளியாகின.

இதை பார்த்த மற்ற தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் தங்கள் படத்தில் சமந்தா நீச்சலுடை போன்ற கிளாமரான உடையில் நடிக்கவேண்டும் என கோரிக்கை வைக்க ஆரம்பித்துவிட்டனர். இதனால் அதிர்ச்சி அடைந்த சமந்தா, 'அஞ்சான்' படத்தில் பாடல் காட்சிகளில் மட்டுமே கவர்ச்சி காட்டியுள்ளேன். அதுவும் அந்த ஒரு படத்தில் மட்டும்தான். இனிவரும் படங்களில் கிளாமரை தொடர முடியாது என்று கறாராக கூறிவிட்டாராம். இதற்கு இன்னொரு முக்கிய காரணம், சூர்யாவுடன் படுகிளாமராக நடித்ததை கேள்விப்பட்டு சித்தார்த் அதிர்ச்சி அடைந்ததாக கூறப்படுகிறது.

ஆனால் அஞ்சான் படத்தில் பாடல் காட்சிகள் மட்டுமின்றி சூர்யாவுடன் மிகநெருக்கமான காட்சிகளும் படமாக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. எப்படியும் படம் வெளியானது எது உண்மை என்பது தெரிந்துவிடும். அதுவரை பொறுத்திருக்க வேண்டியதுதான்.



# தேன் கிண்ணம்

## அதிர்ஷ்டம்



எதிர்பார்த்த
எண்ணங்கள்
நிறைவேறாமல்
ஏக்கத்தில் ஏங்கி
துடியாய் துடிக்கும் - (நான்)
என் பிறப்பின்
அதிர்ஷ்டத்தை நினைத்து
என் இரு விழிகள்
தினம் கண்ணீர் மழையில்...

யோ.சறோ,
கரணவாய் மேற்கு.

## போராடுதல்களால் நினைத்தல்



நாட்களின் தொடர்கையில்
என் வாழ்வின் ஒவ்வோர்
விளிம்பும் கண்ணீரால்
நெளிந்து கொண்டிருக்கிறது.
எவ்வளவோ துன்பங்கள்
எமைத் தொடர்ந்தபோதும்
வாழ்வுக் காணல் பற்றிப்
பிடித்துக் கொண்டு
போராடுதல் என்றும்
தொடர்கிறது.

துன்பங்கள்
தூவப்பட்ட நதிகள்
கலைந்து ஓடைகளில்
பிரிந்து கொண்டிருக்கும்
என் வாழ்வின் ஒவ்வொரு
படியல்களும் வளர்ந்து
கொண்டேயிருக்கிறது.
காலக் கட்பின்
கஷ்டப்பட்ட பொழுதுகள்
சிரித்தலில் சிந்தனைகள்
தடைப்பட்டு விடுபட்ட
சிந்தனைகள் தடைப்பட்டு
உள்ளக் கண்ணீர்
சாரை சாரையாக
வழிந்து கொண்டிருக்கிறது.

எது எவ்வாறாயினும்
பரவாயில்லை
நாட்களோடு நான்
போராடி வாழ் நாட்களைத்
தாலாட்டி உணர்வுகளை
உரிமைப்படுத்தி
கொண்டிருக்கின்றேன்.
பொழுதுகள் - இப்பொழுதுதான்
என் பக்கம் மீண்டு
கொண்டிருக்கிறது.
இப்போது சபதமிடுகிறேன்
என் வாழ்வோடு போராட
எவர் வருவீர்!
இவ்வாறு போராடியவையில்
தோற்றுப் போனவர்களே அதிகம்
உங்களுக் கொரு
துக்கமான செய்தி
நான் வாழ்வில் உச்சத்தில்
சென்று கொண்டிருக்கிறேன்.

கிண்ணியா,
ஜிஹாத் ஜபருள் இஸ்லாம்.

## புரிந்துணர்வுதான் காதல்

கண்டதும் வருவது காதல் அல்ல
புரிதலில் வருவதுதான் காதல்
கண்டதும் காதல் சாதலில் முடியும்
புரிதலின் காதலே வாழ்தலில் முடியும்
காதல் என்பது காமம் அல்ல – அன்பு
உணர்வதற்கு மட்டுமே.



தர்சிகா விஜயகுமார்,
யாழ்ப்பாணம்.

## ஈழத்து எழுத்தாளர்கள்



### அகளங்கன் (நா.தர்மராசா)

அகளங்கன் வவுனியா மாவட்டத்தில் பம்பைமடு என்ற சிறுகிராமத்தை பிறப்பிடமாகக்கொண்ட பல்துறை சார்ந்த இலக்கியப்படைப்பாளியாவார். இவரது இயற்பெயர் நா.தர்மராசா. 1970களில் இருந்து எழுத ஆரம்பித்த அகளங்கன் 2005 வரை இலக்கியம், சிறுகதை, ஆய்வு, கவிதை, நாடகம், சிறுவர் பாடல்கள், கட்டுரைகள் உள்ளடங்கலாக முப்பது நூல்களை வெளியிட்டுள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்ற காலத்திலேயே கலை இலக்கியச் செயற்பாடு களில் நாட்டம் ஏற்பட்டது. வில்லுப்பாட்டு, பேச்சு முதலானவற்றிலும் கவிதை எழுதுவதிலும் ஈடுபடத் தொடங்கினார். பின் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் கற்கும் பொழுது கவியரங்குகளில் பங்குபற்றும் வாய்ப்பும் கிட்டியது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கற்ற காலத்தில் கவிதை, சிறுகதை, நாடகம், கட்டுரை, பேச்சு ஆகிய துறைகளில் ஈடுபட்டார்.

கணித விஞ்ஞானத்துறையில் கற்று அத்துறையில் ஆசிரியப்பணி புரிந்தபோதும், சுயமாகவே பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்று, பழந்தமிழ் இலக்கியக் கட்டுரைகளை எழுதத் தொடங்கினார். வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றிலும் நிகழ்ச்சிகளை வழங்கியவர். எழுபதுகளின் பிற்பகுதியிலேயே இவரது மெல்லிசைப் பாடல்கள் வெளிவரத்தொடங்கிவிட்டன. அதில் "சேற்றுவயல் காட்டினிலே" என்ற கிராமிய மெட்டுக் கொண்ட பாடல் புகழ் பெற்ற பாடல். எண்பதுகளின் ஆரம்பத்தில் பல சொற்பொழிவு களை ஆற்றிய இவர், எண்பதுகளின் பிற்பகுதியில் இருந்து ஏராளமான வானொலி நாடகங்களையும் எழுதியுள்ளார். தொண்ணூறுகளின் ஆரம்பத்திலிருந்து கவியரங்கங்கள், கவிதைக் கலச நிகழ்வுகளில் ஏறக்குறைய நூறு நிகழ்ச்சிகள் நடத்தி, இளங்கவிஞர்களது பல கவிதைகளை வானலையில் தவழவிட்டார்.

#### எழுதிய நூல்கள்

இவரின் ஜின்னாவின் "இரட்டைக்காப்பிய ஆய்வு" என்ற நூல் தமிழ்நாட்டு ஆளுநர் பாத்திமா பீபியால் வெளியிடப்பட்டது. மகாகவி பாரதியாரின் சுதந்திரப்பாடல்கள் ஆய்வு நூல் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டது. வாலி ஆய்வு நூல் பட்டப்படிப்பு துணைப் பாடநூலாக பயன்படுகின்றது. ஏற்கெனவே வெளியிடப்பட்ட இவரது 30 நூல்களோடு, - கம்பனில் நான்- கட்டுரைகள், தமிழர்- கட்டுரைகள், ஹபாரதியாரும் பாவையரும் -ஆய்வு ஆகிய மூன்று நூல்கள் அச்சில் உள்ளன, அவற்றை விரைவில் வெளியிடவுள்ளார்.

#### கலை, இலக்கியப்பணிக்கு கிடைத்த கௌரவங்கள்

காவியமாமணி, வவுனியா இந்துமாமன்றம் 1990, தமிழ்மணி இந்துகலாசார அமைச்சு 1993, திருநெறிய தமிழ் வேந்தர், யாழ் திருநெறிய தமிழ்ச்சங்கம் 1995, கவிமாமணி, யாழ் மெய்கண்டார் ஆதீனம் 1997, தமிழறிஞர், கொழும்பு தமிழ்ச் சங்கம் 1998, பல்கலை எழில், வவுனியா நகர சபை 1998, புராணபடன புகழ்தகை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் 1999, புராணபடன வித்தகர், அகில இலங்கை கச்சியப்பர் கழகம் 1999, வாகீசகலாநிதி, கொழும்பு ஐயப்பசுவாமிகள் பீடம் 2001, சிவனருட் செல்வர், சிவபுரம் சிவன் கோவில் 2002

#### விருதுகள்

தேசிய சாகித்திய மண்டல விருது (அன்றில் பறவைகள், நாடக நூல், 1995), வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய மண்டல விருது (இலக்கிய நாடகங்கள், 1994), வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய மண்டல விருது (அகளங்கன் கவிதைகள், 1996), வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் விருது (கலை இலக்கியப் பணிக்காக, 2000)

## என்னைத் தேடி.... உன்னிடம்...

நீதான்
என் இதயம்...
என் உயிருக்கு வீடு.
என் உணர்வுக்கு ஊட்டம்
என் எழுத்துக்கு கரு!
உன் புன்னகை தான்
என்னைப் புதுப்பித்தது
உன் கண்கள் தான்
என்னை...
காதலிக்கச் சொன்னது
உன் வடிவழகு தான்
என் வாலிப நெஞ்சை
கிள்ளி விட்டது!

உன் கனிவு ஒன்று தான்
என்னை...
உணர்ச்சிக் கனவுகளின்
ஒளி வெள்ளத்தை
பாய்ச்சியது!
உன் பார்வைதானே!



ஒன்றை மட்டும்
உணர்ந்து கொள்!
நான்
உன்னைத் தேடி
இனியும் வரமாட்டேன்
என்னைத் தேடித்தான்
உன்னிடம் வருகின்றேன்.

K.வாலேந்திரன், கொள்ளுப்பிட்டி.

## ஏக்கம்



என் மனசு இப்போ
என்னிடம்
இல்லவே இல்லை
அவனிடம் என் காதலை
சொல்லவுமில்லை
கொஞ்ச நாள் அவனைக்
காணவுமில்லை
இது மோகத்தில் வந்த
காதலுமில்லை
நிஜமாகவே காதல் தானா
புரியவேயில்லை
அவனும் இப்படித்தான்
நினைப்பானா
தெரியவேயில்லை.

சி.சிந்துஜா, நெல்லியடி.




பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர்.

**Dr. சி.நவநீதன்**

# மகப்பேற்றின் பின்னர்



குழந்தை பிறந்து சில நாட்களில் தாய்மாருக்கு ஏற்படும் பிரச்சினைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

### 01. குருதிப்போக்கு

குழந்தை கிடைத்தது முதல் இரண்டு நாட்களுக்கு சற்று அதிகமாக குருதி வெளியேறும். குருதிப்போக்கு, அளவில் குறைவடைந்து சிறியளவில் 3-4 கிழமை வரை தொடரலாம். இது சாதாரணமான நிகழ்வே. எனினும் சிலருக்கு அதிகமான குருதிப்போக்கு, வயிற்று நோ, காய்ச்சல் என்பன ஏற்படுகின்றது. இதற்கான காரணம் கருப்பையில் கிருமித்தாக்கம் ஏற்படுவதாகும். இவ்வாறு பிரச்சினைகள் ஏற்படின் வைத்திய ஆலோசனை பெறப்படல் வேண்டும்.

### 02. புண் காயாமை

பிரசவத்தின்போது சிலருக்கு பெண் உறுப்பின் துவாரத்தை பெரிதாக்க, பெண் உறுப்பில் வெட்டி நீக்கல் ஒன்று ஏற்படுத்தப்பட்டு (Episiotomy) பின்னர் குழந்தை பிறந்ததும் அது தைக்கப்படும். இக்காயம் பொதுவில் ஓரிரு கிழமைகளில் காய்ந்துவிடும். இக்காயத்தைத் தைக்கப் பயன்படும் நூல் தானே கரைந்துவிடும் இயல்புடையதாதலால் தையல் வெட்டவேண்டிய அவசியமில்லை. ஆனால் பெண் உறுப்பைக் கழுவும்பொழுது எந்தவித இரசாயனப் பொருட்களோ அல்லது டெற்றோல் (Dettol) போன்றனவையோ பாவிக்கக்கூடாது. ஏனெனில், இவை தையல் விரைவில் கரைந்துவிடுவதால் தையல் பிரியும் ஆபத்துள்ளது. எனவே, புண்ணை மெல்லிய சுடுநீர் அல்லது உப்புக்கலந்த நீரில் கழுவினால் போதுமானது. புண்ணில் கிருமித்தாக்கம் ஏற்பட்டால் கடுமையான வலி, சிதல் போதல், மற்றும் காய்ச்சல் ஏற்படும். இவ்வாறான வேளைகளில் வைத்திய ஆலோசனை பெறல்வேண்டும்.

### 03. சிறுநீர்ப் பாதையில் கிருமித்தாக்கம்

பிரசவத்தின் பின்னர் சிறுநீர்ப்பை பலவீனமடைந்து இருப்பதால் இலகுவில் கிருமித்தொற்று ஏற்படுகிறது. இதனால் சலவாசலில் எரிவும், அடிக்கடி சிறுநீர் கழிதல், இரத்தம் கழித்தல், காய்ச்சல் என்பன ஏற்படலாம்.

பிரசவ காலத்திலும் பின்னரும் போதியளவு நீர் அருந்துவதன்மூலம் இதைத் தவிர்க்கலாம்.

### 04. கர்ப்பகால மன உளைச்சல்

பிரசவத்தின் பின்னர் முதல் 2-3 நாட்களுக்கு சில தாய்மாருக்கு (கிட்டத்தட்ட 50 வீதம்) இனம்புரியாத ஒரு கவலை ஏற்படுகின்றது. இது உடலில் ஏற்படும் சடுதியான ஓமோன்களின் மாற்றத்தினால் ஏற்படுகின்றது. (Post Partun blue). குழந்தை பிறந்த சந்தோசத்தில் இருப்பதற்குப் பதிலாக ஏதோ மனக்கவலையோடும், கலகலப்பின்றியும் காணப்படுவார்கள். இது பொதுவில் 3ஆம் நாளின் பின்னர் மறைந்துவிடும்.

உறவினர்களுடன் சேர்ந்திருப்பதன் மூலமும், குழந்தையுடன் நேரத்தைச் செலவிடுவதன்மூலமும் இதைக் குறைக்க முடியும். வெகு அரிதில் சில தாய்மார்கள் மனம் குழம்பியும் சிலநேரங்களில் மூர்க்கமாகவும் இருப்பார்கள். இவ்வாறான நிலையில் வைத்திய உதவியை நாட வேண்டும்.

### 05. மார்பகங்களில் வீக்கமும், வேதனையும்

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பால் ஒரு மார்பகத்தில் அதிகமாகத் தேங்குவதால் இது ஏற்படும். குழந்தையை வீக்கமடையும் மார்பகத்தில் முதலில் பால் குடிக்க வைப்பதன்மூலமும், பாலைக் கை மூலமாக வெளியேற்றியும் நோவைக் குறைக்கலாம். மெல்லிய சுடுநீர் ஒத்தடம் கொடுப்பதன்மூலமும் பரசிற்றமோல் (பனடோல்) குளிகைகள் இரண்டை எடுப்பதன்மூலமும் வேதனையை ஓரளவு குறைக்கலாம்.

எனினும் காய்ச்சல் அல்லது கடுமையான மார்பக வேதனை இருப்பின் வைத்திய ஆலோசனையை நாடவும். முலைக் காம்பில் வெடிப்பு காணப்படின் அம்மார்பகத்தால் பாலூட்டுவதை சில நாட்களுக்குத் தவிர்க்கவும், பாலைக் கைமூலம் வெளியேற்றவும்.

(தொடரும்...)


தினம்தோறும்
கல்விமுரசு
இணைப்பு

தினமுரசு
நாளிதழ்
ரூ.10/=
மட்டுமே

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...





# லேடிஸ் ஸ்பெஷல்

## பிச்சை எடுத்து ரூ.6.5 கோடி சேர்த்த மூதாட்டி



**பிச்சை** எடுத்து வாழ்ந்த 100 வயது மூதாட்டி மரணம் அடைந்தார். அவர், வீட்டில் கட்டுக்கட்டாக பணம், தங்க நாணயம், நகைகள், வீட்டு பத்திரங்களை சேர்த்துவைத்திருந்தது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சவுதி அரேபியா ஜெட்டா நகரில் வசித்தவர் இஷா. இவருக்கு பார்வை கிடையாது. கடந்த 50 ஆண்டுகளாக தெருவோரங்களில் பிச்சையெடுத்து வந்தார். அவர் திடீரென தனது வீட்டில் இறந்துவிட்டார். வீட்டில் தங்க நாணயங்கள், நகைகள், கட்டுக் கட்டாக பணம், ஜெட்டாவில் உள்ள அல்பலாட் மாவட்டத்தில் 4 வீடுகள் இருப்பதற்கான பத்திரங்களை வைத்துள்ளார்.

வீடு, நகை, ரொக்க பணம் ஆகிய வற்றின் மொத்த மதிப்பு ரூ.6.5 கோடி என அதிகாரிகள் தெரிவித்தனர். இஷா வளர்த்துவந்த அகமது அல் சயீதி என்பவர் கூறியிருப்பதாவது: மூதாட்டிக்கு தாய் மற்றும் சகோதரிகள் இருந்தனர். அவர்களும் பிச்சையெடுத்து வாழ்ந்தனர். அவர்கள் இருவரும் இறந்துவிட்டனர். தவிர உறவினர்கள் யாரும் இல்லை. தாய், சகோதரி சேர்த்துவைத்திருந்த பணம், நகைகளும் இஷாவுக்கு கிடைத்தது. அத்துடன் தான் பிச்சை எடுத்து சேர்த்து வைத்துள்ள பணம், சொத்துக்கள் எல்லாம் ஏழைகளுக்கு வழங்கவேண்டும் என்று இஷா உயில் எழுதிவைத்துள்ளார்.

இதுகுறித்து அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தேன். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றார். இஷாவிடம் ஏராளமான பணம் சேர்ந்துவிட்டதை அறிந்து, பிச்சை எடுக்கும் தொழிலை விட்டுவிடும்படி கூறினேன். அதை அவர் ஏற்கவில்லை. இஷாவுக்கு சொந்தமான 4 கட்டடங்களில் பல குடும்பங்கள் வசிக்கின்றனர். அவர்களிடம் இஷா வாடகை வாங்குவதில்லை. இவ்வாறு அகமது அல் சயீதி கூறினார். இஷா தற்போது இறந்துவிட்டதால், அவருக்கு சொந்தமான கட்டடங்களில் வசிப்பவர்கள் வெளியேற்றப்படுவார்களா என்பது தெரியவில்லை.

## தாய்ப்பால் புகட்டும் பெண்களுக்கு பப்பாளி பழம்




தாய்ப்பால் புகட்டும் பெண்கள் தினமும் பப்பாளி பழம் சாப்பிடவேண்டும். அதன்மூலம் பால் பெருகும். நரம்புவலியால் அவதிப்படுகிறவர்கள் பப்பாளி இலையை கொதித்த நீரில் முக்கியோ, தீயில் சுட்டோ வலியுள்ள பகுதியில் வைத்தால், வலி குறைந்துவிடும்.

பெண்கள் பப்பாளி பழம் சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனென்றால் பெண்களின் உடலுக்கு தேவையான அனைத்து சத்துக்களும் அதில் இருக்கின்றன. குறிப்பிட்டு சொல்ல வேண்டுமானால், பப்பாளி பழம் சாப்பிடுகிறவர்களுக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு குறைவு.

100 கிராம் பப்பாளியில் கிட்டத்தட்ட 2500 இன்டர்நேஷனல் யூனிட் விற்றமின் ஏ சத்து இருக்கிறது. அதனால் பப்பாளி சாப்பிட்டால், பார்வை சக்தி அதிகரிக்கும். பழுத்த பப்பாளியின் தசை பகுதியை எடுத்து பிசைந்து, முகத்தில் பூசி அரை மணிநேரம் வைத்திருந்து முகத்தை கழுவுங்கள். சரும சுருக்கம், படை போன்றவை நீங்கி, முகம் ஜொலிக்கும்.

பப்பாளி பழத்தை ஆண்கள் தினமும் சாப்பிட்டால் அவர்களது தாம்பத்ய சக்தி அதிகரிக்கும் வாய்ப்பு உண்டு. ஓய்வற்ற உழைப்பு, மன அழுத்தம் நிறைந்த வேலை, உடற்பயிற்சியின்மை போன்றவைகளால் கழுத்து வலி, முதுகுவலி, முதுகு சவ்வு தேய்தல் போன்ற பாதிப்புக்களால் நிறையப் பேர் அவதிப்படுகிறார்கள். அந்த பாதிப்புக்களை கட்டுப்படுத்தும் சக்தி, பேப்பைன் என் சைம்க்கு இருக்கிறது. அதனால் வலியும், நோயுமின்றி வாழ விரும்புகின்றவர்கள் பப்பாளி பழத்தை தினமும் சாப்பிடவேண்டும்.

## கருவளையம் போக்கும் கைமருந்து



கண்களில் உள்ள மேக்கப்பை, அது சாதாரண மையாக இருந்தாலுமே, நீக்காமல் தூங்கச் செல்லக் கூடாது. மேக்கப் ரிமூவர் வைத்து, முறையாக அகற்ற வேண்டும். அகற்றாமல்விட்டால், கண்களுக்கடியில் கருவளையங்கள் உருவாகலாம். இரவில் கண்களுக்கான நைட் கிரீம் தடவலாம். அது கண்களின் களைப்பை நீக்கும். கண்களுக்கடியிலான சுருக்கங்கள், கருவளையங்கள், கோடுகளையும் நீக்கும்.

காலையிலும் இரவிலும் வெள்ளரிக்காயை வட்டமாக நறுக்கி, கண்களின் மேல் வைத்துக்கொண்டு 10 நிமிடங்கள் ஓய்வெடுத்தால், கண்களுக்கடியில் வீக்கம் வடியும். கருமை மறையும். கருவளையங்கள் அதிகமாக இருந்தால், அதற்கான முறையான சிகிச்சை அவசியம். பார்லர்களில் அதற்கென்றே பிரத்யேக மசாஜ் செய்யப்படுகிறது. தொடர்ந்து செய்துகொண்டால், முற்றிலும் மறையாவிட்டாலும், ஓரளவு மாற்றம் தெரியும். சிலருக்கு ஸ்ட்ரெஸ்சின் காரணமாக கருவளையங்கள் வரும்.

பன்னீரில் நனைத்துப் பிழிந்த பஞ்சை கண்களின் மேல்வைத்து எடுக்கலாம். புருவங்களின் மேல் விளக்கெண்ணெய் தடவிவந்தால், அவை அடர்த்தி யாகவும் கருமையாகவும் வளரும். கண்களின் அழகு எடுப்பாகத் தெரிய வேண்டுமென்றால் புருவங்களை ஷேப் செய்யவேண்டியது மிக முக்கியம்.

## பெண்களே! இலக்கை நோக்கி செல்லுங்கள்



இன்றைய உலகில் வெற்றிகள் இருக்கும் அளவிற்கு மன அழுத்தமும் இருக்கிறது. அதிலும் குறிப்பாக பெண்களுக்கு வீட்டையும் தொழிலையும் சீராகக் கொண்டு செல்லும் நேரத்தில் இப்பிரச்சினை தலைதூக்கத்தான் செய்கிறது. இதற்கான தீர்வு எனில், பெண்கள் தங்களின் நலனில் போதிய அக்கறை எடுத்துக்கொள்வதுதான்.

பெண்கள் தங்களின் ஆரோக்கியத்தை கவனித்துக் கொள்ளவேண்டும். அவ்வப்போது மருத்துவ பரிசோதனை செய்துகொள்வதும், நோய் தடுப்பு முறைகளைப் பின்பற்றுவதுடன் தேவையானால் முறையான சிகிச்சை எடுத்துக் கொள்வதும் வேண்டும்.

பெண்கள் ஆரோக்கியமாய் இருந்தால் மட்டுமே தங்களின் தொழிலும், சமுதாய அந்தஸ்திலும் தரமான வாழ்க்கை நடத்துவதிலும் வெற்றியடைய முடியும். இன்றைய பெண்களிடம் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வு தற்போது அதிகரித்துள்ளதை பார்க்கிறோம்.

அவர்களிடம் கூறவிரும்புவது என்னவென்றால், "இலக்கை நோக்கியே செயற்படுங்கள். உங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வேலையையும் வீட்டையும் சீராக நிர்வகியுங்கள்" என்பதே ஆகும்.

## இளநரை போக்க...

இன்றைய நவீன யுகத்தில் 15 வயது முதலே ஆண் - பெண் இருபாலருக்கும் தலைமுடி நரைத்துவிடுகிறது. ஆனால் நம் முன்னோர்கள் 60 வயதுவரை தலைமுடி நரைக்காமலும் முடி உதிராமலும் அடர்ந்த கேசத்துடன் வாழ்ந்தார்கள். அதற்குக் காரணம் அவர்களின் உணவுமுறையும், பழக்கவழக்கங்களுமே. இன்றைய உணவுமுறையில் நாவின் சுவைக்காக சத்தற்ற உணவுகளே அதிகம் சாப்பிடுகின்றனர். போதாக்குறைக்கு எண்ணெயில் பொரித்த உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள், குளிரூட்டப்பட்ட உணவுகள் போன்றவற்றை உண்பதால் அஜீரணக் கோளாறு ஏற்பட்டு அபான வாயு சீற்றமாகி பித்தத்தை அதிகரித்து பித்த நீரானது ஆவியாக மாறி தலைக்கு சென்று தலையில் உள்ள முடிகளின் வேர்க்கால்களைப் பாதித்து இளவயதிலேயே நரையை உண்டுபண்ணுகிறது.

இத்தகைய பிரச்சினையைப் போக்க உணவுப் பழக்கத்தை மாற்றியமைக்கவேண்டும். மேலும், அதிக இரும்புச்சத்து நிறைந்த கீரைகள், பழங்கள், மீன் போன்றவற்றை சாப்பிடவேண்டும்.

பித்தத்தைத் தணிக்கும் உணவுகளான இயற்கை உணவுகளே சிறந்தது. மேலே கண்ட எண்ணெயில் பொரித்த, பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்க்கவேண்டும்.



வாரம் ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிக்கவேண்டும். தினமும் தலையில் எண்ணெய் தேய்க்கவேண்டும். ஈரத்தலையோடு எண்ணெய் தேய்க்கக்கூடாது. சுத்தமான தேங்காய் எண்ணெயை தினமும் தேய்ப்பது நல்லது.

உணவில் அதிகளவு கறிவேப்பிலையை சேர்த்துக்கொள்ளவேண்டும். முசுமுசுக்கை இலையின் சாறு எடுத்து சமஅளவு நல்லெண்ணெய் சேர்த்து காய்ச்சி வைத்துக்கொண்டு வாரம் ஒருமுறை அந்த எண்ணெயைத் தேய்த்து குளித்துவந்தால் இளநறை மாறும்.

### இளநரை போக்க மூலிகை எண்ணெய்

தேங்காய் எண்ணெய்- 100 மி.லி., சீரகம் - 1 கரண்டி, சோம்பு 1/2 கரண்டி, சின்ன வெங்காயம் - 3, கறிவேப்பிலை - 2 இணுக்கு, கொத்தமல்லி- சிறிதளவு, நெல்லி வற்றல்- 10 கிராம், வெட்டிவேர் - 5 கிராம். இவற்றை ஒன்றாகச் சேர்த்து நன்கு காய்ச்சி வடிகட்டி தினமும் தேய்த்து வந்தால் இளநரை நீங்கும்.

## 250/= வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-412**

**கேள்வி:** பெண்களிடம் எவ்வாறான விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்?

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 08. 04. 2014**

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 412
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 410 இற்கான விடை :- நேரு
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- சி.அனுராஜ், கலைநகர், அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

412

பெயர் : ..........
முகவரி : ..........
..........
தே.அ. அட்டை இல : ..........
விடை : ..........
..........
கையொப்பம் : ..........

தெரியவந்துள்ளது.

மலேசிய விமானத்தை செலுத்திச்சென்ற விமானிகள், ஹொக்பிட்டில் இருந்து தரையுடனான தமது ரேடியோ உரையாடல்களில் மிக இயல்பாகவே பேசுவதுபோல் பேசியுள்ளனர். வழமையான விமானப் போக்குவரத்து தொடர்பான உரையாடல்கள் போலவே அந்த உரையாடல்கள் இருந்தன. விமானம் டிப்பாச்சர் கேட்டில் இருந்து புஷ்-பேக் செய்யப்பட்டு... டாக்ஸி-வேயில் நகர்ந்து... ரன்-வேக்குச் சென்று... டேக்-ஓ.ஃப் செய்து.... அடையவேண்டிய சரியான உயரத்தை அடைந்து... மலேசிய வான் எல்லையை கடக்கும்போது கூறிய "ஆல்ரைட்.. குட்நைட்" என்ற வார்த்தையை கூறியதுவரை, அனைத்துமே இயல்பாக இருந்தன.

### விமானத்தை சீனா தன்து நிலப்பரப்பில் தேடுகிறது

விமானத்தை, சீனா, தனது நிலப்பரப்புக்குள் தேடும் முயற்சியைத் தொடங்கியிருக்கிறது.

மலேசியாவில் இருந்து இந்த விமானம் வடமேற்காக சென்றிருந்தால், சீன நிலப்பரப்பின் மேலே மூவாயிரம் கிலோ மீற்றர் தூரம் அளவுக்கு அந்த விமானம் பறந்திருக்க வாய்ப்புள்ளது என மலேசியர்கள் நம்புகின்றனர். எனவே மலேசியா கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அதிக நோக்குத் திறன்கொண்ட தனது செயற்கைக் கோள்களையும், ராடர்களையும் பயன்படுத்தி சீனா தனது நிலப்பரப்பை தேடுகிறது. திபெத்திய பீட பூமியின் குறுக்காக இமாலய மலைத்தொடரை நோக்கி இந்த விமானம் சென்றிருக்கக்கூடிய அந்தப் பாதையிலுள்ள இடங்களில் சீனா தற்போது தேட ஆரம்பித்துள்ளது.

### விமானி 'குட்நைட்' சொல்வதற்கு 12 நிமிடத்திற்கு முன்பே பாதை மாறிய விமானம்

மலேசிய விமானத்தின் இணை விமானி ஃபரிக் அப்துல் ஹமீது விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அறையை தொடர்புகொள்வதற்கு 12 நிமிடங்களுக்கு முன்பே விமானம் வழக்கமான பாதையில் இருந்து விலகிச் சென்றுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாயமான மலேசிய விமானத்தின் பாதையை விமானி அறையில் உள்ள கம்பியூட்டர் மூலம் மாற்றப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் விமானத்தின் வழக்கமான பாதை மாற்றப்பட்ட 12 நிமிடங்கள் கழித்துத்தான் இணை விமானி ஃபரிக் அப்துல் ஹமீது விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அறையை தொடர்புகொண்டுள்ளார். விமானம் பாதை மாறியும் அவர் எதுவுமே நடக்காதது போன்று ஆல் ரைட், குட்நைட் என்று தெரிவித்துள்ளார். அதன்பிறகு விமானம் மாயமாகிவிட்டது. விமானம் பாதை மாறிச் சென்றதை இணை விமானி உணர்ந்திருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. இது குறித்து பெடரல் விமானப் போக்குவரத்து நிர்வாகத்தின் முன்னாள் செய்தித் தொடர்பாளர் ஸ்கொட் ப்ரென்னர் கூறுகையில், விமானி அல்லது இணை விமானி ஏதோ செய்வதற்காக விமானத்தை வேறு பாதையில் கொண்டு சென்றுள்ளனர். அவர்கள் ஏதோ தீயசெயலை செய்யவே விமானத்தை பாதை மாற்றிக்கொண்டு சென்றுள்ளனர் என்றார்.

### 30 இலட்சம் பேர் தேடுதல் வேட்டை

அமெரிக்காவைச் சேர்ந்த டிஜிட்டல்குளோப் என்ற செயற்கைக்கோள் நிறுவனம் வெளியிட்டு வரும் செயற்கைக்கோள் புகைப்படத்தில் காணாமல்போன மலேசிய விமானம் எங்காவது தெரிகிறதா என்று ஆராயும் பணியில் உலகம் முழுவதும் 30 இலட்சம் பேர் தாமாக முன்வந்து ஆராய்கின்றனர். மலேசிய விமானம் காணாமல்போன 3ஆவது நாளில் இருந்து அதன் பாதையில் எடுக்கப்பட்ட தனது செயற்கைக்கோள் புகைப்படங்களை வெளியிட்டு, இதில் விமானத்தை தேடும் பணியில் யார்வேண்டுமானாலும் ஈடுபடலாம் என்று அறிவித்தது. ஒவ்வொரு செயற்கைக் கோள் படமும், 24,000 சதுர கி.மீ. பரப்பளவை சுற்றிவளைத்து எடுக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும், விமானத்தைப் பற்றி இதுவரையில் எந்த குறிப்பும் கிடைக்கவில்லை.

**24.03.2014 திங்கள் நிலைவரப்படி**

### இந்தியப் பெருங்கடலின் தெற்கே மிதப்பவை காணாமல் போன விமானத்தின் எச்சங்களா?

இந்தியப் பெருங்கடலின் தென்பகுதியில் தொலைதூரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தேடுதல் மற்றும் மீட்பு விமானங்கள் விமான எச்சங்களைத் தேடிவருகின்றனர்.

இந்த விமானத்தின் பாகம் எதுவும் மிதப்பதைக் கண்டதாக இதுவரை உறுதி செய்யப்படவில்லை. ஆனால் தற்போது தேடப்படும் பகுதியில் சில பொருட்கள் மிதப்பதை பிரஞ்சு செயற்கைக்கோளில் இருந்து எடுக்கப்பட்ட புதிய புகைப்படங்கள் காட்டுவதாக மலேசியாவின் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த விமானத்திலிருந்து வந்திருக்க சாத்தியமுள்ள சில பொருட்கள் கடலில் மிதப்பதை சீன மற்றும் ஆஸ்திரேலிய செயற்கைக்கோள்கள் எடுத்த படங்கள் காட்டுவதாக ஏற்கனவே தெரியவந்திருந்தது.

தற்போதைய தேடுதல் பணிகளில் உதவுவதற்காக சீன விமானங்கள் இரண்டு மேற்கு ஆஸ்திரேலியாவில் இருந்து அனுப்பப்படவுள்ளதாக மலேசியா கூறுகிறது.

தேடல் நடக்கும் இடத்துக்கு ஆஸ்திரேலியா அனுப்பியுள்ள போர்க் கப்பலில் ஆளில்லாமல் இயக்கப்படக்கூடிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றும் உள்ளது.

இதற்கிடையே, அப்பகுதியில் மரச்சட்டமும், பல வண்ண பெல்ட்டுகளுடன் ஒரு சில உடைந்த பொருட்களும் மிதப்பதை ஆஸ்திரேலிய மீட்பு குழுவினர் பார்த்திருப்பதாக அந்நாட்டு பிரதமர் டோனி அபோட் கூறியுள்ளார். ஏற்கனவே, ஆஸ்திரேலியாவைப் போலவே சீனாவும், தெற்கு இந்திய கடல் பகுதியில் விமானத்தின் பாகங்கள் கிடப்பதாக கூறியிருக்கிறது. இதனால், மாயமான விமானம் தொடர்பான மர்மம் விரைவில் விலகும். தேடுதல் பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஏராளமான விமானங்களும், கப்பல்களும் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பகுதியில் கடலுக்கடியில் என்ன கிடக்கிறது என்பதை கண்டுபிடித்து விடுவோம் எனக் கூறியிருக்கிறார்.



**(கீழே உள்ள படம் திசைதிரும்பிய விமானம் ஆசியநிலக் கண்டத்தின் ஊடாக அல்லது இந்துசமுத்திரத்தின் பகுதியினூடாக திசைமாற்றப் பட்டிருந்தால், அப்பாதைகளைக் காட்டுகிறது)**

ஆஸ்திரேலியாவின் கடலோர பாதுகாப்பு படை அளித்த தகவலில், "சீன செயற்கை கோள் தகவலின் அடிப்படையில் 8 விமானங்கள் சுமார் 59,000 சதுர கி.மீ. பரப்பளவில் தேடுதல் வேட்டை நடத்தி வருகிறது. மரச்சட்டம், பெல்ட்டுகள் கிடப்பதாக கூறப்பட்ட பகுதியில் உடனடியாக விமானங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதை மறுபடியும் தேடும்போது கிடைக்கவில்லை" எனக் கூறப்பட்டுள்ளது. இத்தகைய மரச்சட்டங்கள், பெல்ட்டுகள் விமானத்தில் பொருட்களை கட்டிவைப்பதற்காக பயன்படுத்தப்படுபவை. கப்பலிலும் இவற்றை பயன்படுத்துவார்களாம். இதனால், குறிப்பிட்ட பகுதியில் தேடுதல் பணி மும்முரமாக நடந்துவருகிறது. இந்தப் பகுதியில்தான் விமானம் கிடக்கலாம் எனவும் உறுதியாக நம்பப்படுகிறது.

### மர்மங்கள் விலகுமா?

மாயமான மலேசிய விமானம் தொடர்பில் பல்வேறு தகவல்கள்வந்த வண்ணம் உள்ளன. அந்த விமானம் கடத்தப்பட்டிருக்கலாம் என்றும், அதற்கு விமானிகளேகூட காரணமாக இருந்திருக்கலாம் என்றும் கூறப்படும் நிலையில், விமானத்தின் ஹொக்பிட் அறையில் இருந்து கட்டுப்பாட்டு அறையுடன் சக விமானி கூறிய கடைசி வார்த்தைகள் குறித்து தற்போது அலசப்பட்டுவருகிறது. மலேசிய விமானத்தைக் கடத்தியவர் அல்லது கடத்த முயற்சி செய்தவர் சாதாரண அறிவுபெற்றவராக இருந்திருக்க வாய்ப்பில்லை என்று கருதும் மலேசிய அதிகாரிகள், விமான தொழில்நுட்பத்தில் மிகவும் தேர்ந்தவராக இருக்கும் ஒருவரால் மட்டுமே இதைச் செய்திருக்கமுடியும் என்றும் கூறுகின்றனர். இந்தக் கடத்தலில் ஈடுபட்டது விமானியா?, விமானிகளா? அல்லது விமானத்தில் பயணம் செய்த பயணிகளில் ஒருவரா? அல்லது பலரின் கூட்டுமுயற்சியா? என்ற இந்தக் கேள்விக்கு இதுவரை பதில் ஏதும் கிடைக்கவில்லை. வான்வெளியில் விமானங்கள் பறந்து செல்லும் அனைத்து பாதைகள் குறித்தும், அதன்வழிகள் குறித்தும் அந்த நபருக்கு நன்றாகத் தெரிந்திருக்கவேண்டும் என்று உளவு நிறுவனங்கள் ஒருமித்த குரலில் சுட்டிக்காட்டுகின்றன.

மாயமான அந்த எம்ஹெச்-370 விமானத்தில் எல்லா விமானங்களிலும் இருப்பதுபோல், அக்கார்ஸ் என்கிற விமான தொடர்பு அறிவிப்பு முறை இருந்துள்ளது. தானியக்க மின்னணு தொடர்பு முறையான இது, விமானியின் உதவிகள் இல்லாமல் தானாகவே இயங்கும். குறிப்பிட்ட நேரத்தில் அந்த விமானம் எங்கே இருக்கிறது? அது, என்ன செய்துகொண்டிருக்கிறது. அந்த விமானம் எவ்வளவு உயரத்தில் பறக்கிறது? விமானத்தின் இயந்திரங்கள் எந்த மாதிரி இயங்கிக் கொண்டிருக்கின்றன போன்ற விவரங்களை பூமியில் உள்ள தகவல் தொடர்பு அலுவலகத்துக்கு அனுப்பிக் கொண்டே இருக்கும்.

மலேசிய அதிகாரிகளின் கூற்றுப்படி, முதன்முதலில் இந்தக் கருவிதான் அணைக்கப்பட்டிருக்கிறது. அதனால் பூமிக்கு வந்து சேரவேண்டிய தகவல்கள் எதுவும் வரவில்லை. இதை திட்டமிட்டே ஒருவர் அல்லது சிலர் சேர்ந்து செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்தது யார் என்ற கேள்விக்கு, சந்தேகக் கணை எல்லாம் விமானியை நோக்கியே பயணித்துள்ளது. இதன் அடிப்படையில்தான், மலேசியாவில், இந்த விமானத்தை ஓட்டிச்சென்ற விமானிகளின் வீடுகளில் மலேசிய பொலிசார் சோதனை நடத்தினர். இந்தச் சோதனையில் கிடைத்த தகவல்கள் என்ன என்பது குறித்து, பொலிசார் தகவல் ஏதும் தெரிவிக்கவில்லை. ஆனால் இந்தச் சோதனைக்கு பிறகுதான், விமானிகள் மீதான சந்தேகம் இறுகிறது.

மாயமான மலேசிய விமானத்தின் இணை விமானி ஃபரிக் அப்துல் ஹமீது(27) மலேசிய ஏர்லைன்ஸின் மூத்த விமானி ஒருவரின் மகள் கப்டன் நாதிரா ரம்லியை(26) காதலித்துவருவதாகக் கூறப்படுகிறது. நாதிரா ஏர் ஏசியா ஏர்லைன்ஸில் விமானியாக உள்ளார். மலேசியன் ஏர்லைன்ஸில் கடந்த 2007ம் ஆண்டு முதல் பணியாற்றி வரும் ஹமீது, கடந்த 9 ஆண்டுகளாக நாதிராவை காதலித்துவருகிறாராம். அவர் நாதிராவை திருமணம் செய்ய திட்டமிட்டிருந்ததாகவும், ஹமீது சென்ற விமானம் மாயமான்தை அடுத்து அவரது தாய்க்கு ஆதரவாக இருப்பதற்காக, ஏர் ஏசியா நாதிராவுக்கு ஒரு மாதம் விடுப்பு அளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. நாதிரா தற்போது ஹமீதின் தாயாருடன் கோலாலம்பூரில் தங்கியுள்ளார். ஹமீதும், நாதிராவும் லாங்கவி விமானப் பயிற்சிப் பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திட்டமிட்டே விமானத்தில் தகவல் தொடர்பைத் துண்டித்திருந்தாலும்கூட, ஆபத்து அவசரம் எதுவும் ஏற்பட்டால் பூமியில் எங்காவது ஒரு ராடர் கருவி இருந்தாலும் அதனுடன் இந்தத் தானியங்கி முறை, தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயற்சிசெய்யும். ஆனால் இதுவரை எந்த நாடும் தங்கள் ராடரில் இது குறித்த பதிவு இருப்பதாகச் சொல்லவில்லை. ஆயினும், கடத்தப்பட்ட விமானம் அந்தமான் பகுதியை நோக்கிப் பறந்தது என்று மலேசிய இராணுவ ராடர் செய்தி சொல்கிறது. அந்தமான் இந்தியாவின் ஒரு பகுதி. கப்பற்படைத் தளம் அமைந்த அதி கண்காணிப்பு நிறைந்த பகுதி. எந்நேரமும் வான் வெளிகளை நோட்டமிட ராடர்கள் தயார் நிலையில் இருக்கும். மலேசிய விமானம் இந்தப் பகுதிக்குள் நுழைந்திருந்தால் நிச்சயம் ராடாரில் பதிவாகி இருக்கும். ஆனால் இல்லை. காணாமல் போனது சிறியரக விமானம் அல்ல. இந்த விமானம் இந்தியப் பெருங்கடலை அல்லது இந்திய எல்லையைக் கடந்திருக்க வாய்ப்பிருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் அப்படி ஒரு விமானம் இந்த எல்லைப் பகுதியில் நுழைந்தாலே எங்கள் ராடர் கண்காணிப்பில் பதிவாகி இருக்கும். எனவே இந்தத் தகவலை ஏற்கமுடியாது என்று வான்வெளி போக்குவரத்துத் துறை கண்காணிப்பு செயலர் சுகாதா ப்ராமானிக் மறுத்துள்ளார். ஒரு விமானம் அந்த விமானத்தில் இருந்து ராடருக்குத் தகவல் தெரிவிக்கும் கருவியை வேண்டுமானால் செயலிழக்க வைக்கலாம். ஆனால், வான் வெளியில் விமானம் பறக்கும்போது, அதன் வருகையை ராடர் கண்காணிப்பில் பதிவாகாமல் இருக்கச் செய்ய எந்த ஒரு விமானத்தாலும் முடியாது. இந்திய வான்வெளி எல்லைப் பகுதியில் 24 மணிநேரமும் கண்காணிப்பு பணியில் இருக்கக்கூடிய ஒன்பது தற்காப்பு வான்வெளி ராடர்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதில் எந்தப் பதிவும் இல்லை. தற்போது, காணாமல்போன விமானத்தில் பயணம் செய்தவர்கள் சிலரின் படங்கள் வெளியாகியுள்ளன. இந்த விமானம் தனது கட்டுப்பாட்டில் இருந்து விலகுவதற்கு சிறிதுநேரத்துக்கு முன்பு, மலேசிய விமானக் கட்டுப்பாட்டு அறையுடன் விமானி அறையில் இருந்து பேசியவர், அனைத்தும் சரியாக உள்ளது. இரவு வணக்கம் (ஆல் ரைட், குட்நைட்) எனப் பேசியுள்ளார். அதன் பிறகுதான் கட்டுப்பாட்டு அறையுடனான விமானத்தின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இதுவே அந்த விமானத்தில் இருந்து பெறப்பட்ட கடைசி வார்த்தைகள்.

ஆனால், ஆல் ரைட், குட்நைட் என்ற சொற்கள் கூறப்படுவதற்கு முன்னரே, விமானத்தில் முதல் செட் ட்ரான்ஸ்மிஷன் டிவைஸ் செயலிழக்க வைக்கப்பட்டுவிட்டது என்பதை, புலனாய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதாவது இதன் அர்த்தம், விமானத்தின் ACARS (Aircraft Communications Addressing and Reporting System) முதலில் செயலிழக்க வைக்கப்பட்டது. அதன்பின்னர் ஹொக்பிட்டில் இருந்து யாரோ, மலேசிய டவரை(Tower) தொடர்புகொண்டு, "ஆல் ரைட், குட்நைட்" என்று கூறியிருக்கிறார்கள். அதாவது, ஹொக்பிட்டில் இருந்து பேசிய நபருக்கும், ACARS-I செயலிழக்க வைத்த நபருக்கும் இடையே தொடர்பு இருக்க வேண்டும். அல்லது இருவரும் ஒரே நபராக இருக்கவேண்டும். அந்த நபர் யார் என்பது தெரிந்துவிட்டால், பாதி மர்மம் விலகிவிடும்.

# மெயில் அனுப்புவது எப்படி?



**இன்றைக்கு** ஒரு நிமிடத்தில் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மெயில்கள் என்னும் மின்னஞ்சல்கள் அனுப்பப்படுகின்றன. எதுவும் வழி தவறியதில்லை. அனுப்புபவர் சரியான முகவரிதராமல் இருந்தால் ஒழிய, செல்லும் பாதையில் தொடர்புகள் அறுந்துபோய் பிரச்சினைகள் இருந்தால் ஒழிய இவை என்றைக்கும் தங்கள் இலக்கைத் தவறவிட்டது இல்லை.

பிழை எதுவும் ஏற்படாமல் வழி பிசகாமல் செல்லும் இந்த ஈமெயில் களின் கட்டமைப்புத்தான் என்ன என்று இங்கு பார்ப்போம்.

ஒரு ஈமெயில் முகவரியை முதலில் பார்ப்போம். எடுத்துக்காட்டாக அது name@domain.com என இருக்கட்டும். நீங்கள் ஈமெயில் கிளையண்ட் ஒன்றை இந்த முகவரிக்கு மெயில் அனுப்பப் பயன்படுத்துகிறீர்கள். அது அவுட்லுக் அல்லது தண்டர்பேர்ட் ஆக இருக்கலாம். இதனை மெயில் களை அனுப்பவும் பெறவும் பயன் படுத்தலாம். இதனை மெயில் யூசர் ஏஜெண்ட் என அழைக்கின்றனர். மெயில்களை அனுப்ப இந்த மெயில் ஏஜெண்ட்கள் சிம்பிள் மெயில் ட்ரான்ஸ்பர் புரோட்டோஹொல் என்னும் வழிமுறை யைப் பின்பற்றுகின்றன.

பீல்டில் அனுப்பும் டொமைன் பெயரே இருந்தால் ஒரு எம்.டி.ஏ. லோக்கல் மெயில் பொக்ஸ்களில் (ஈமெயில் முகவரி உள்ள ஒவ்வொரு வருக்கும் அந்த முகவரியைத் தந்துள்ள இணைய சேர்வரில் ஒரு மெயில் பொக்ஸ் ஒதுக்கப் பட்டிருக்கும் முகவரிக்கான மெயில் பாக்ஸைத் தேடி அங்கே அந்த மெயில் சேர்க்கப்படுகிறது.

ஒரு வி.எஸ்.என்.எல். பயனாளர் இன்னொரு வி.எஸ்.என்.எல். பயனாளருக்கு அனுப்பும்வேளையில் இதுவே நடைபெறுகிறது. இந்த மெயிலைப் பெறுபவரின் மெயில் டெலிவரி ஏஜெண்ட் அது அவுட்லுக் அல்லது ஒரு சேர்வராக இருக்கலாம்.

இந்த மெயிலை போஸ்ட் ஒபீஸ் புரோட்டோஹொல் அல்லது இன்டர்நெட் மெசேஜ் அக்செஸ் புரோட்டோஹொல் என்னும் வழிமுறையின் மூலம் பெற்றுக் கொள்கிறது.

பயன்படுத்தப்படும் வேளையில் ஈமெயில் செய்தியானது ஈமெயில் கிளையண்ட்டுக்கு அனுப்பப்படுகிறது.

அதேநேரத்தில் அந்த சேர்வரில் ஒரு கொப்பி தக்கவைக்கப்படுகிறது. இது அந்த ஈமெயில் கிளையண்ட் செட்டிங்ஸ் பொறுத்தது. எடுத்துக்காட்டாக எனக்கு ஈமெயில் வசதிதருவது டாட்டாவின் டாட்டா கம்யூனிகேஷன்ஸ் நிறுவனமாக இருக்கலாம். எனக்கென ஒரு ஈமெயில் பெட்டி அதன் சேர்வர் ஒன்றில் இருக்கும்.

என்னுடைய மெயில் பொக்ஸை நான் அந்த சேர்வர் சென்று என் பெட்டியைத் திறந்து படித்துப் பார்த்து அங்கேயே பதிலும் அனுப்பி வைக்கலாம். அல்லது ஒரு ஈமெயில் கிளையண்ட் புரோகிராம், தண்டர்பேர்ட், இடோரா அல்லது அவுட்லுக் எக்ஸ்பிரஸ், மூலம் அந்த மெயிலை என் கம்பியூட் டருக்கு இறக்கிக் கொள்ளலாம்.

அப்படி இறக்கிக்கொள்கையில் ஏற்கனவே நான் என் ஈமெயில் கிளையண்டை செட் செய்தபடி அந்த மெசேஜ் சேர்வரில் தக்கவைக்கலாம். அல்லது இவ்வாறு இறக்கியபின்னர் அதனை நிரந்தரமாக அழித்துவிடவும் செய்திடலாம்.

ஆனால் ஐமேப் 4 பயன்படுத்துகை யில் மெயில் சேர்வரில் எப்போதும் என் மெயிலின் கொப்பி தக்கவைக்கப்படும். இது சிறிய நெட்வோர்க்கில் மட்டுமே செயற்படும். இதற்குப் பதிலாக டொமைன்கள் வெவ்வேறாக இருந்து, மெயில் அனுப்புபவரும் பெறுபவரும் ஜிமெயில் அல்லது ஹொட் மெயில் போன்ற சேர்வீஸ்களைப் பயன்படுத்து பவராக இருந்தால் சற்று வேறுபாடான வழிமுறை பயன்படுகிறது.

இந்த வகையில் ஒரு MUA அல்லது வெப் மெயில் லோக்கல் MTA ஐ தொடர்பு கொள்கிறது. இவை இன்டர்நெட் சேர்வீஸ் வழங்குபவரால் அமைக்கப்பட்டு இயக்கப்படுகிறது. இங்கே எஸ்.எம்.டி.பி.பயன்படுத்தப் படுகிறது. அதிகமான எண்ணிக்கையில் ஈமெயில்கள் கிடைக்கப்பெறுகையில் அங்கே ஒரு ஈமெயில் வரிசை அமைக் கப்படுகிறது.

இன்டர்நெட்டில் ஒரு ஈமெயில் பயணிக்கையில் அது யாருக்காக எழுதப்பட்டதோ அவருடைய ஈமெயில் பெட்டிக்கு நேரடியாகச் செல்வது என்பது எப்போதாவது ஒரு முறை அதிசயமாகத் தான் நடைபெறும். அந்த மெயிலுக்கு மெயில் ட்ரான்ஸ்பர் ஏஜெண்ட் கிடைப்பதைப் பொறுத்து பல வழி களில் இது அனுப்பப்படுகிறது.

மெயிலை ட்ரான்ஸ்பர் செய்திடும் இந்த MTA, ஈமெயில் மெசேஜின் தலைப்பில் உள்ள ஹெடர்களில் தரப்படும் தகவல்களைப் படித்து அருகில் இணைக்கப்படும் டொமைன் நேம் சர்வரிடம் இந்த மெயில் செல்வதற்கான வழியைக் கேட்கிறது. அப்படியே அடுத்தடுத்து பல MTA மூலம் ஒரு ஈமெயில் தன் பயணத்தை மேற்கொள்கிறது.

கம்பியூட்டர் இங்கே ஐ.பி. முகவரியை மட்டுமே படித்து அறிந்துகொள்வதால் ஒரு ஈமெயில் முகவரியின் டொமைன் நேமை முதலில் படிக்கிறது. (இது முகவரியில் @ என்ற அடையாளத் தினை அடுத்து இடம்பெறுவது) அதன் டொமைன் நேம் சேர்வரில் இதனைத் தேடுகிறது. அந்த குறிப்பிட்ட டொமைன் நேமிற்கான மெயில் எக்சேஞ்ச் ரெகார்டிற்கான தேடலாக இது இருக்கும்.

இதற்கு முன்பாக டொமைன் நேம் அறிதல் முடிவு பெற்றிருக்கவேண்டும். பல டொமைன் நேம்களில் சில மட்டுமே பெரியளவில் உள்ளவை. இந்த பட்டியலில் குறைந்தது 13 பெயர்கள் உள்ளன.

ஈமெயில் ஒன்றின் கட்டமைப்பு MIME Multipurpose Internet mail Extensions என அழைக்கப்படுகிறது. இந்த கட்டமைப்பு உருவாக்கப் படுவதன் முன்னால் மெயில்களில் ரோமன் எழுத்துக்களில் உருவான டெக்ஸ்ட் மட்டுமே அனுப்பப்பட்டு வந்தன. அதன்பின்னர், மற்றவற்றையும் எப்படி அனுப்பலாம் என்ற வரை யறையை இந்த கட்டமைப்பு அமைத்தது.

அனைத்து ஈமெயில் கடிதங்கள் செல்லும் வழிகளும் யாரும் குறுக்கே புகுந்து எடுத்துப் படிக்கக்கூடிய வழிகளாகத் திறந்த நிலையில்தான் உள்ளன. எனவே மிக மிக இரகசிய மாக ஒரு செய்தியை அனுப்பவேண்டும் என எண்ணினால் அந்த செய்தியை ஒரு டிஜிட்டல் சிக்னேச்சர் மூலமாகவோ, என்கிரிப்ஷன், டிக்ரிப்ஷன் மூலமாகவோ பாதுகாப்பாக அனுப்பவேண்டும்.

# பாதுகாப்பை அகற்றுகிறது மைக்ரோசொப்ட்!

விண்டோஸ் எக்ஸ்பி சிஷ்டத்திற்கான பாதுகாப்பு வசதிகள் அனைத்தையும், வரும் ஏப்ரல் 8 முதல் நிறுத்திக் கொள்ளப்போவதாக மைக்ரோசொப்ட் அறிவித்து, தொடர்ந்து எச்சரிக்கையும் கொடுத்துவருகிறது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, பலரின் பிரிய ஒப்பரேட்டிங் சிஷ்டமாக இயங்கிவந்த, இயங்கிக்கொண்டிருக்கும் விண்டோஸ் எக்ஸ்பி சிஷ்டத்தினை முடிவுக்குக் கொண்டுவர மைக்ரோ சொப்ட் பல ஆண்டுகள் முடிவெடுத்து, தற்போது அதன் இறுதிக்கட்டத்திற்கு வந்துவிட்டது.

பல கணக்கெடுக்கின்படி, ஏறத்தாழ 48.8 கோடி கம்பியூட்டர்கள் எக்ஸ்பி யில் இயங்குவதாக தெரிகிறது. மிகச் சரியாக எத்தனை கம்பியூட்டர்கள் என்று, மைக்ரோசொப்ட் நிறுவனம் மட்டுமே சொல்லமுடியும். இது ஒரு பெரிய எண்ணிக்கையாகத் தோன்றினாலும், அனைத்து நாடுகளிலும் இயங்கும் பெர்சனல் கம்பியூட்டரில், இவை ஏறத்தாழ 30 சதவீதம் மட்டுமே என Net Applications என்ற அமைப்பு தெரிவித்துள்ளது. அப்படியானால், இவ்வளவு எண்ணிக்கையிலான கம்பியூட்டர்களையா, வைரஸ்களை பரப்பும் ஹேக்கர்களின் பசிக்கு இரையாக்க மைக்ரோசொப்ட் முடிவெடுத்துள்ளது என்று பலரும் எண்ணத் தொடங்கி உள்ளனர்.

எனவே, கீழ்காணும் இடங்களில் அவதான மாக இருக்கவும். மைக்ரோசொப்ட் ஒபீஸ் 2003க்கும் சப்போர்ட் பைல்கள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. அதனையோ, அல்லது அதற்குப்பின்னர் வந்த ஒபீஸ் தொகுப்பினையோ பயன்படுத்திக் கொண்டிருந்தால், உடனடியாக அவற்றையும் அப்டேட் செய்திடவும்.

பயன்படுத்தாத எந்த சொப்ட்வேர் அப்ளிகேஷனையும் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும். அழித்துவிடவும், குறிப்பாக விண்டோஸ் எக்ஸ்பியுடன் இணைந்து கொடுக்கப்பட்ட அனைத்து சொப்ட்வேர் அப்ளிகேஷன் புரோகிராம் களையும் நீக்கிவிடவும்.

ஜாவா உங்களுக்குக் கட்டாயம் தேவை என்றால் மட்டுமே, கம்பியூட்டரில் வைத்திருக்கவும். இல்லையெனில், உடனே நீக்கிவிடவும்.

அண்ட்டி வைரஸ் மற்றும் பயர்வால் இணைந்த அப்ளிகேஷன் புரோகிராம் ஒன்றினை இன்ஸ்டோல் செய்து இயக்கவும். இவை இரண்டும் தேவை. முடிந்தால், இணைய இணைப்பிலிருந்து கம்பியூட்டரை நீக்கிவிடவும். பயன்படுத்துவதாக இருந்தால், நல்ல பயர்வால் ஒன்றை அமைக்கவும்.

பாதுகாப்பு எதற்கு தேவை? என அலட்சியமாக இருக்கவேண்டாம். வைரஸ் பாதித்தால், விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும். எப்போதும் உங்கள் கம்பியூட்டரில் உருவாக்கப்படும் பைல்களுக்கு பேக் அப் தினந்தோறும் எடுத்துவைக்கவும்.







# இலவச சேவை!

**ஒரு** வகையான கோப்பினை பிறிதொரு வகையான கோப்பாக மாற்றுவதற்கு பல்வேறு மென்பொருட்கள் காணப்படுகின்றன. அவ்வாறே இவ்வசதியை ஒன்லைனில் தரும் சில இணையத்தளங்களும் காணப்படுகின்றன.

அவற்றில் சில குறைந்தளவான கோப்பு வகைகளையே மாற்றம் செய்யமுடிவதுடன், பெரும்பாலானவற்றில் பணம்செலுத்தியே இச்சேவையினை பெற்றுக் கொள்ளவேண்டும்.

எனினும் Cloud Convert எனும் இணையத்தள மானது இச்சேவையினை முற்றிலும் இலவசமாக வழங்குவதுடன், நூறுக்கு அதிகமாக கோப்பு வகைகளை மாற்றும் வசதியைக் கொண்டுள்ளது. அவற்றில் பல்வேறு Audio, Video, Document, Ebook, Archive, Image, Spreadsheet மற்றும் Presentation கோப்புகளும் அடங்கும்.




ஜோசெப் கிருஷ்ணா

# தடுத்துவிட முடியாது





**2014**ஆம் ஆண்டு, ஏழாவது ஐ.பி.எல் ஏலங்கள் முடிவடைந்த நிலையில் தற்போது ஒவ்வொரு அணியும் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளும் செயற்பாடுகளில் இறங்கி உள்ளன.

இதில் குறிப்பாக டெல்ஹிடெயார் டெவில்ஸ் அணி கவனம் பெறுகிறது. அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இங்கிலாந்தின் பரிதாபத்துக்குரிய ஆஷஸ் தொடரின்பின் அந்தத் தோல்விகளுக்காக பலிக்கடாவாக்கப் பட்டவர் இங்கிலாந்தின் முன்னாள் தலைவரும், உன்னத துடுப்பாட்ட வீரருமான கெவின் பீட்டர்சன்.

இப்பொழுது அதிரடியாகவும் டெல்ஹி டெயார் டெவில்ஸ் அணி மிகப் பொருத்தமாகவும் அதிரடியாகவும் இவரையே அணித்தலைவராக மிகப்பொருத்தமாக நியமித்துள்ளது. முன்னதாக தினேஸ் கார்த்திக் அணித் தலைவராக நியமிக்கப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும், இவர் தற்போது உதவித் தலைவர் பதவியை மனத்திருப்தியுடனேயே ஏற்றுக்கொண்டுள்ளார்.

கெவின் பீட்டர்சென் தனக்கு தலைமைப் பதவி வழங்கப்பட்டது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், டெல்ஹி டெயார் டெவில்ஸ் அணி என்னை மிகவும் மேன்மைப்படுத்திவிட்டதாக உணர்கிறேன் என்று கூறியதுடன், நிறைய இளந்தலைமுறையினர், மற்றும் அதிசிறந்த பயிற்றுனர் குழுவின் எமக்குக் கிடைத்துள்ளனர். எங்களால் இம்முறை சாதிக்கமுடியும் என்றே நம்புகின்றேன் என்று கூறியுள்ளார்.

டெல்ஹி டெயார் டெவில்ஸ் அணியில் றொஸ்ரெய்லர், ஜிம்மி நீஷம் ஜே.பி.டுமினி, வெய்ன் பார்னெல், குயின்ரன் டி கொக், நேதன் கோட்டர் நைல் ஆகிய மிகப் பிரபல்யங்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.

தற்போதைய ஐ.பி.எல் சம்பியன் கிண்ணத்தை வென்று வைத்திருப்பவர்கள் மும்பாய் இந்தியன்ஸ் அணியினர். 2008 இல் ராஜஸ்தான் றோயல்ஸ், 2009இல் டெக்கான் சார்ஜர்ஸ், 2012 இல் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் கிண்ணம் வென்றிருந்தார்கள். 2010, 2011 இருமுறையும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியினர் கிண்ணம் வென்றிருந்தார்கள்.

# குறைகள் தீரும்

**ஐ.பி.எல்.** ஏலத்தில் இலங்கை வீரர்கள் மிகப் பெரும்பான்மையோர் ஓரங்கட்டப்பட்டது, இலங்கை கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பரவலாக ஒரு மன நெருடலை உருவாக்கியிருந்தது ஒன்றும் இரகசியமல்ல. இதேபோன்ற நெருடல்கள் வேறு கோணங்களிலும் நடந்துள்ளன.

அதுதான் ஆறு வருடங்களாக டெல்ஹி டெயார் டெவில்ஸ் அணிக்காக விளையாடிய, நிறையவே பங்களிப்புச் செய்த வீரேந்தர் ஷேவாக்கை டெல்ஹி அணைத்துக்கொள்ள விரும்பாமல்போன சந்தர்ப்பம். இதுபற்றிப் பேசும் ஷேவாக், நிறையவே மனம்நொந்து பேசினார். என்னை ஏலத்தில் எடுக்காமல்விட்டது தனிப்பட்ட காரணத்தால் அல்ல என்பதும், அது கிரிக்கெட் சார்ந்தது என்றும் எனக்குத் தெரியும்.

புதியவர்களை, இளைஞர்களை அவர்கள் உள்வாங்க நினைத்திருக்கலாம். அதில் தப்பேதும் இல்லை. கடந்த பருவ காலம் எனக்கு வாய்ப்பாக இருக்கவில்லை. நிறைய எண்ணிக்கைகளை என்னால் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்பது உண்மை. இருந்தாலும் நான் தொடர்ந்து போராடவேண்டும். இதற்குக் காரணம் மீண்டும் தேசிய அணித் தேர்வாளர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதல்ல.

எனினும் இம்முறை ஐ.பி.எல் போட்டிகளில் நிறைய எண்ணிக்கைகளைப் பெறவேண்டும் என்பதே என் அவா. அதனைச் செய்வேன் என்றே நினைக்கிறேன். எனது நோக்கம் தற்போதைக்கு ஒன்றே ஒன்றுதான். அதாவது எனது அணிக்கு வெற்றிதேடித்தர நான் உழைக்க வேண்டும் என்கிறார்.

இவரது வார்த்தைகளில் நாகரிகம் இருந்தாலும், உள்ளார்ந்த வேதனையும் தெரிகிறது.



கிரிக்கெட் ரசிகர்களைப் பொறுத்தவரை ஷேவாக் என்பவர் மிகத் திறமை வாய்ந்த, அதிரடியான உன்னத கிரிக்கெட் வீரர். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. மேலும் அதிசிறந்த வீரர்களெல்லாம் ஒரு சிலரைத் தவிர சந்தோஷ மாகத்தான் தம் கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்கள் என்பதும் இல்லை, இருந் தாலும் ஷேவாக் ஏழாவது ஐ.பி.எல் போட்டிகளில் காட்டும் திறமை பல தரப் பாரையும் மீண்டும் அவரை நோக்கிப் பார்க்க வைக்க வேண்டும் என்பதே எல்லோரதும் விருப்பம். இம்முறை கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் ஷேவாக் இடம்பெற்றுள்ளார்.



**உலகக் கிண்ண** இருபதுக்கு இருபது போட்டிகள் நடைபெறுகின்ற இதேவேளையில் இந்தப் போட்டிகளுடன் சங்கக்கார, மஹேல இருவரும் இருபதுக்கு இருபது போட்டிகளில் இருந்து ஓய்வுபெறும் செய்திகளும் வெளியாகின.

சங்கக்கார இந்தச் செய்தியை ஊடகங்கள் ஊடாகவே வெளிப்படுத்தி இருந்தார் மஹேல தனது ஓய்வு விடயத்தை ஊடகங்களுக்கும் தெளிவாகச் சொல்லாமல் பட்டும்படாமலும் பதிலளித்துவிட்டு, திடீரென்று இந்திய சஞ்சிகை ஒன்றில் தனது ஓய்வுமுடிவை வெளியிட்டார்.

இப்பொழுது இதில் உள்ள சர்ச்சை என்னவென்றால், இலங்கைக் கிரிக்கெட் சபைக்கும், பிரதான தெரிவாளருக்கும் இவர்களது முடிவை முதலில் தெரிவிப்பதுதான் சரியான நடைமுறையாக இருக்கக்கூடும். ஆனால் இதனை மீறி இருவரும் நடந்துகொண்டமை ஏனென்ற கேள்வியெழும் அதேவேளை, கிரிக்கெட் நிர்வாகிகளுடன் இவர்களுக்கு சுமூகமான உறவு இல்லை என்ற விடயமும் வெளிப்படுமாற் போலத் தெரிகின்றது.

இதனை உறுதிபடுத்துவதுபோல 2011ஆம் ஆண்டு சங்கக்கார கிரிக்கெட் நிர்வாகிகள்மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்ததை சுட்டிக்காட்டுகிறார்கள். இன்னொருபுறம் 2012இல் நான் இலங்கைக் கிரிக்கெட் சபையுடன் கொண்டிருந்த நம்பிக்கைகளையெல்லாம் இழந்து விட்டேன் என்று அதிருப்திப்பட்டுள்ளார். நாம் அறியாத இன்னும் எவ்வளவோ விடயங்கள் இருக்கக்கூடும். இதேவேளை பிரதம தேர்வாளர் ஐயசூரிய இருவர்மீதும் மிகுந்த அதிருப்தியுடன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

எங்களிடம் முன்னதாகவே இதுபற்றிக்கூறி இவர்களின் இடத்தை நிரப்ப ஏனைய வீரர்களைத் தயார்ப்படுத்தும் சந்தர்ப்பத்தை இவர்கள் வழங்கவில்லை என்றும் குற்றஞ்சுமத்தியுள்ளார். மறுபுறம் இந்த இரண்டு வீரர்களும் இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள் எல்லோரையும் புறந்தள்ளிவிட்டு ஊடகங்கள் ஊடாக தமது மிக முக்கியமான முடிவொன்றை வெளியிட்டதை கிரிக்கெட் சபையின் முகத்தில் பூசப்பட்ட கரியாகத்தான் பார்க்கிறார்கள்.

சங்கா, மஹேல இருவரும் பதினைந்து வருடங்களாக இலங்கை கிரிக்கெட் விளையாட்டு நிறைய பெருமைகள் சேர்த்தவர்கள். இப்போது நாடகம் முடிவுறும் நிலைக்கு வந்துவிட்ட நிலையில் தம் விரக்திகள், ஆதங்கங்கள் எல்லாவற்றையும் வெளிப்படுத்த தமது ஓய்வு அறிவிப்பை ஒரு கருவி யாகப் பயன்படுத்தியிருக்கலாம்.

# சர்ச்சையான முடிவு



இதெல்லாம் கிரிக்கெட் சபை மற்றும் இரண்டு வீரர்கள் சார்ந்த பிரச்சினை.

ஆனால் இந்த இருவரும் முற்றுமுழுதாக கிரிக்கெட்டை விட்டு ஓய்வுபெறும்போது அந்த இடைவெளி மிகப் பெரியதாகத்தான் இருக்கப் போகிறது. சங்கக்கார கூறுகையில், தினேஷ் சந்திமால், லாஹிரு திரிமான்ன எங்கள் இருவரின் இடங்களையும் நிரப்புவார்கள் என்று நம்பிக்கையுடன் கூறியுள்ளார். ஆனால் அதற்கு நீண்டகாலம் பொறுத்திருக்கவேண்டும் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

## ஐ.சி.சி. இருபதுக்கு இருபது உலகக் கிண்ணம்

| பிரிவு I | பிரிவு II |
|---|---|
| இலங்கை | அவுஸ்திரேலியா |
| தென் ஆபிரிக்கா | பாகிஸ்தான் |
| இங்கிலாந்து | இந்தியா |
| மே.இ. தீவுகள் | நியூசிலாந் |

தகுதிகாண் போட்டிகளில் எட்டு அணிகள் பங்குகொள்கின்றன. இவற்றில் இரு பிரிவுகளாகப் பிரிந்து போட்டியிட்டு ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறும் அணிகள் இரண்டு. மேற்படி பிரதான அணிகளில் இடம்பெறும். இவ்வகையில் பங்களாதேஷ், அயர்லாந்து அணிகள் இரண்டும் தகுதிபெறும் வாய்ப்பை அதிகமாகக் கொண்டுள்ளன.

### கடந்த சுற்றுப்போட்டி முடிவுகள்

2007 / 2008 - இந்தியா **Vs** பாகிஸ்தான் - இந்தியா ஐந்து ஓட்டங்களில் வெற்றி.

2009 - பாகிஸ்தான் **Vs** இலங்கை - பாகிஸ்தான் எட்டு இலக்குகளில் வெற்றி.

2010 - அவுஸ்திரேலியா **Vs** இங்கிலாந்து - இங்கிலாந்து ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி.

2012/ 2013 - இலங்கை **Vs** மே.இ.தீவுகள் - மே.இ.தீவுகள் 36 ஓட்டங்களால் வெற்றி.

இதுவரையில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளில் மஹேல ஜயவர்த்தன 25 ஆட்டங்களில் 858 ஓட்டங்கள் பெற்று முதலிடம் வகிக்கிறார். இதில் ஒரு 100-ம் அடக்கம்.

அதேபோன்று பந்துவீச்சில் லசித் மலிங்க 25 ஆட்டங்களில் 33 விக்கெட்டுக்கள் வீழ்த்தி முதலிடம் பெறுகிறார். இவரது சிறந்த பந்துவீச்சு 5/31 என்பதாகும்.

### இலங்கை அணி விபரம்

01. தினேஷ் சந்திமால்
02. லசித் மலிங்க
03. சத்துராங்க சில்வா
04. திலகரட்ண டில்ஷான்
05. ரங்கண ஹேரத்
06. மஹேல ஜயவர்த்தன
07. நுவன் குலசேகர
08. சுரங்க லக்மால்
09. ஏஞ்சலோ மெத்தியூஸ்
10. அஜந்த மெண்டிஸ்
11. குஷால் பெரேரா
12. திஸர பெரேரா
13. எஸ்.பிரசன்ன
14. குமார் சங்கக்காரா
15. சசித்ர சேனாநாயக்க
16. லாஹிரு திரிமான்ன

### அணிகளின் தற்போதைய தர வரிசை

| | | |
|---|---|---|
| இலங்கை | - | 129 |
| இந்தியா | - | 123 |
| பாகிஸ்தான் | - | 121 |
| தெ.ஆபிரிக்கா | - | 118 |
| அவுஸ்திரேலியா | - | 115 |
| மே.இ.தீவுகள் | - | 112 |
| நியூசிலாந்து | - | 108 |
| இங்கிலாந்து | - | 104 |
| அயர்லாந்து | - | 91 |
| வங்கதேசம் | - | 70 |
| ஆப்கானிஸ்தான் | - | 70 |
| நெதர்லாந்து | - | 56 |
| ஸ்கொட்லாந்து | - | 50 |
| சிம்பாவே | - | 46 |
| கென்யா | - | 42 |
| கனடா | - | 02 |

### சதம் அடித்தவர்கள்

| | | |
|---|---|---|
| பிரெண்டன் மெக்கலம் | - | 123 |
| கிறிஸ் கெய்ல் | - | 117 |
| சுரேஷ் ரெய்னா | - | 101 |
| மஹேல ஜயவர்தன | - | 100 |

**சிக்ஸர் சாதனை**

| | | |
|---|---|---|
| கிறிஸ் கெய்ல் | - | 43 |
| ஷேன் வொட்சன் | - | 27 |
| யுவராஜ் சிங் | - | 27 |

ஒரு போட்டியில் அதிகூடிய சிக்ஸர்கள் அடித்தவர் என்ற பெருமை கிறிஸ் கெய்ல் - 10

### அதிக போட்டிகள்

அதிக போட்டிகளுக்குத் தலைவராக இருந்தவர் (22) இந்திய அணித்தலைவர் டோனி. மேலும் தொடர்ந்து ஐந்தாவது முறையாக அணித்தலைவராகக் களம் இறங்குகிறார்.

# சொந்தங்கள் நிலைத்து நிற்பதில்லை?

– அளவெட்டி ப.உதயகுமார் –

"சந்நதி முருகா... இன்றைய பொழுதை, நல்ல பொழுதாக... கடன்காரன் வந்து திட்டாத பொழுதாக வழிவிடய்யா" என் மனம் இவ்வாறு எண்ணிக்கொண்டது. சாப்பாடு இல்லாமல்கூட இருந்திடலாம், கடனுடன் இருக்கும் ஒவ்வொரு பொழுதும் எனக்கு நரகமாகவே தெரிந்தது. கடனை நானாகவே தேடிக்கொண்டேன். வெளிநாட்டு மோகம் என்னை இப்பிடி படுபாதாளம்வரை கொண்டு போய்விடும் என்று நான் கனவிலும் எண்ணவில்லை.

பணத்தை தண்ணீரில் போடவேண்டாம், வெளிநாட்டு முகவரை நம்பி ஏமாற வேண்டாம் என்றெல்லாம் விளம்பரங்கள் வெளியிடப்பட்டதை பொருட்படுத்தாமல் அவுஸ்திரேலியாவுக்கு போவதற்காக கடன்பட்டு, காசைக்கட்டி, ஏஜென்சிக்காரனுக்கு தின்னக் கொடுத்துவிட்டேன். இப்ப வெளி நாடும் இல்லை, கடன்காரன் என்ற பெரிய தொரு பட்டத்துடன் வீடுதேடி வரும் கடன்காரங்களுக்கு பதில் சொல்ல முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறேன்.

நான் இந்த நிலைக்கு வருவதற்கு என் மனைவி வினிதாதான் காரணம். அக்கம் பக்கம், சொந்தபந்தங்கள் பெரிய நாடுகளிலிருந்து உழைத்து அனுப்பும் பணத்தில் வீடுகட்டி, நகை நட்டு வாங்கி, வாகனம் எடுத்து வசதியாக வாழ்வதைப் பார்த்த என்ரை பத்தினியின்ரை பாழ்பட்ட மூளை இப்ப என்னை நடுத்தெருவுக்கு கொண்டு வந்துவிட்டது.

முப்பது லட்சம் ரூபாவை கடன்பட்டு, கடனில் மூழ்கியிருக்கும் என்னை இப்ப எவருமே மதிப்பதில்லை, என்னுடன் கூடிப்பிறந்தவர்கள் மிகவும் வசதியாக வாழ்கின்றார்கள். அவர்களிடம் உதவி கேட்டேன் - எல்லோரும் வைச்சுக்கொண்டு இல்லை என்கிறார்கள், என்னைக் கண்டாலே சொந்தபந்தங்கள் கதைக்கப் பயப்படுகிறார்கள். நான் அவர்களிடம் உதவிகேட்டாலும் என்று நழுவி விடுகின்றார்கள்.

"உப்பிடி இருந்து யோசிச்சு என்ன செய்யப்போறியள்... நடந்தது நடந்து போச்சுது... யோசிச்சாப் போல போனது வரவே போகுது" மனைவியின் மந்திரத்தை கேட்கவே எனக்கு கோபம் தலைக்கேறியது.

"எல்லாம் உன்னாலை வந்தது.. சொல்லச் சொல்லக் கேட்டியோ.. உன்ரை வெளிநாட்டு ஆசையாலை நான் எத்தினை பேரிட்டை கள்ளன் பட்டம் கேட்டு நிக்கிறன்" எப்பிடிச் சொன்னாலும் விளங்காத ஜென்மம்தான் என்ரை மனிசி... அடுத்த கட்டம் என்ன என்பதைப் பற்றி சிந்திக்கவே தலை சுற்றியது எனக்கு.

"நான் சொல்லுறன் எண்டு பேசாதையுங்கோ.. உங்கடை அண்ணை வசதியாகத் தானே இருக்கிறார்... அவரிட்டை போய் கடனாக கொஞ்சக் காசு கேட்டுப் பாருங்கோவன்"


"அண்ணையிட்டை கேட்டிட்டன்... அவர் இப்ப தன்னட்டை இல்லையாம்... வைச்சுக் கொண்டு இல்லை எண்டு சொல்லுறார்... இப்ப நான் இருக்கிற நிலைமையிலை கடன்தர ஆரும் யோசிப்பினம்தானே" பெருமூச்சு என்னை அறியாமலே வெளிப்பட்டது.

"சொந்தங்கள் உதவாதுதான். நானும் எங்கடை சின்னக்காவிட்டை கேட்டன். வெளிநாட்டுக் காசு வட்டிக்கு குடுத்து வாங்கிறா... எனக்கு இல்லை எண்டு சொல்லிப்போட்டா" மனைவி கண் கலங்கினாள்.

இதுக்கு மேலை நிண்டு கதைச்சால் சண்டை மூழும் என்பதை மனம் உறுத்தியது. சைக்கிளை எடுத்துக்கொண்டு போகுமிடம் தெரியாமல் சைக்கிள் போய்க் கொண்டிருந்தது....

லொத்தர் சீட்டு விற்கும் கடை ஒன்றின் முன்னால் சனக்கூட்டம் நின்றது. நானும் அவர்களில் ஒருவனாகிவிட்டேன். "போன கிழமை உருட்டின அதிர்ஷ்ட இலாபச் சீட்டிலை சுன்னாகம் வாசி ஒருவருக்கு நாலு கோடி பரிசு கிடைச்சதாம்" நின்றவர்கள் பேசிக்கொண்டார்கள்.

நாலு கோடி. கேட்கவே என் மனம்



எங்கோ சென்றது. எனக்கு அப்பிடி ஒரு நாலு கோடி கிடைச்சால்... கற்பனை உலகில் என்னை அறியாமலே அலைந்தேன். ஒரு நூறு ரூபாவை கொடுத்து ஒரு அதிர்ஷ்ட இலாபச் சீட்டினை வாங்கிக்கொண்டேன். "சந்நதி முருகா... லொத்தராவது விழ வை" மனம் வேண்டிக்கொண்டது!

மனம் நிம்மதியின்றித் தவித்தது. சைக்கிளை மரநிழலில் நிறுத்திவிட்டு நானும் அமர்ந்து கொண்டேன். மரக்கிளைகள் ஆடி அசைந்து மனதுக்கு இதமான காற்றினை தந்தது- வீதியால் போகின்றவர்கள் என்னை ஒரு ஏளனப் பார்வை பார்த்துச் சென்றனர். அதில் ஒருவராக என் சித்தப்பா ஒருவரும் என்னைக் கண்டும் காணாதவர் போலச் சென்றார். என் அப்பாவின் தம்பியான அவர் ஒரு காலத்தில் பரம ஏழையாக இருந்தவர். அவருடைய மூத்தமகனை லண்டனுக்கு அனுப்புவதற்கு நானும் இரண்டு லட்சம் ரூபா குடுத்தனான். ஆண்டு ஏழாகியும் இதுவரை பணத்தை திருப்பித் தரவேயில்லை, ஆனால் அவர் இப்ப பெரிய பணக்காரனாகிவிட்டார்.

"சித்தப்பா" குரல் காட்டினேன். "என்ன நந்தன்... மரத்துக்கு கீழ இருந்து காத்து வாங்கிறாய் போல" சித்தப்பாவின் வார்த்தை நக்கலாகத் தெரிந்தது எனக்கு. "என்ன செய்யிறது சித்தப்பா... என்ரை விதி வீதியிலை கொண்டு வந்து விட்டிட்டுது" என் வார்த்தை வேதனையாக மாறியது.

"எல்லாம் கேள்விப்பட்டனான். ஏமாந்து போய்வந்து நிக்கிறாயெண்டு வீட்டை வந்து காசு கேட்டனியாம். இப்ப என்னட்டை காசு இல்லை நந்தன். உவன் மூத்தவன் ஒரு எழுபது லட்சம் போட்டு விட்டவன், காணி வேண்டிப் போட்டன். அதோடை நான் இப்ப பெரும் பாட்டியோடைதான் குடுக்கல், வாங்கல் செய்யிறனான். உன்னட்டை தந்திட்டு வட்டி வாசியெண்டு வேண்ட முடியாது... சரி பார்ப்பம்"

சித்தப்பா சொன்ன வார்த்தைகள் என்னை ஈட்டியால் குத்திக் கிழிப்பது போன்ற உணர்வு உண்டானது. பரவாயில்லை. என்னட்டை வேண்டிய இரண்டு லட்சத்தையும் தந்தியளெண்டால் காணும்" சுருக்கமான வார்த்தைகள் மட்டும் பாவித்தேன்.

இதுக்கு மேலும் அவ்விடத்தில் இருக்கப் பிடிக்காமையால் சைக்கிளை எடுத்துக்கொண்டு வீடுநோக்கி நகர்ந்தேன்.

"முதலாளி" குரல்வந்த திசையினைப் பார்த்தேன். கூப்பிட்டது வேறு யாருமில்லை. நீண்டகாலமாக என்னுடைய வாகனத்தை ஓட்டிய சாரதி சீலன்தான் கூப்பிட்டான். சீலனும் இப்போது வசதி வாய்ப்பானவனாக மாறிவிட்டான். என்னுடைய லொறியை ஓடிய காலத்தில் சம்பளத்தைவிட மேலதிக மாக எவ்வளவு வாங்கியிருப்பான். நான் எவ்வளவு உதவிகளை செய்திருப்பேன். எல்லாரும் மறந்து விட்டார்கள்.

"எங்கை போட்டு வாறியள் முதலாளி... எல்லா விசயமும் கேள்விப்பட்டனான். நானும் என்ரை குடும்பமும் நல்லாயிருக்கிற மெண்டால் நீங்கள்தான் காரணம் முதலாளி... உங்கடை நிலைமை அறிஞ்சு மனிசியிட்டை சொன்னன். ஒரு அஞ்சு இலட்சம் கடனாகக்

**"பார்த்தியளே, பணம் எங்களிட்டை கிடக்குது எண்டதும் நிறையப்பேர் வருகினம். நாங்கள் கஷ்டப்படும்போது உதவிசெய்ய வராத சொந்தங்கள் இப்ப வருகினம். இப்படியான சொந்தங்கள் ஒருபோதும் நிலைச்சு நிக்காது. எங்களிட்டையும் பிள்ளையள் இருக்கினம். வீடுகட்டி. பிள்ளையளுக்கும் வங்கியிலை போட்டு வைக்கவேணும்" மனைவியின் ஆலோசனையில் நியாயம் இல்லாமல் இல்லை. அவள்சொன்ன கருத்துக்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டேன்.**

குடுப்பமெண்டு கேட்டன். உங்களிட்டை தந்திட்டு என்னெண்டு திருப்பி வாங்குறதெண்டு மனிசி மறிச்சுப்போட்டாள் முதலாளி" சீலனுடைய வார்த்தைகளும் என்னை சித்திரவதை செய்தது.

வீட்டை வந்தபோது மகள் ஓடி வந்து பார்த்தாள்... "அப்பா சாப்பாடு வேண்டி வரேல்லையோ... எனக்கு பசிக்குதப்பா" அழுதாள். பத்து வயதுப் பிள்ளைக்கு சாப்பாடு குடுக்கக்கூட முடியாத நிலைக்கு நான் வந்துவிட்டேன்.

"மனைவியின் முகத்தைப் பார்த்தேன். அழுது முகம் வீங்கியிருந்தது. "மத்தியானம் பாண் வாங்கிக் குடுத்தன். அப்பா சாப்பாடு கொண்டுவருவார் எண்டு பொய் சொல்லித் தான் சமாளிச்சனான். கடைக்காசு கட்டேல்லை... கடன் தரமாட்டன் எண்டு கடைக்காரனும் சொல்லிப்போட்டான். சமைக்கேலை" மேலே சொல்ல வார்த்தைகளின்றி அழுதாள்....

கடைக்காரனிடம் போய் கடன் தரும்படி மன்றாடினேன். அவன் பொல்லாத வார்த்தை களெல்லாம் சொன்னான். என்னுடைய சைக்கிளை விலைபேசி கடைக்காரனுக்கு விற்றேன். அவனுடைய கணக்கினை கழித்துக்கொண்டு மீதி ஆயிரம் மட்டும் தந்தான். இரண்டு நாட்களுக்கு வேண்டிய அரிசி, சாமான்களையும் மகளுக்கு ஒரு சோடி கிறீம் பணிசும் வாங்கிவந்தேன்.

போகும்போது சைக்கிளில் போய் வரும்போது நடந்துவந்த நிலைமையை வைத்து மனைவி ஊகித்துக் கொண்டிருப்பாளெண்டு எண்ணினேன்.

இரவு நித்திரை வரமறுத்தது. புரண்டு புரண்டு படுத்துக்கொண்டேன்...

"அண்ணை... அண்ணை..." கூப்பிட்டவாறு வந்தாள் என் தங்கச்சி. "வா தங்கச்சி என்ன திடீரென்டு வந்திருக்கிறியள்... எங்கை மச்சான் வரேல்லையோ" நான் கேட்டேன்.

"இவர் வரேல்லை அண்ணை, உங்களுக்கு லொத்தரிலை ஆறு கோடி ரூபாய் விழுந்ததாம். இவ்வளவு காசும் உங்களுக்கு தேவையில்லைத்தானே... எனக்கொரு ஐம்பது லட்சம் தாறியளோ..." தங்கச்சி கேட்டாள்.

நான் காசு கேட்டுப் போனபோது இல்லை எண்டு சொல்லி தூக்கி எறிந்து பேசிய தங்கச்சி, இப்ப என்னட்டை உதவி கேட்டு வந்திருக்கிறாள்... என்ரை கஸ்டம் துன்பத்தை பார்த்து கடவுள்தந்த பரிசு தான் இந்த ஆறு கோடி ரூபாயும். காசு, பணம், துட்டு இதைவிட உறவுகள்தான் முக்கியமெண்டு உணர்ந்தவன் நான்.

"சரி தங்கச்சி நீ நாளைக்கு வா... நான் காசு தாறன்" என்னுடைய வார்த்தையை கேட்ட என் உடன்பிறப்பு சந்தோசப்பட்டாள்... நாளைக்கு வருவதாக சொல்லிவிட்டு போய்விட்டாள்.

தங்கச்சிபோன கையோடு மனைவியின் அக்கா வந்தாள். "என்ன தங்கச்சி.. நீ இப்ப கோடீஸ்வரியாம். ஆறு கோடி பரிசு கிடைச்சிருக்குதாம்" பீடிகை போட்ட பேச்சுடன் வந்தாள் அவள்.

"நான் கஸ்டப்பட்டு கடன்காரரோடை போராடிக் கொண்டிருந்தபோது தூக்கி மிதிச்ச உறவுகளெல்லாம் இப்படி தேடி வருகுது.. அதிலை நீங்களும் ஒருத்திதானே அக்கா" மனைவி இப்படிச் சொன்னாள்.

உதையெல்லாம் மனசிலை வைச்சிருக்காதை தங்கச்சி. நீ என்ரை உடன்பிறப்பு எண்டபடியாலைதானே உன்னைத் தேடி வந்திருக்கிறன். நீ இப்ப எங்களை விடப் பணக்காரியாகிவிட்டாய் சந்தோசமாகக் கிடக்குது" சொன்னவள் என் மைத்துனி தான். "உறவுகள் இருக்குதெண்டுதான் உதவிகேட்டனான். ஒருத்தரும் உதவேல்லை. இப்ப நான், நீ எண்டு போட்டிபோட்டுக் கொண்டுவந்து நிக்கினம். பணம் பத்திலை பன்னிரண்டையும் கடக்கக் கூடியது என்பதை என்மனம் புரியாமல் இல்லை.

"நான் இப்ப வந்தது உங்களிட்டை உதவி கேக்கத்தான். எனக்கு ஒரு முப்பது லட்சம் தாருங்கோ... நான் பிறகு தாறன்.. பெரியளவிலை தொழில் செய்யப்போறம்... இல்லை எண்டு சொல்லமாட்டியள் எண்டு நம்புறன்" மைத்துனியின் வார்த்தைகளை நான் எதிர்பார்த்ததுதான்.

"அக்கா நாங்கள் ஒருபோதும் பணத்தை மதிக்கிறதில்லை, குணம்தான் கடைசி மட்டும் இருக்கும்... சரி நீங்கள் பிறகு வாங்கோ நாங்கள் காசு தாறம்" மனைவி சொன்னபோது நன்றி என்று கூறிவிட்டு மைத்துனி வெளியேறினாள்.

இன்னும் உதவிகேட்டு எத்தினை பேர் வரப்போகினமோ எண்டு என் மனம் சொல்லியது.

"நந்தன்... நந்தன் கூப்பிட்டவாறு வந்தார் சித்தப்பா.

"ஓம்" வாங்கோ சித்தப்பா....' கன காலத்துக்குப் பிறகு, வந்திருக்கிறியள்.. இருங்கோ" மதிப்பளித்தேன்.

"எங்கயடா தம்பி... வர நேரமிருந்தால் தானே அது சரி உனக்கு ஆறுகோடி பரிசு விழுந்திருக்குதாம். கேள்விப்பட்டன். நீ நல்லாயிருப்பாயெண்டு எனக்கு தெரியும். இவ்வளவு காசையும் வைச்சு என்ன செய்யப்போறாய் நந்தன். நான் மீற்றர் வட்டிக்குக் காசு குடுக்கிறனான். எனக்கு ஒரு கோடி ரூபாய் தந்தா யெண்டால் ஒரு வருஷத்திலை திருப்பித் தந்திடுவன்... மீற்றர் வட்டிக்கு குடுத்து நானும் உழைச்சிடுவன்" சித்தப்பா பேராசைப்பட்டார்.


"நீங்கள் உதவிகேட்டு வந்திட்டியள்.. இல்லை எண்டுசொல்ல எனக்கு மனம் வராது... நான் எதுக்கும் நாளைக்கு வாறன் சித்தப்பா" என்றேன் நான். சரி நான் போட்டுவாறன். சித்தப்பா போய்விட்டார்.

பார்த்தியளே, பணம் எங்களிட்டை கிடக்குது எண்டதும் நிறையப் பேர் வருகினம். நாங்கள் கஷ்டப்படும்போது உதவிசெய்ய வராத சொந்தங்கள் இப்ப வருகினம். இப்படியான சொந்தங்கள் ஒருபோதும் நிலைச்சு நிக்காது. எங்களிட்டையும் பிள்ளையள் இருக்கினம். வீடுகட்டி, பிள்ளையளுக்கும் வங்கியிலை போட்டு வைக்கவேணும்" மனைவியின் ஆலோசனையில் நியாயம் இல்லாமல் இல்லை. அவள்சொன்ன கருத்துக்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டேன்.

சாரதி சீலனும், மனிசியும் என்னை வெறுத்து ஒதுக்கின சொந்தபந்தங்கள் எல்லாம் உதவிகேட்டு வந்தனர். நான் ஒருத்தருக்கும் இல்லை எண்டுசொல்லேல்ல, இதனால் மனைவிக்கும் எனக்கும் சண்டை மூண்டது. எவ்வளவோ சொல்லப் பாத்தன்.. மனிசியோ விடாப்பிடியாக கத்திக் கொண்டிருந்தாள்.

எனக்குக் கோபம் தலைக்கேறியது! ஒரு காலமும் கைநீட்டி அடிக்காத மனைவிக்கு அடிக்கக் கையை ஓங்கினேன்... அவ்வளவுதான் மறுகணம் நான் கட்டிலுக்குக் கீழே விழுந்து கிடந்தேன்.. இவ்வளவு நேரமும் கண்டது கனவு எண்டது எனக்குப் புரிந்தபோது கனவில் நடந்த சம்பவங்களையும் வந்துபோன சொந்தங்களையும் ஒரு கணம் எண்ணிக்கொண்டேன். ■

சிரிப்பதற்கு...



சீக்கிரம் புறப்படுடா. பொண்ணு பார்க்கப் போக நேரமாயிடுச்சுல்ல!

இல்லம்மா. எனக்கு பசியே இல்ல. இன்னொரு நாளைக்கு போலாமே!



# “நம்பிக்கை வையுங்கள் எங்களால் முடிந்தளவு செய்வோம்”

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர்

**“மாண்புமிகு** ஜனாதிபதி அவர்களுடைய ஆணைக்கு உட்பட்டு, காணாமல் போனவர்கள் பற்றிய விசாரணையை மேற்கொள்வதற்காக வந்திருக்கின்றோம். இந்த விசாரணை ஆணைக்குழுவிலே முழுநம்பிக்கை வையுங்கள். எங்களால் உங்களது துயரநிலைமைக்கு உதவக் கூடிய அனைத்தையும் முடிந்தளவு செய்வோம்.” இவ்வாறு காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பராக்கிரம பரணகம தெரிவித்தார்.

காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையின் கிழக்கு மாகாணத்திற்கான முதலாம் அமர்வு 20.03.2014 கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

அங்கு விசாரணைக்கு வந்திருந்த காணாமல் போனவர்களின் உறவினர்கள் மத்தியில் ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பராக்கிரம பரணகம உரையாற்றினார்.

காணாமல்போன உங்களது உறவினர்கள் பற்றி நீங்கள் எங்கள் முன் வைக்கின்ற முறைப்பாடுகளை நாங்கள் மிகக்கவனமாகவும் ஆழமாகவும் பரிசீலனை செய்து அது விடயமாக நாங்கள் உரிய மேல் நடவடிக்கை எடுப்போம்.

நீங்கள் இந்த ஆணைக்குழுவிடம் வாக்குமூலங்களை அளிக்கும்பொழுது ஏதாவது அச்சுறுத்தல்கள் அல்லது இடையீடுகளை யார் மேற்கொண்டாலும் அதுபற்றி எமக்கு அறியத்தாருங்கள். அவ்விதம் இடையீடுகளை மேற்கொள்வோர் குறித்து நாம் துரிதமாக நடவடிக்கை எடுப்போம்.

உங்களது இந்தத் துயரமான சூழ் நிலையிலே உங்களது நிலைமைகளைப் பற்றி ஆராய்ந்து அறிக்கையிடுமாறு கௌரவ ஜனாதிபதியவர்கள் இந்த ஆணைக்குழுவைப் பணித்துள்ளார்கள்.

எனவே ஆணைக்குழு உங்களிடம் கேட்கின்ற கேள்விகளுக்கு எதுவித தயக்கமும் தடையுமின்றி மிகத் தெளிவான பதில்களை நீங்கள் தரவேண்டும். அதன் மூலமாகத்தான் உங்களுக்கு ஏற்பட்டுள்ள துயர நிகழ்வுகளை நாங்கள் சரியாக அறிக்கை செய்து அதன்மூலமாக உங்களுக்கு உதவமுடியும். என்றார் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பராக்கிரம பரணகம.

அதேவேளை எந்த மக்களின் உரிமை என்று கோஷமிட்டு உணர்ச்சியூட்டி தமது உறவுகளைப் போராட்டத்தில் இணைத்து அவர்கள் காணாமல்போவதற்கும் குரூரமாகக் கொலை செய்யப்படுவதற்கும் காரணமாக இருந்தார்களோ, அவர்கள் இன்று அரசோடு ஒட்டிக்கொண்டு தங்களால் பாதிக்கப்பட்ட மக்களைத் திரும்பியும் பாராமல் சொகுசு வாழ்க்கை நடத்துகின்றார்கள்.

கிரானில் றெஜி ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் தமது உறவுகள் காணாமல்போன விடயத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்த மக்கள் இந்த துயரத்தை வெளிப்படுத்தினார்கள்.

அங்குதான் காணாமல் போனோர் தங்களது உறவுகள் காணாமல் போவதற்கும் கடத்தப்படுவதற்கும் யார் காரணகர்த்தாக்களாக இருந்தார்களோ அவர்களால் அவர்களது சகபாடியின் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு இடத்தில் காணாமல்போனோர் பற்றிய விசாரணை இடம்பெற்றது தங்களுக்கு மனஉளைச்சலைத் தந்தது என்று பலரும் ஆதங்கப்பட்டார்கள்.

றெஜி ஞாபகார்த்த மண்டபத்திற்குப் பக்கத்தில் வசிக்கும் நவரெட்ணம் ஞானம்மா (வயது 43) ஆணைக்குழுவிடம் இவ்வாறு சாட்சியமளித்தார்.

“எல்.ரீ.ரீ.ஈ.-யினரால் 15 வயதில் பலவந்தமாகப் பிடித்துக் கடத்திச் செல்லப்பட்டு இன்று காணாமல் போயிருக்கும் எனது மகனுக்கு அப்போது வெறும் நாற்பது நாட்கள் மட்டும்தான். என் பச்சிளம் குழந்தை கையில் இருக்கும்போது என் கண்முன்னாலேயே எல்.ரீ.ரீ.ஈ.-யினர் என் கணவரைப் படுகொலை செய்தார்கள், அவரது சடலத்தைக் அடக்கம் செய்யத் தருமாறு கெஞ்சிக்கேட்டு மன்றாடினேன். அவர்கள் தரவில்லை. சடலத்தை என்ன செய்தார்கள் என்றே தெரியாது.

பின்னர் என் மகன் பதினைந்து வயதாக இருக்கும்போது அவரையும் போருக்கு ஆள் பிடிக்கும் சந்தர்ப்பத்தில் 2005.06.08 ஆம் திகதி கடத்திக்கொண்டு போய்விட்டார்கள். இப்பொழுது என் மகன் இல்லை.

என் மகன் பிறந்தபோது எனது கணவரையும் எல்.ரீ.ரீ.ஈ யினரே கொன்றொழித்தார்கள், பின்னர் என் மகன் வளர்ந்து 15 வயதானபோது அவனையும் கடத்திச் சென்று இல்லாது ஒழித்துவிட்டார்கள்.

ஒட்டுமொத்தத்தில் என் குடும்பத்தையே அவர்கள் கருவறுத்துவிட்டார்கள். ஏன் என் குடும்பத்தை இவர்கள் சீரழித்தார்கள் என்று இதுவரை எனக்குப் புரியவில்லை. இன்று என் துயரத்தைக் கேட்க எவருமில்லை. அரச உதவியாக மாதம் நூற்று ஐம்பது ரூபாய் சமுர்த்தி வங்கியில் போட்டிருப்பதாகச் சொல்கின்றார்கள். அதுவும் என் கைக்கு இதுவரை கிடைக்கவில்லை, எனக்கு எந்தவித உதவிகளும் இல்லை” என்று தனது துயரத்தை வெளியிட்டார் ஞானம்மா. இவரது துயரக் கதை எல்லோர் மனதையும் நெகிழ வைத்தது.

இதுபோன்று பல்வேறு நெஞ்சை உருக்கும் சோகக் கதைகள் ஆணைக்குழுவின் முன்வந்தன.

1990ம் விஷேட அதிரடிப்படையினரால் ஒரே தினத்தில் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்ட தனது மூன்று பிள்ளைகள் தொடர்பாக 24 வருடங்களாகியும் எவ்வித தகவல்களும் இதுவரை இல்லை என 9 பிள்ளைகளின் தாயாரான பொத்துவிலை சேர்ந்த மகேஸ்வரி ராஜநாதன் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில்

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

சாட்சியமளித்துள்ள அவர் தனது மூன்று பிள்ளைகளில் 13 மற்றும் 16 பிள்ளைகள் இருவரும் பாடசாலை மாணவர்கள் என்றும் கண்ணீர் மல்க கூறினார்.

1990-ம் ஆண்டு இலங்கை இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையில் மீண்டும் மோதல் காரணமாக தானும் தனது பிள்ளைகளும் பொத்துவில் சிங்கள மகா வித்தியாலய முகாமில் தஞ்சம் பெற்றிருந்ததாக கூறினார்.

12.07.1990 அன்று பொலிஸ் ஜீப்பில் வந்த விஷேட அதிரடி படை அதிகாரி ஒருவரால் அழைத்துச்செல்லப்பட்ட பிள்ளைகள் பற்றி இதுவரை தகவல்கள் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மற்றுமோர் சாட்சியான திருப்பெருந்துறையை சேர்ந்த ஜேசுதாசன் எலிசபெத்,

1990-ம் ஆண்டு 16 வயது பாடசாலை மாணவனான தனது மகன் வீட்டிலிருந்த வேளை இராணுவத்தினராலும் ரெலோ அமைப்பினராலும் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் காணாமல் போயுள்ளதாககூறினார்

1990ஆம் ஆண்டு குருக்கள்மடத்தில் புலிகளால் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ள 150இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தொடர்பாகவும் இரு முஸ்லிம்களின் சாட்சியங்களை ஆணைக்குழு பதிவு செய்தது.

இதனையடுத்து விசாரணைகள் முடிந்த பின்பு ஆணைக்குழு பிரதிநிதிகள் அந்த இடத்தையும் குறித்த முஸ்லிம்களின் சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் கடலோரப் பகுதியையும் சென்று பார்வையிட்டனர்.

“புலிகள் அமைப்பில் இணைக்கப்பட்ட பின்னர் காணாமல்போயுள்ள தனது பிள்ளைகள் தொடர்பில் கருணா அம்மான் தான் பொறுப்பு கூறவேண்டும்” என ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த

**“எந்த மக்களின் உரிமை என்று கோஷமிட்டு உணர்ச்சியூட்டி தமது உறவுகளைப் போராட்டத்தில் இணைத்து அவர்கள் காணாமல் போவதற்கும் குரூரமாகக் கொலை செய்யப்படுவதற்கும் காரணமாக இருந்தார்களோ, அவர்கள் இன்று அரசோடு ஒட்டிக்கொண்டு தங்களால் பாதிக்கப்பட்ட மக்களைத் திரும்பியும் பாராமல் சொகுசு வாழ்க்கை நடத்துகின்றார்கள்.**

**காணாமல்போன உங்களது உறவினர்கள் பற்றி நீங்கள் எங்கள் முன் வைக்கின்ற முறைப்பாடுகளை நாங்கள் மிகக்கவனமாகவும் ஆழமாகவும் பரிசீலனை செய்து அது விடயமாக நாங்கள் உரிய மேல் நடவழக்கை எடுப்போம்.”**



57 வயதான தந்தையொருவர் தெரிவித்துள்ளார்.

புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகளில் ஒருவராக விளங்கிய கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தற்போது அரசாங்கத்தில் மீள்குடியேற்ற துணை அமைச்சராக பதவி வகித்துவருகின்றார்.

களுவன்கேணியைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை தங்கராசா அவர்கள், கருணா அம்மானின் “வீட்டுக்கு ஒரு பிள்ளை” என்ற திட்டத்தின் கீழ் அவரது ஆட்களினால் தனது இரு பிள்ளைகளும் பிடித்துச் செல்லப்பட்டதாகக் கூறுகின்றார்.

சிறுவயதிலே பிடித்துச் செல்லப்பட்ட தனது இரு பிள்ளைகள் தொடர்பில் அவர் தான் பதில் தரவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனது தந்தை 1990-ம் ஆண்டு கடத்தப்பட்டது தொடர்பில் அன்று புலிகளின் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக இருந்த இன்றைய பிரதியமைச்சர் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரை விசாரணை செய்து எனது தந்தை கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ள இடத்தினை தோண்டி இஸ்லாமிய மார்க்கப்படி அடக்கம் செய்ய காணாமல் போனோரை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு உதவவேண்டுமென காத்தான்குடியைச் சேர்ந்த ஆதம்பாவா முகம்மது றியாஸ் என்பவர் காணாமல் போனோரை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

இதன்போது தொடர்ந்து சாட்சியமளித்த றியாஸ் எனது தந்தை கலந்தர் லெவ்வை ஆதம்பாவா கடத்தப்படும்போது அவருக்கு 39 வயதாகும்.

12.07.1990 அன்று எனது தந்தை மட்டக்களப்பு குருக்கள் மடம் எனும் இடத்தில் வைத்து புலிகளினால் கடத்தப்பட்டு அன்றிரவே கொலை செய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தின் அம்பளாந்துறை, குருக்கள் மடம் பகுதியில் வைத்து புலிகளினால் கடத்தப்பட்டுள்ளதாக அறிந்தோம்.

எனது தந்தை கடத்தப்பட்ட அந்த நாளில் அதே இடத்தில் வைத்து நூற்றுக்கு மேற்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்தோரும் ஓட்டமாவடி மற்றும் ஏறாவூரைச் சேர்ந்தவர்களும் புலிகளினால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். தந்தை கடத்தப்பட்ட பின்னர் பொருளாதார ரீதியாக எங்களது குடும்பம் மிகவும் கஷ்டங்களை எதிர்நோக்கியது.

எனது தந்தை கடத்தப்படும்போது புலிகளின் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக இருந்தவர், இன்றைய பிரதியமைச்சர் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோராகும்.

இவர்களை விசாரணை செய்து எனது தந்தை கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ள இடத்தினை தோண்டி எடுத்து தந்தையின் உடலை இஸ்லாமிய மார்க்கப்படி அடக்கம் செய்ய உதவ வேண்டுமென அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த மூன்று நாட்கள் அமர்வுக்கு அழைக்கப்பட்ட 162 சாட்சிகளில் 132 பேர் சாட்சியமளித்ததாக 1287 பேர் புதிதாக முறைப்பாடுகளை செய்துகொண்டதாக ஆணைக்குழுவின் செயலாளரான எஸ்.டப்ளியூ குணதாச கூறினார்.

சாட்சிகளில் மூன்று பேர் இரகசியமாகவும், ஏனையோர் பகிரங்கமாகவும் சாட்சியங்களை அளித்தனர்.

சாட்சியங்களை ஆராய்ந்து விசாரணைகள் மேற்கொண்டு அதன் பின்னர்தான் இதற்கு பொறுப்பானவர்கள் யார் என்பது தொடர்பில் தீர்மானிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்த அமர்வு, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சி பிரதேச செயலகத்தில் எதிர்வரும் ஏப்ரல் 7,8,9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கௌரவமில்லாத கருவிகள்



ஆளவந்த
ஆங்கிலேயத்
தளபதிக்கு ஆடவந்த
மயில்மேல் மையல்!

அவள் ஆடினாள்
அவன் ஆடிப்போனான்!

"வெள்ளைக் கொக்குகள்
எத்தனையோ
பார்த்திருக்கிறேன்
இந்தக் கறுப்புக்
கொக்குக்கு எவளும்
நிகரில்லை!" என்றான்
அருகிலிருந்தவனிடம்!"

அருகிலிருந்தவன்
எட்டப்பன்!
வெள்ளைத் துரைகள்
சொந்தப் பெண்களை
கொள்ளையடிக்க
சொல்லித் தருபவன்!

அழகான பெண்களை
வெள்ளை
எஜமானர்களுக்கு
அறிமுகம் செய்து
காரியம் பார்ப்பவன்!

சொந்தப் பெண்களை
துகிலுரிவதை
வெட்கமில்லாமல்
வேடிக்கை பார்ப்பவன்!

அவனிடம்தான்
ஆடல் அழகியின்
அழகைப் புகழ்ந்தான்

ஆங்கிலேயத் தளபதி!
பூங்கனித் தோட்டம்!"

காட்டிக் கொடுத்தான்
காரிகை அழகுகளை!
கூட்டிக் கொடுத்தேனும்
இலாபம் ஈட்டிக்
கொள்வதற்கு
தயங்காதவன்.

குலுங்குவது மாங்கனி
துள்ளுவது தேன்கனி
கைக்கெட்டும் கனியினை
கொய்யுங்கள் பசிதீர...!

அழகியும் பாடி
மோகத் தீ ஊட்டினாள்
ஆங்கிலேயத் தளபதிக்கு
அவள் பாடலை
மொழிபெயர்த்தான்



கெட்டப்பனான
எட்டப்பன்!
துதிபாடும் தொழில்
புரிவதற்காகவே
அவர்களது மொழி
படித்தவன் அவன்!
வால் பிடிப்பதற்காகவே
அவர்களது வரலாறும்
படித்தவன்!

"எட்டப்பா!
'கெட் அப்'பனா
குட்டியப்பா!
'குட்' அப்பாவாகிவிட்டாய்
'மை' எட்டப்பா!
'செட்டப்பு' செய்வதிலும் நீ
கெட்டியப்பா!
ஆங்கிலம் கலந்த தமிழில்
தளபதி புகழ்ந்தான்!

எட்டப்பன் வில்லாய்
வளைந்து மனுக்
கொடுத்தான்!
"காணி நிலம் வேண்டும்
பொன் பொருள் வேண்டும்
என்றும் உமது அருள்
எனக்குவேண்டும்
வேண்டும்"

தளபதிக்கு இலக்கிய
பரிச்சயம் இருந்தது.
'மிஸ்டர் பாரதி
பராசக்தியிடம் கேட்டதை
நீ என்னிடம் கேட்கிறாய்!
எட்டப்பன் குனிந்தான்
தலை தரை தொட்டது.
பராசக்தி என்ன பராசக்தி
பாருக்குள் பெரிய சக்தி
நீங்கள் தானே!"
என்றான்.

மக்களை கைவிடலாம்
மானத்தைக் கைவிடலாம்.
அள்ளித் தரும் தங்களை
ஆங்கிலேயர் பேரரசை
கைவிட மனம் வருமா?"

"சீ நாயே! ஆகாத
செயல்கள் உனக்கெதற்கு?
பெற்ற தாயை விற்று பெறும்
பொன் எதற்கு?"

நடன மங்கையின்
குரல் பின்னால் இருந்து
ஒலித்தது! இருவரும்
அதிர்ந்தனர் - குறும்
துப்பாக்கி ஒன்று அவள்
கரம் இருந்தது.

எட்டப்பனை நோக்கி குறும்
துப்பாக்கி சீறியது. குருதி
வெள்ளத்தில் கறையென
சரிந்தான்!

தோட்டா காலியாகி
விட்டது தளபதியைச்சுட
தோட்டா இல்லை!
தளபதி கூறினான்
"நல்லது பெண்ணே
தப்பிப்போ! உன் வீரத்தை
மெச்சினேன்!
உன் நாட்டுக்காக
விபசாரம் செய்யவும்
துணிந்ததை
மதிக்கிறேன்!"
அவளுக்கு ஆச்சரியம்
'உன்னவன் ஒருவன்
செத்துமா என்னை
விடுகிறாய்?"

"என்னவன் என்று
சொல்லாதே காட்டிக்
கொடுப்பவர்களை
நாங்கள்
பயன்படுத்துவதுண்டு
போராடுகிறவர்களை
மட்டுமே மரியாதை
செய்வதுண்டு.

கருவிகள்
உபயோகத்துக்கானவை
கௌரவத்துக்
குரியவையல்ல!
அம்புகள் எய்வதற்கானவை
பத்திரப்படுத்துவதற்கானவை
அல்ல - தளபதி
நகைத்தான்.

அவள் விலகிப்போனாள்
தளபதி எட்டப்பனை
நோக்கினான் வேரற்ற
மரமாகக் கிடந்தான்.

ஆகாத செயல்களை
செய்து பயன் கண்டாலும்
அச்செயல்களே
ஒருநாள் துன்பமும் தரும்"

**"கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம் முடிந்தாலும் பிழை தரும்!"** *அதிகாரம்:66 குறள்:658*




**இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவளிக்குமென பிரிட்டன் பிரதமர் தெரிவித்துள்ளாரே. இலங்கையின் நிலைமை என்னாகப்போகிறது சிந்தியா?**

**ஆர்.றெஜினா, மன்னார்.**

இலங்கைக்கு பிரேரணையை வெற்றி கொள்ளமுடியாது என்பது இலங்கை அரசுக்கு நன்றாகவே தெரியும். அதற்காக அமெரிக்கா தலைமையிலான சர்வதேச நாடுகளின் அடிமையாகிவிடவும் முடியாது என்பதே இலங்கை அரசின் நிலைப்பாடாக உள்ளது. பிரேரணை இலங்கைக்கு எதிராக வெற்றியடைந்தாலும் அது உடனடியான தாக்கத்தைக் கொடுக்காது என்பதை இலங்கை அரசு புரிந்துகொண்டுள்ளது.

**சிந்தியா! வடக்கில் இராணுவத்தின் சோதனைகள் அதிகரித்துள்ளதே?**

**டி.டிலுக்ஷன், கண்டாவளை.**

உங்களின் கேள்வியைப் பார்க்கும்போது யுத்தத்திற்குப் பின்னர் சுமார் ஐந்து ஆண்டுகளாக வேலைவெட்டி இல்லாமல் இலங்கைப் படைகள் இருந்ததால் சோர்வடைந்துவிட்டார்கள் என்பதால், அவர்களுக்கு பயிற்சியாக இருக்கட்டுமே என்று சோதனைகளை ஆரம்பித்திருப்பதுபோல் உள்ளதே. மீண்டும் புலிகளை மீள் கட்டமைக்க எத்தனிக்கும் தமிழ்த் தேசியவாதிகளின் ஜெனிவா காய்ச்சலையும், கோபி மற்றும் அப்பன் போன்றவர்களின் செயற்பாடுகளையும் வசதியாக மறந்துவிட்டீர்கள்போல் உள்ளதே.

**சிந்தியா! இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தோற்கும் என்கிறாரே கருணாநிதியின் மகன் அழகிரி?**

**என்.லன்சிகா, பொரளை.**

தி.மு.க விலிருந்து அவரை வெளியேற்றிய அப்பா கருணாநிதியும், தம்பி ஸ்டாலினும், பொதுச் செயலாளர் அன்பழகனும் தற்போதைய அழகிரியின் பரமவிரோதிகளாகிவிட்டதால் தி.மு.க. பாரிய சரிவொன்றைச் சந்திக்க வேண்டுமென்று அழகிரி விரும்புகின்றார். அரசியலில் புறக்கணிப்பை எதிர்கொண்டிருக்கும் அழகிரியின் கோபம் நியாயமானதுதானே.

**சிந்தியா! பங்களாதேஷில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ண T-20 போட்டியில் அசத்தப்போகும் அணி எதுவாக இருக்கும்?**

**பொ.அச்சுதன், வேப்பங்குளம்.**

ஆசியக் கிண்ணப்போட்டியில் அசத்திய நமது இலங்கை அணியினரே T-20 யிலும் அசத்துவார்கள் என்று அவதானிகள் கூறுகின்றார்கள்.

**சிந்தியா! அரசியல் நீரோடையில் இறங்கியவர்கள் எப்போதும் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர வெளியேற முடிவதில்லையே?**

**இ.ஸ்ரீசுதன், புலோலி.**

அரசியல் அப்படியொரு பாதாளக் கிணறாகிவிட்டிருக்கின்றது. வெளியேறுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. இது காமராஜர் காலத்து அரசியல் அல்லவே இது. இது... நான் சொல்லமாட்டேன். அதை மட்டும் நான் சொல்ல மாட்டேன்...

**என்ன சிந்தியா! ஸ்ருதி ஹாசனின் கிளாமருக்கு அளவே இல்லை போல் தெரிகிறதே?**

**த.கௌதமன், காலி.**

ஏன் உங்களுக்கு இவ்வளவு கோபமாக இருக்கின்றது.

**சிந்தியா! மர்மமான மலேஷிய விமானத்தின் மர்மம் தொடர்கிறதே?**

**எம்.எஸ் மசாஹிர், தர்ஹாநகர்.**

தற்போது அவுஸ்திரேலியாவின் பேர்த் நகருக்கு வட மேற்கே இரண்டாயிரத்து ஐநூறு கடல் மைல் தொலைவில் கடலில் கண்டெடுக்கப்பட்ட சிதைவுகள் மர்மமான மலேசிய விமானத்தின் சிதைவுகள் என நம்பப்படுகின்றது. ஆகவே மலேசிய விமானம் விபத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது என்ற முடிவுக்கு வரமுடியுமென மலேசிய அதிகாரிகள் கூறியிருக்கின்றார்கள். இருந்தபோதும் விஞ்ஞானமும், தொழில்நுட்ப வளர்ச்சியும் உச்சமடைந்துள்ள தற்போதைய காலத்தில் மலேசிய விமானத்துக்கு நடந்தது, இவற்றுக்கு சவால் விடும் சம்பவம்தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

**சிந்தியா! ஆணும், பெண்ணும் சேர்ந்து பழகுவதை சமுதாயம் தப்பாக எண்ணுகிறதே..?**

**எம்.ஜோசுவா, கொழும்பு -15.**

உங்கள் கேள்வியே முழுமையடையாமல் உள்ளதே. இப்படி அரை குறையாகவும், மூடமந்திரமாகவும் ஆணும் பெண்ணும் பழகினால் சமுதாயம் தப்பாகத்தானே நினைக்கும்.

(04ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## வன்னிக்குள் புலிகள்...

புலம்பெயர்ந்து வாழும் புலிகளுக்கும் புலிகளின் பெயரால் பணச்சுகம் அனுபவிப்பவர்களுக்கும் இலங்கையில் அரசுக்கு சவால்விட்டு, வம்பு செய்வதில் ஆர்வம் உண்டு. இதில் வேடிக்கை என்னவென்றால், கோபி என்பவர் தீவிர புலி ஆதரவாளராக இருந்தபோதும் ஆயுதப் பயிற்சி பெற்ற புலியாக அவர் இருந்ததாக தகவல்கள் உறுதிசெய்யவில்லை. அதுபோல் அப்பன் என்பவரும் புலி உறுப்பினர் அல்லவென்றும் அவரது இரண்டு சகோதரர்கள் புலிகள் அமைப்பிலிருந்து பலியானவர்கள் என்றுமே தகவல்கள் கூறுகின்றன.

இவற்றைப் பார்க்கின்றபோது, புலிகளின் மீள் உருவாக்க முயற்சியானது அடிப்படையற்ற சிலரினால் முன்னாள் புலிகளையும், புலிகளோடு நெருக்கமானவர்களை இலக்காகக் கொண்டு திட்டமிடப்பட்ட ஒரு நாடகமாகவே தெரிகின்றது. ஆகவே இவ்வாறான ஒரு முன்னெடுப்பு ஈடு செய்யமுடியாத அழிவுகளை சந்தித்த தமிழ் மக்களை மீண்டும் ஒரு நெருக்கடிக்குள் தள்ளிவிடவே வழிசெய்யும் என்பது நிதர்சனமாகும்.

இச்செயலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை கண்டிக்கவில்லை. மாறாக இதை அரசின் நாடகமாகவும், படையினரின் அடாவடித்தனமாகவுமே கூறிவருகின்றனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி கடந்த வாரம் ஒரு அறிக்கையில் இவ்வாறான சூழலைத் தோற்றுவிக்க முயற்சிப் போரின் செயற்பாடுகளை கண்டித்திருந்ததோடு, மக்களும் விழிப்பாக இருப்பதன் ஊடாகவே நெருக்கடிகளை தூரப்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறியிருந்தது.

ஜெயக்குமாரியின் வீட்டில் நடந்த சம்பவத்துக்குப் பின்னர் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என்று கூறப்படுகின்ற இருவர் ருக்கி பெர்னாண்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் ஆகியவர்கள் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் குற்றவாளிகளுடன் தொடர்பில் இருந்தவர்கள் என்றும், அவர்கள் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச நிறுவனங்களுக்கு பக்கச்சார்பான தகவல்களை வழங்குகின்றவர்கள் என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றது.

ஆகவே, இலங்கை அரசுக்கு எதிரான சர்வதேச சக்திகளின் சதிக்குள் சுயபுரிதலின் அடிப்படையில் பல்வேறு போர்வை அணிந்திருப்போர் ஈடுபட்டுவருவதை சம காலத்தில் காலம் அம்பலமாக்கியுள்ளது. ஆகவே யாருடைய விருப்பு வெறுப்புக்கும் தமிழ் மக்கள் பலியிடப்பட்டுவிடக்கூடாது. ஆகவே தமிழ் மக்கள் மிகுந்த விழிப்புடன் இருப்பது அவசியமாகும். மீண்டும் புலிக்கதை என்பது அரசியல்வாதிகளுக்கும், மக்களை ஏமாற்றி வயிறு வளர்ப்போரும் சுவாரஷ்யமாக இருக்கலாம். தமிழ் ஊடகங்களுக்கும் வர்த்தகரீதியான மகிழ்ச்சிக்குரியதாக இருக்கலாம். ஆனால் இழப்புக்களை எதிர்கொண்டு மீண்டும் எழுந்து நிற்கப் போராடும் தமிழ் மக்களுக்கு விருப்பத்துக்குரியதல்ல.


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன்,
தேச பந்து, கலாநிதி,
பேராசிரியர்,
P.K.சாமி JP ஐயா

## மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்டத் தெளிவான ஜாதகக் குறிப்புக்களுக்கு...

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13. Tel : 011 2342463/4, 011 2470615
Fax : 011 2344831 E-mail : drpksamy@sltnet.lk

நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்று மில்லை."

நாடாளும் மன்னன் அவன். அவன் பெயர் மூன்றாம் குலோத்துங்கன். பொதுவாக நாடாளும் மன்னர்கள் தங்கள் அரண்மனை வளாகத்தில் பேணிக்காப்பது போன்று அவனது அரண்மனையிலும் ஓர் அழகிய அந்தப்புரம்.

அங்கு நீண்டகாலமாக இருந்து கோமகனுக்குத் தேவையான பணி விடைகளைச் செய்துவருபவர் ஒரு அழகிய நங்கை. அங்கு அவள் வந்து ஆண்டுகள் பல ஓடியதால் மூப்புக் கொஞ்சம் அவளை எட்டிப் பார்க்கத் தொடங்கி விட்டது. இந்நிலையில் அந்தப்புரம் வந்துசேர்ந்தாள் இளநங்கை ஒருத்தி.

இருவருக்குமே மன்னவனை தங்கள் மஞ்சத்தில் அதிகம் தங்கவைப்பது யார் என்பதில் பனிப்போர் ஒன்று உருவாகி இருந்தது.

புதிதாய் வந்த நங்கை, மூத்தவளை வெட்டிவிட்டு முழுமையாக தன் கைக்குள் போட்டுக்கொள்ள தன்னிடம் கொட்டிக்கிடந்த அஸ்திரங்கள் அனைத்தையும் தட்டிக்கொடுத்தாள்.

மன்னவனுக்கும், மூப்படைந்த நங்கைக்கு ஓய்வு கொடுக்கவேண்டும் என்று உள்ளூர விருப்பம் இருந்தது. [illegible]ளை ஓரம்கட்டும் முயற்சிகளில் [illegible]படலானான்.

இந்நிலையில் தன்னை அந்தப் புரத்தில் இருந்து தள்ளிவிட முயற்சிகள் பல நடப்பதை மூத்தவள் அறிந்து கொண்டாள். அதற்காய் நடக்கும் சூட்சுமங்களைப் புரிந்துகொண்டாள்.

தனக்கெதிராய் மன்னவனின் அண்மைய செயற்பாடுகளும் அதற்கு ஊதுகுழலாய் பின்னால் நிற்கும் புதியவளின் ஆரோகணமும் தொடருமாயின் தனது அந்தப்புர வாசத்திற்கு முடிவு கட்டப்பட்டுவிடும் என்பதை மூத்தவள் புரிந்துகொண்டாள்.

எனவே சதிக்கெதிராய் காய்நகர்த்த திடசங்கற்பம் பூண்டுகொண்டாள். என்ன செய்யலாம்? மூத்தவள் யோசித்தாள்.

நீண்டகாலமாய் அந்தப்புரத்தில் [illegible]ரங்க அலுவல்களைப் பார்ப்பவளாய் மன்னவனின் மஞ்சத்துள் மலர் விரித்தவளாய் இருந்தமையால் அங்கிருக்கும் மந்திரியர் தொடங்கி சேனாதிபதிகள், படைக்கலச் சேவிதர்கள் என கடைநிலை ஊழியர்வரை அனைவரிடம் அன்பைப் பெற்றிருந்தாள். அது அவளுக்குப் பலமாகவே இருந்தது. அதனைப் பயன்படுத்தியே மன்னவனின் திட்டத்தையும் புதியவளின் சூழ்ச்சியையும் முடிவுக்குக் கொண்டுவர முடிவு கட்டினாள்.

தன்னுடன் நெருக்கமான மந்திரிகள் சிலரையும் சேனாதிபதிகளின் ஒருவரையும் அழைத்து தனது திட்டத்தை அறிவித்தாள். அதற்கு அவர்களின் உதவியையும் இறைஞ்சி நின்றாள்.

தம்மோடு நீண்டநாள் பழகிய ஒருத்தியைக் காலிசெய்ய, நேற்று வந்தவள் எடுக்கும் முயற்சிக்காய் மூத்தவளுக்கு உதவிசெய்ய அவர்களும் தலையசைத்தனர். திட்டம் தயாரானது. புதிதாய் வந்தவள் தன் மஞ்சத்தை மன்னவனுக்குப் பதிலாய் மந்திரிமாருக்கும் சேனாதிபதிக்கும் பகிர்ந்துகொள்ள ஆவலாய் இருப்பது போன்றும் அவர்களை வலிந்து இழுத்து வலையில் வீழ்த்த முயற்சிப்பது போன்றும் அந்தப்புரத்தில் காட்சிகள் அரங்கேற்றப்பட்டன.

இதனை மெய்யென எண்ணிய மன்னன் திகைத்தான். புதியவள்மீது சினங்கொண்டு எழுந்தான்.

"எனக்கென வந்தவள் நீ. என் முன் கை கட்டி நிற்பவரெல்லாம் கை வைத்து விளையாடும் மைதானமாய் இங்கிருக்க அனுமதியேன். பட்டத்து இளவரசியாய் அழைத்துவந்த நீ பக்கத்தில் உள்ளவர்கள் எல்லோருக்கும் தஞ்சம்கொடுக்கும் மஞ்சமாய் இருக்கிறாயே..." என்று சீறினான்.

ஏதும் புரியாமல் திகைத்து நின்றாள் புதியவள். சற்று நிமிடத்தில் எல்லாம் மூத்தவள் பண்ணிய காரியம் என்பதை அறிந்துகொண்டாள். அவளிடம் ஓடினாள்.

"வயதால் மூத்தவள் நீங்கள். ஒரு பெண்ணுக்கு களங்கம் வரும்வகையில் அவள் பண்புக்கு அசிங்கம் பண்ணும் காரியத்தைச் செய்திருக்கிறீர்களே! இதனால் என்னுடைய கௌரவம், என்னுடைய வாழ்வு எல்லாம் நரகத்துள் தள்ளப்பட்டுவிட்டது. இவ்வாறு எனது வாழ்க்கையை அசிங்கத்துக்குள் தள்ளக் காரணம் என்ன? உங்கள் மனச்சாட்சி இடம்கொடுத்ததா அதற்கு?" கேள்வியால் தொடுத்தாள்.

அமைதியாய் நின்ற மூத்தவள் சொன்னாள்...

"என்னைப் பற்றி நீ யோசித்தாயா? என் மன்னவனுக்கும் எனக்கும் ஏற்பட்ட உரசலை விரிசலாக்கி மன்னவனிடம் இருந்து எனக்குத் தண்டனை பெற்றுத் தரவேண்டும். என்னை வில்லங்கத்துள் மாட்டி வைக்கவேண்டும் என்றெல்லாம் நீ சூட்சி செய்தாய். உங்களிடம் இருந்து என்னைப் பாதுகாத்துக்கொள்ள உன்மீது பழிசுமத்தி உன்னைக் களங்கப்படுத்தி உன் நிம்மதியைக் குலைத்து என்னைப் பாதுகாத்துக் கொள்வது தவறு என்று நான் நினைக்கவில்லை. நீயும் நானும் ஒற்றுமையாக அவரவர் கௌரவம் பாதுகாக்கப்படும் வகையில் வாழ்வோமானால் மற்றவர் புகுந்து அந்தப்புரத்தில் தங்கள் சண்டித்தனத்தைக் காட்டமாட்டார்கள் அல்லவா...?

(இது ஒரு நாடகம். தனியார் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்ட இந்த நாடகத்தை பார்த்துக்கொண்டே மேசையில் இருந்த நாளிதழ் ஒன்றைத் தட்டிப் பார்க்கிறார் காதிலை பூ கந்த சாமி. அந்த நாளிதழின் தலைப்புச் செய்தி "வன்னியில் மீண்டும் சுற்றி வளைப்பு, சந்தேகத்தின் பேரில் பலர் கைது" என்று தொடர்கிறது. மனதுக்குள் சிரித்துக்கொள்கிறார் கந்தசாமி.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

# சத்ரபதி சிவாஜி



சிவாஜின் இளமைப்பருவம் புனா மாவட்டத்திலேயே கழிந்தது. அதன் மேற்குப் பகுதியை மாவல் என்று அழைத்தனர். அதாவது சூரியன் அஷ்மிக்கும் இடம் - நாடு என்று பொருள் - இங்கு நாகரிகமற்ற 'கோலி' என்ற பழங்குடி மக்கள் வாழ்ந்துவந்தனர்.

கொலை - கொள்ளையே இவர்களது பிழைப்பாக இருந்தது. தாதாஜி கொண்டதேவ் இம்மக்களை நல்வழியில் திருப்பப் பாடுபட்டார். பயிர்த்தொழிலில் ஈடுபாடு கொள்ளச் செய்தார். மாவலி மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. உடல் உறுதியும் அஞ்சாநெஞ்சமும் கொண்ட இம்மக்களைக் கொண்ட ஒரு படையை, சிவாஜிக்காக உருவாக்கிவிட்டார் தாதாஜி.

சிவாஜிக்குப் போர்க்கலையைப் பயிற்றுவித்தவரும், தாதாஜிதான். தந்தையின் அன்பு கிடைக்காத சிவாஜிக்கு, கொண்டதேவ் தந்தையாக விளங்கினார். சிவாஜியும் தாதாஜியை பிதாஜியாகவே மதித்தார். வாட்போர் - வில்வித்தை - குதிரை ஏற்றம் இவற்றில் சிவாஜியை மிஞ்ச எவருமில்லை என்ற நிலையில், மாவலி வீரர்களுடன் கொங்கணமலைப் பகுதியில் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தார். தந்தையைப் போல பிறரின் படைத்தலைவராக ஜாகிர்தாராக இருக்க விருப்பமில்லை சிவாஜிக்கு. சிறியதானாலும் தனக்கென ஒரு சிறிய இராஜ்ஜியத்தை உருவாக்கி, அதன் மன்னனாக வாழவேண்டும் என்று கனவுகளை உருவாக்கிக்கொண்டார்.

தொடரும்...

# இந்தவாரம் உங்கள் பலன்

(27.03.2014 தொடக்கம் 02.04.2014 வரை)

## மேடம்

பெண்கள் சம்பந்தமான விசயங்களில் செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல் வர இருப்பதால் மிக எச்சரிக்கையுடன் பேசிப்பழகுதல் நல்லது. உத்தியோகத் துறையினர்களுக்கு மேலதிகாரிகளுடன் வீண் மனச்சஞ்சலமும் பதவி இடமாற்றமும் ஏற்பட இருப்பதால் முன்கோபத்தைத் தவிர்த்துப் பொறுப்புடன் பணியாற்றவும். அடுத்தவர்களின் விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்கவேண்டாம். அடிமை ஆட்களால் வீண் பொருள் விரயமும் மனஉழைச்சலும் உண்டாகும். பழைய கடன்களை அடைத்துப் புதிய கடன்களை வாங்குவீர்கள். பொருளாதாரம் சம்பந்தமாகத் தொலை தூரப் பயணங்களை மேற்கொண்டு வெற்றி பெறுவீர்கள்.

## இடபம்

பிள்ளைகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளில் ஏற்பட்டுவந்த தடைகள் நீங்கும். கணவன் - மனைவி உறவுகளில் இருந்து வந்த மனக் குழப்பங்கள் மாறி மிகுந்த ஒற்றுமைகள் உண்டாகும். பெண்களால் தென்திசையில் இருந்து நற்செய்திகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ள காலமாகும். பிள்ளைகளால் சில தொல்லைகள் வந்துசேர இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லது. தடைப்பட்டு வந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் சம்பந்தமாகப் புதிய தொடர்புகள் ஏற்பட்டு அதன்மூலம் நன்மை அடைவீர்கள். வெளிநாட்டு விசயங்களில் வேற்று மதத்தவரால் ஆதாயங்கள் உண்டு. பழைய கடன்களை அடைப்பதற்காகப் புதிய கடன்கள் வாங்குவீர்கள்.

## மிதுனம்

உடல்நிலையில் கண் மற்றும் காதுகளில் சில உபாதைகள் வந்து போகும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்து இருந்த இடமாற்றம் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். உடல்நிலையில் நரம்பு எலும்பு போன்ற உபாதைகள் வந்துபோகும். வீடு, நிலம் வாங்குவது சம்பந்தமான புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். பணவரவுகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் குறையும். அரசியல்வாதிகளால் ஆதாயம் உண்டாகும். வரவேண்டிய கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் வந்துசேரும்.

## கடகம்

உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களால் ஆதாயம் இல்லை. தந்தை - மகன் உறவுகளில் பிரச்சனைகள் குறைந்து முன்னேற்றம் காணப்படும். வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலமாகப் பொருட்செலவுகள் வந்துசேரலாம். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் தீர்ந்து மீண்டும் ஒன்றுசேரக் கூடிய காலமாகும். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். புதிய வீடுகள், வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்யப்போட்டிருந்த திட்டங்களில் சற்றுப் பின்னடைவு ஏற்படலாம்.

## சிங்கம்

காதல் விசயத்தில் எதிர்பார்த்து இருந்த தகவல்கள் கிடைக்க இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகலாம். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் எதிர்பார்த்த நல்ல முடிவுகள் கிடைக்கும். வங்கிகளின்மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமாகும். காதல் விசயத்தில் நல்ல தகவல்கள் கிடைக்கும். நீண்டநாட்களாக எதிர்பார்த்து இருந்த வரவேண்டிய பணம் திரும்பக் கைக்கு வந்துசேரும். வெகு காலமாக்க் கட்டப்படாத ஆலயத் திருப்பணிகளுக்கான பணிகளை செய்வீர்கள். கூட்டுத்தொழில் செய்வோர்கள் புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுப் பயனடைவார்கள்.

## கன்னி

வெளிநாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் நண்பர்களின் உதவிகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அரசியல்வாதிகளால் ஆதாயம் ஏற்படாது. திருட்டுப்போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் சம்பந்தமாகிய பேச்சுவார்த்தைகளில் நல்லதொரு முடிவுகள் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வெகு காலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் மற்றவர்களின் உதவிகளால் திரும்பக் கிடைக்கும்.

## துலாம்

பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் மாறி முன்னேற்றம் காணப்படும். பூர்வீகச் சொத்துக்களில் நீண்டகாலமாக இருந்துவந்த பிரச்சினைகளுக்கு நல்லதொரு முடிவு கிடைக்கும். தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்த்தால் வீண் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். உற்றார், உறவினர்களின் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். நீண்டகாலமாகத் தடைப்பட்டு வந்த குலதெய்வ வழிபாடுகளை செய்து வருவீர்கள். புதிய தொழில்களை ஆரம்பம் செய்யப் போட்டிருந்த எண்ணங்கள் நிறைவேறும். திடீர் அதிர்ஷ்டம் மூலமாகப் பணம் வந்துசேரும். விட்டுப்போன உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது.

## விருச்சிகம்

வரவேண்டிய பணம் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். அடுத்தவர்களின் விசயங்களில் தலையிட்டு அவமானப்பட இருப்பதால் மிகவும் கவனமுடன் இருப்பது நல்லதாகும். உற்றார், உறவினர்களால் ஆதாயம் இல்லை. திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ் லாட்டரி போன்றவற்றின் மூலம் பணம் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. பிள்ளைகளால் மனநிம்மதியும் பொருள் வரவும் உண்டாலாம். அநாதைச் சிறுவர்களுக்காக உதவுவதில் மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்தில் இருந்துவந்த மருத்துவச் செலவுகள் வெகுவாகக் குறையும். தந்தை - மகன் உறவுகளில் சுமூகமான சூழ்நிலை உருவாகும். சகோதர சகோதரிகளின் தடைப்பட்ட திருமண காரியங்கள் நிறைவேறும் காலமாகும்.

## தனுசு

மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண் பழிச்சொல்லுக்கு ஆளாக வேண்டாம். பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் சற்று குறைந்து காணப்படும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் பணம் மற்றும் பொருட்கள் ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். தாயின் உடல்நிலையில் சில பாதிப்புகள் மூலமாக மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். புதிய வீடு, நிலம் மற்றும் வாகனங்கள் வாங்குவதற்காக வங்கிகள் மூலம் எதிர்பார்த்து இருந்த கடன்கேட்ட பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

## மகரம்

குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக புதிய கடன்வாங்குவீர்கள் காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருப்பதால் வீண் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்த பணம் கை வந்துசேரும். மாணவர்களுக்கு கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்கள் கிடைக்கக் கூடும். சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள். பெண்களால் தென்திசையில் இருந்து எதிர்பாராத பணவரவுகள் உண்டாகும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவுடன் பதவி உயர்வும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## கும்பம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவதன் மூலமாக மனநிம்மதி அடைவீர்கள். விட்டுப் பழைய வழக்குகள் மீண்டும் தொடரலாம். நண்பர்கள் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். குலதெய்வ ஆலயத் திருப்பணிகளுக்கான விசயங்களில் பணி ஆற்றுவதன்மூலம் நற்பெயர், புகழ் ஏற்படும். அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தல்லையிட்டு மனநிம்மதி இழக்க வேண்டாம். வங்கிகளின்மூலம் எதிர்பார்த்து இருந்த உதவித்தொகைகள் கிடைக்கும். சம்பந்தமான வியாபாரிகள் ஆகியோர்கள் நல்ல இலாபம் அடைவார்கள்.

## மீனம்

குலதெய்வ ஆலயத் தொண்டுகளைப் பிரியமுடன் செய்து நற்பெயர் எடுப்பீர்கள். புதிய நண்பர்களிடம் மிகவும் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லதாகும். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். நீண்டதூரப் பயணங்களின் மூலமாக எதிர்பார்த்த பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும். காதல் விசயத்தில் அனுகூலம் ஏற்படாது. உடம்பில் தலை மற்றும் முதுகுவலி போன்ற சில உபாதைகள் வந்து போகலாம். நீண்டகாலமாக திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடைபெற வாய்ப்பு உள்ளது.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)


வாழும் கலைப்பயிற்சியின் ஸ்தாபகர் சாமி ரவிசங்கர் ரிஷியின் ஆச்சிரமத்தையே இங்கே காண்கிறீர்கள்.

யோகாக் கலையின் பயிற்சியுடன் இணைந்ததான வாழும் கலைப்பயிற்சியின் ஊடாக சர்வதேச ரீதியில் கோடிக்கணக்கான மக்கள் பயனடைந்துவருகின்றனர். அவர்களை வழிநடத்தும் பொருட்டு உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான கிளை நிலையங்கள் அமைக்கப்பட்டு அவற்றினூடாக மக்கள் வழி நடத்தப்படுகின்றனர்.

குறித்த கிளை நிலையங்களைக் கட்டுப்படுத்தி வழிநடத்துகின்ற பாரிய பொறுப்பினை பெங்களூரில் அமைந்திருக்கும் இப்படத்தில் காணப்படும் ஆச்சிரமம் மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது.



ஆச்சிரமம்



வாழ்த்துக்கள்

இன்றைய கிரிக்கெட் உலகை அச்சுறுத்தும் பந்துவீச்சாளர் யோக்கர் பந்துகள் மூலம் சர்வதேச வீரர்களை கிலிகொள்ளச் செய்பவர். ஆம். இலங்கை அணியின் துருப்புச் சீட்டு லசித் மலிங்க. நடைபெற்றுக் கொண்டிருக்கும் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணப் போட்டியில் அனைவராலும் நோக்கப்படுகின்ற ஒருவர். இங்கே தன் மனைவியின் கரங்களுக்குள் சிக்குண்டிருக்கிறார். வழமைபோன்றே புன்னகையோடு காதல் மனைவி தான்யா பெரேராவுடன் காட்சியளிக்கின்றார்.

நடைபெற்றுவரும் உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி கோப்பையைக் கைப்பற்றவேண்டும் என்றால் அதற்கு மலிங்கவின் பந்துவீச்சு நிச்சயம் முதன்மைப் பங்களிப்பாய் அமைந்திருக்கும். வாழ்த்துக்களோடு வெற்றிக்காகக் காத்திருப்போம்.

இரட்டையர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பது, நைஜீரியா மற்றும் பிரேசில் நாடுகளில்தான். இரட்டையர்கள் பிறப்பிற்கு, பல்வேறு காரணங்கள் கூறப்படுகிறது. உலகளவில் 1,000 பேருக்கு எட்டுப் பேர் இரட்டையர்கள் என்றும், இந்தியாவில் 1,000 பேருக்கு நான்கு பேர் இரட்டையர்களாக உள்ளனர் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், கேரள மாநிலம் மலப்புரம் அருகில் உள்ள நம்பாறா ஊராட்சிக்கு உட்பட்ட கொடினி என்ற கிராமத்தில், 250 இரட்டையர்கள் வசித்து வருகின்றனர். இது இந்திய சராசரியைவிட 10 மடங்கு அதிகமாக உள்ளது. இந்த கிராமத்தில் 1,000 பேருக்கு 35 பேர் இரட்டையர்களாக உள்ளனர். உலகத்தில் அதிக எண்ணிக்கையில் இரட்டையர்கள் வசிக்கும் கிராமம் என்ற பெருமையை இது பெறுகிறது. இந்த கிராமத்தில் அதிக எண்ணிக்கையில் இரட்டையர்கள் இருப்பதற்கு காரணங்கள் குறித்து, ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. இங்கு நிலவும் சுற்றுப்புறச் சூழல், சீதோஷ்ண நிலை, தண்ணீர் போன்ற விஷயங்கள் ஆய்விற்குட்படுத்தப்பட்டு உள்ளன.



இரட்டையர் உலகம்





அசத்தப்போவது யாரு?


அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர் வித்தியாசமான யோகாசனப் பயிற்சிகள்மூலம் புகழ்பெற்று விளங்குகிறார். 6 வயதான லோரா கஸ்பர்ஸாக் எனும் இப்பெண் இரு பிள்ளைகளின் தாய் ஆவார். 17 ஆண்டுகளாக இவர் யோகாசனப் பயிற்சி வகுப்புகளை நடத்திவருகிறார். இறப்பர் போன்று உடலை வளைத்து யோகாசனத்தில் ஈடுபடும் புகைப்படங்களை வெளியிட்டு வருபவர் லோரா கஸ்பர்ஸாக். தற்போது லோராவின் 4 வயது மகளும் தாயாரை பின்பற்ற ஆரம்பித்துள்ளார். தனது மகள் சகிதம் யோகாசனத்தில் ஈடுபடும்போது லோரா பிடித்துக்கொண்ட புகைப்படங்கள் இணையத்தளங்களில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

கொலம்பியாவில் 8 மாத குழந்தை ஒன்று 20 கிலோ உடல் எடையுடன் காணப்படுவது பெரும் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது. கொலம்பியாவை சேர்ந்த யுனைஸ் ஃபேண்டினோ என்ற பெண்மணி, தனது எட்டு மாத குழந்தை சாண்டியாகோ மெண்டோசாவுக்கு நாளுக்கு நாள் எடை அதிகரித்துக்கொண்டே போவதால் அதிர்ச்சியுற்றார்.

இதனையடுத்து குழந்தையின் உடல் நிலையை பற்றி ஷப்பி ஹேரார்ட்ஸ் என்ற நெஞ்சக மருத்துவமனைக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இதில், தனது குழந்தை அழும் நேரமெல்லாம் உடனடியாக பாலூட்டினார் என்றும் அவன் இவ்வளவு குண்டாவதற்கு தானே காரணமாகிவிட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தை பார்த்த மருத்துவமனை இயக்குநர் சால்வடார் பாலேசியோ கோன்சாலேஸ், அக் குழந்தையை தங்கள் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சையளித்து வருகிறார். தற்போது அவனது உடல் எடையை குறைக்க அறுவை சிகிச்சை செய்ய மருத்துவமனை நிர்வாகம் முடிவு செய்துள்ளது.



குண்டுக் குழந்தை

Bill Passman எனும் 59 வயதான Louisiana நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் வினோத முறையில் உலகை சுற்றி வலம் வருகின்றார்.

அதாவது தனது முதுகில் உலகப்படத்தினை பச்சை குத்தியுள்ள அவர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தான் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் நாடுகளை வெவ்வேறு வர்ணங்களால் வண்ணம் தீட்டி வருகின்றார்.



விநோதம்



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டீ.டீ என்டபிரைசஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் மார்ச் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 13 வியாழக்கிழமை (27.03.2014) பக்கங்கள் IV ஓசை – 177

## செய்தி சேகரிக்கச் சென்றவேளை ஊடகவியலாளர் மீது தாக்குதல்

### கிளிநொச்சி சந்தையில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று பொதுச் சந்தையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றினை செய்தி சேகரிக்கச் சென்ற தொலைக் காட்சி ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டதோடு அவரது வீடியோக் கருவியும் சேதமாக்கப் பட்டுள்ளது. இது தொடர்பில் குறித்த ஊடகவியலாளரினால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, நேற்றைய தினம் கிளிநொச்சி பொதுச் சந்தையில் வியாபார அனுமதிகள் புதுப்பிக்கப்படாத மற்றும் கரைச்சி பிரதேசசபைக்கு செலுத்த வேண்டிய மாதாந்த கட்டணங்கள் செலுத்தாத வியாபார நிலையங்கள் சீல் வைக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தை செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரே தாக்கப்பட்டதோடு அவரது வீடியோ கருவியும் சேதமாக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் மூன்று உத்தியோகத்தர்களே இவ்வாறு நாகரீகமற்று நடந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பொதுச்சந்தையில் வெளிப்படையாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை பதிவு செய்த போது குறித்த உத்தியோகத்தர்கள் மூவரினாலும் ஊடகவியலாளர்கள் பலர் முன்னிலையில் தரக் குறைவான வார்த்தைப் பிரயோகங்களால் அவமதிக்கப்பட்ட

IV ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரம் தாக்கி இளம் தாய் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் உள்ள வீடு ஒன்றில் மின்சாரம் தாக்கி இரண்டு பிள்ளைகளின் தாயொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த லம்போதரன் நுதர்சினி (வயது-28) என்ற இளம் பெண்ணே உயிரிழந்தவராவார்.

ஈரக் கையினால் மின் ஆழியைப் போட்டவேளை இவர் மீது மின் தாக்கம் ஏற்பட்டு உயி ரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (பா)

## ரி.ஐ.டி.யினரால் கைது

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த மோகன் கேதீஸ (வயது-35) என்ற இளைஞனை பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினர் நேற்று மாலை யாழ்.ஓட்டுமடம் பகுதியில் வைத்து கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் ஓட்டுமடத்திலுள்ள தனது சகோதரியின் வீட்டில் வைத்து ஆள் அடையாள அட்டை இல்லாத நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (25)

# இலங்கை மீது சர்வதேச விசாரணை மீளவும் வலியுறுத்தும் நவிபிள்ளை



இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை கட்டாயமானது என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பிலான தனது அறிக்கையை நேற்றைய தினம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பித்ததன் பின்னர் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை யுத்தம் தொடர்பில் புதிய ஆதாரங்கள் கிடைக் கப்பெற்று ள்ளன. சாட்சியாளர்கள் ஆதாரங்களை சமர்ப்பிக்க முன்வந்துள்ளனர் .

சர்வதேச விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியளிக்க அவர்கள் தயாராக உள்ளனர்.

யுத்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீனமான உள்ளக விசார ணைகள் இலங்கையில் நடத்தப்படவில்லை.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெறும் தருணத்திலேயே மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டுள்

IV ஆம் பக்கம் பார்க்க

## நவிபிள்ளை அறிக்கை நிராகரித்தது அரசு

### நாடுகளிடையேயும் கருத்து வேறுபாடு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் பல்வேறு பிழைகள் காணப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. நவநீதம்பிள்ளையினால் நேற்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை முற்று முழுதாக நிராகரிப்பதாக ஜெனிவாவிற்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை அரசியல் ரீதியானது எனவும், பல பிழைகள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தெரிவு செய்யப்பட்ட அடிப்படையிலும்,

ஏதேச்சாதிகாரப் போக்கிலும் நவநீதம்பிள்ளை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார் என குற்றம் சுமத்தியுள்ளார். இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கைக்கு மாறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை

IV ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா தீர்மானம் இலங்கைக்கு நன்மையே

### என்கிறது பிரிட்டன்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்படும் தீர்மானம் இலங்கைக்கு நன்மையையே ஏற்படுத்தும் என பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹியூகோ ஸ்வையர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றுதல் மற்றும் விசாரணை நடாத்துவதன் மூலம் எவ்வித இலாபத்தையும் நாம் எதிர்பார்க்கவில்லை.

கடந்த நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் போது போர் இடம்பெற்ற வலயங்களுக்கு விஜயம் செய்த பிரதமர் கமரூன் நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

அத்துடன்பிரதேச மக்களுடன் பேசுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

போர்க் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதன் மூலம் இலங்கை மக்களே நன்மைகளை அனுபவிப்பார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## யுத்தக் குற்றச்சாட்டுக்கள் நம்பகரமான விசாரணை

### தேர்தல் விஞ்ஞாபனத்தில் காங்கிரஸ்

இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள், குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் நம்பகமானதும், காலவரையறையுடன் கூடியதுமான விசாரணை 'நடத்தப்பட வேண்டுமென காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் நம்பக

IV ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் மே முதல் வாரம் காணாமற்போனோர் விசாரணை

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏப்ரல் முதல் வாரத்தில் முன்னெடுக்கப்படவிருந்த காணாமற்போனோர் தொடர்பான சாட்சி விசாரணையின் இரண்டாம் கட்ட பதிவுகள் பிற்போடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான சாட்சி விசாரணை பதிவுகள் எதிர்வரும் மே மாதத்தின் முதல் வாரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணைசெய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள சாட்சியங்களை ஒழுங்குபடுத்தி, உரியமுறையில் அவற்றை ஆவணப்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படவிருந்த இரண்டாம் கட்ட விசாரணைக்கான திகதி பிற்போடப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

மேலும் காத்தான்குடியிலும் காணாமற்போனோர் தொடர்பான சாட்சி விசாரணை பதிவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை தலங்காவில், பலாலி வீதி, கந்தர்மடம், ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், இராசாவின்தோட்டம், ஆனைப்பந்தி சந்தி, இலுப்பையடி சந்தி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, மணிக்கூட்டுகோபுர வீதிகளின் ஒரு பகுதிகளிலும்,

பரமேஸ்வராச் சந்தி, கம்பஸ் லேன், வைமன் வீதி, அரசடி வீதி, கோவில் வீதி, நல்லூர், இராசாவின்தோட்டம், றக்கா வீதி, ஆஸ்பத்திரி வீதி, பழைய பூங்கா, கச்சேரியடி, சுண்டுக்குளி, குருசோ வீதி, பாசையூர், ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, நெடுங்குளம், ஆனந்தன்வடலி வீதி, எழிலூர், மகேந்திரபுரம், உதயபுரம், மணியந்தோட்டம், புங்கங்குளம் வீதி, பருத்தித்துறை வீதி, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவில் சந்தி வரை, கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி, நொதேன் கொம்பனி, இராமநாதன் வீதி, பிறவுண் வீதி, அரசடி வீதி, தட்டார்தெரு போன்ற பகுதிகளிலும்,

நாச்சிமார் கோவில் வரை, ஐயனார் கோவில் வீதி, கே.கே.எஸ் வீதியில் நாச்சிமார் கோவில் - சிவன் கோவில், மானிப்பாய் வீதியில ஓட்டுமடம் சந்தி, பிள்ளையார் ஹோட்டல், சிவன் வடக்கு வீதி, சிவன் பண்ணை வீதி, சிவப்பிரகாசம் வீதி, வைத்தீஸ்வராச் சந்தி, சீனிவாசகம் வீதி, காதி அபூபக்கர் வீதி, பி.ஏ தம்பி வீதி, ஓடை லேன், மணிக்கூட்டு வீதி, கன்னாதிட்டி சந்தி, கன்னாதிட்டி வீதி, சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதி, நல்லூர் கோவில், கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி, சங்கிலியன் வீதி, கனகரத்தினம் வீதி, ஆனந்தன்வடலி வீதி, புங்கன்குளம் வீதி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, நாயன்மார்கட்டு, நல்லூர் குறுக்கு வீதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# பிரதேச சபையிலிருந்து இடமாற்றம்; சுகாதார பரிசோதகர்கள் போராட்டம்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையின் கீழ் தொழிற்படும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தம்மை தொடர்ந்து நல்லூர் பிரதேச சபையின் கீழ் தொழிற்பட அனுமதிக்க வேண்டுமென்று கோரி நல்லூர் பிரதேச சபையின் தலைமைப் பணிமனையின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நேற்று நடத்தியுள்ளார்கள்.

நேற்று முற்பகல் 10 மணி முதல் 11 மணி வரை நடைபெற்ற இந்த கவன யீர்ப்புப் போராட்டத்தின் போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தமது கோரிக்கை அடங்கிய சுலோக அட்டைகளை கையில் ஏந்தியவாறு இந்தப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நல்லூர் பிரதேச சபையின் கீழ் தொழிற்பட்டு வந்த தம்மை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள பணிமனையின் கீழ் தொழிற்படுமாறு வடமாகாண சுகாதார அமைச்சினால் இடமாற்றம் வழங் கப்பட்டுள்ளதாகவும், தம்மைத் தொடர்ந்து பிரதேச சபையின் கீழ் செயற்பட அனுமதிக்கவேண்டுமென்று கோரியுமே இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மேலும் இன்றிலிருந்து தாம் கடமையைப் புறக்கணிக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இன்றில் இருந்து தாம் கடமையைப் புறக்கணிக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களது போராட்டம் குறித்தும் கருத்துத்தெரிவித்த நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார், தென் பகுதிகளில் உள்ள சில பிரதேச சபைகளின் கீழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடமையாற்றி வருகின்றனர். இது போன்று அவர்கள் அமைச்சு அனுமதிக்கலாம் இல்லாது விடத்து ஆறுமாதகால அவகாசத்தில் நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்பட்டது.

இருந்தும் திடீரென்று தற்போது மாகாண சுகாதார அமைச்சினால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தமது கடமையை பகிஷ்கரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நல்லூர் பிரதேச சபை சுகாதார நடவடிக்கைகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

(பா)

## விளையாட்டு விழா

(வேலணை)

வேலணை பிரதேச செயலகத்தின் வருடாந்த விளையாட்டு விழா இம்முறையும் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்குரிய விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் எதிர்வரும் முதலாம் திகதி [illegible] விளையாட்டு விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அன்று இறுதிப்போட்டிகள் சிலவும், பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

(21)

# பாலைதீவு உற்சவத்தில் திருட்டுச் சம்பவங்கள்

(குருநகர்)

வரலாற்றுப் புகழ்பெற்ற பாலைதீவு புனித அந்தோனியார் திருநாளில் திருட்டுக்கள் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நான்கு கைத்தொலைபேசிகளைத்திருடிய நபரொருவர் கையும்மெய்யுமாக மக்களால் பிடிக்கப்பட்டு பாலைதீவில் நிலைகொண்டுள்ள கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அதேவேளை ஒரு பெண்ணின் மூன்று பவுண் எடையுள்ள கழுத்துச் சங்கிலி ஒன்றும் திருட்டுப்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருவிழாவில் யாத்திரிகர்களின் வருகை குறைவாக ஏறத்தாள ஐயாயிரம் பேரே கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வன்னி, குருநகர், பாசையூர், நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் திருநாளுக்காக பாலைதீவு சென்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

(68)


## சிறுவிளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக்**

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3376)


# சந்தைகளில் தரகர் முறையை நீக்கியது நல்லூர் பிரதேச சபை

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபைக் குட்பட்ட சந்தைகளில் தரகர் முறையிலான வியாபார வர்த்தக நடவடிக்கைகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

பிரதேச சபை அங்கத்தவர்களிற்கு மாதாந்தம் நடைபெறும் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2014 ஜனவரி முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக பிரதேச சபை கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் இப்பிரதேச சபையின் நடைமுறையினை சந்தை தரகர் தொடர்பில் ஏனைய பிரதேச சபைகளும பின்பற்றி வந்தால் விவசாயிகள் தரகர் தெல்லையின்றி சந்தையில் தங்கள் விளை பொருட்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்யமுடியும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

(06)

# வரணி கண்ணகைபுர வீதிக்கு பாலம் அமைக்கக் கோரிக்கை

வரணி வடக்கு கண்ணகைபுர வீதி பாரிய வாய்க்கால் வழியாக செல்வதால் அந்த வாய்க்கால் பாதையூடாக மாரிகாலத்தில் இடுப்பளவு நீருக்குள் மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் பிரயாணம் செய்து வருகின்றனர். இந்த வீதி சாளம்பை, குடத்தனை, மாசேரி போன்ற பிரதேசங்களில் இருந்து வரும் மக்கள் பயணிக்கும் முக்கிய வீதியுமாகும்.

தற்போது கோடை காலமாவதால் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப்பால வேலையை உரியவர்கள் கவனமெடுத்து புனரமைப்பு செய்து தரவேண்டுமென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்வீதியையும், இப்பாலத்தையும் புனரமைப்புச் செய்து மக்கள் சிரமமின்றி பயணிக்கவேண்டுமென பொது மக்களிடமும் அவ்வீதியில் வசிக்கும் மக்களிடமும் கையொப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

இம்முயற்சியில் சிறிகணேசா சனசமூக நிலையத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். சகலரிடமும் கையொப்பங்களும், பெறப்பட்டு உரிய தரப்புக்கு அனுப்பி வைக்கப்படுமென சிறிகணேசா சனசமூக நிலை யத்தலைவர் க.விஜயகுமார் தெரிவித்தார்.

(150)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 242 | திகதி 2014.03.25 | வர்ணம் மஞ்சள்

வெற்றி இலக்கங்கள்: 03 08 15 22 — ஆங்கில எழுத்து: L

பரிசுத் தொகை ரூபா. 15,549,900/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 12 | 600,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 214 | 214,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 398 | 398,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9719 | 583,140/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5106 | 204,240/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 127314 | 2,546,280/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18374 | 367,480/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 15,549,900/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,913,140/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 15,799,080/-

2014.03.28ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே. 011 2333546/47

(C/3359)

web : www.dlb.lk


# அறநெறி ஆசிரியர்களுக்கு கோரப்படுகிறது விண்ணப்பம்

(மருதனார்மடம்)

மருதனார்மடம் ஸ்ரீ ஆஞ்சநேயர் அறநெறிப் பாடசாலை மாணவர்களிற்கு அறநெறி போதிக்கத்தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் சமய தீட்சை பெற்றவர்களாகவும், சமயப்பற்றாளர்களாகவும் இருப்பது மிகவும் அத்தியாவசியமான தகுதிகளாக வேண்டப்படுகிறது.

அத்துடன் க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர்தரம் சித்தி பெற்றவர்களாகவும், உயர்தரத்தில் இந்துநாகரிகத்தை அல்லது இந்து சமயத்தை ஒரு பாடமாகக் கற்றவர்களாகவும், நடனம், அல்லது சங்கீதத்தைக் கற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

சைவப்புலவர் பட்டமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இணுவில் வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும். சமய தீட்சை வழங்கிய குருவின் பெயர், முகவரி, விண்ணபப்படிவத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரிகள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 14.04.2014 இற்கு முன்னர் அதிபர், ஸ்ரீ அஞ்சநேயர் அறநெறிப்பாடசாலை, மருதனார்மடம். என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுவதுடன், தபால் உறையின் இடது மூலையில் ‘அறநெறிப் பாடசாலை ஆசிரியருக்கான விண்ணப்பப்படிவம் - 2014’ எனக் குறிப்பிடல் வேண்டும்.

நியமனம் எழுத்துப் பரீட்சை மூலமும், நேர்முகப்பரீட்சை மூலமும் தீர்மானிக்கப்படும். தெரிவு செய்யப்படும் ஆசிரியர் சேவை நோக்கில் சேவையாற்றக் கூடியவராக இருக்கவேண்டும். சிறு தொகை ஊதியம் வழங்கப்படும். (06)

# பாலியல் சேஷ்டையில் கிராம அலுவலர் கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செக்கட்டிப் புலவு கிராம அலுவலருக்கு எதிராக சிவபுரம் மக்கள் நேற்றுக்காலை 10 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிராம அலுவலர் இலஞ்சம் கோருவதாகவும் பெண்களிடம் பாலியல் சேஷ்டை புரிவதாகவும் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டமானது வவுனியா, மன்னார் வீதியில் உள்ள தாதியர் கல்லூரிக்கு முன்பாக ஆரம்பமாகி பிரதேச செயலகம் வரை சென்றடைந்தது.

இந்தியன் வீட்டுத் திட்டம் வேண்டுமா? ரூபாய் 50,000, சிறந்த சேவையை வழங்கும் கிராம அலுவலர் எமது கிராமத்திற்கு வேண்டும், சிறிகாந்தன் வேண்டாம், சிவபுரம் மக்களுக்கு நீதி வேண்டும், பெண்கள் மீதான பாலியல் வன்முறையை ஒழிப்போம், அரச அதிகாரி பாலியல் இலஞ்சம் கேட்பது சரியா? போன்ற சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, பிரதேச செயலர் கா.உதயராசா, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ச.மேகநாதன் ஆகியோரிடம் மகஜரொன்றையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கையளித்தனர்.

# 40 பஸ்கள் அனுமதிப் பத்திரமின்றி யாழ்.-கொழும்பு சேவையில்

(கொழும்பு)

போக்குவரத்து அனுமதிப் பத்திரமின்றி, சுமார் 40 பஸ்கள் யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே போக்குவரத்தில் ஈடுபடுவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் மாஅதிபரை தெளிவுபடுத்தியுள்ளதாக ஆணைக் குழுவின் தலைவர் ரொஷான் குணவர்த்தன குறிப்பிட்டார்.

ஆயினும், இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் தமது ஆணைக குழுவிற்கு இல்லை என அவர் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கையானது, போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்டு, சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அவர் தெரிவித்தார்.

# புதிய சுற்றுநிருபத்தினால் தனியார் சாரதிகளுக்கு தட்டுப்பாடு

போக்குவரத்து அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் காரணமாக தனியார் பேருந்து துறையில் சேவையில் ஈடுபடுவதற்கான சாரதிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ன இவ்வாறு தெரிவித்தார்.

தனியார் பேருந்து சாரதிகள் மேலதிகமாக அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெறவேண்டுமென வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமையே இதற்கான காரணமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் போக்குவரத்து அமைச்சரினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வருடம் தொடக்கம் தனியார் பேருந்து சாரதிகளுக்காக தனியான அனுமதிப் பத்திரம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

வேறு வாகனங்களை செலுத்த முடியாத வகையிலும், தற்போது அனுமதிப் பத்திரம் பெற்றுள்ள சாரதிகளும் அடுத்த வருடம் தொடக்கம் மேலதிக அனுமதியைப் பெறவேண்டும் என்றும் அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனால் தனியார் தொழிற்றுறையில் ஈடுபடும் சாரதிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

எனவே, தேர்தலின் பின்னர் சாரதிகளின் சார்பில் பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ன அறிவித்துள்ளார்.

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(சங்கானை)

ரி.சி.லேன் சங்கானையில் இயங்கும் யாழ்.மாவட்ட பெண்களுக்கான சுயதொழில் (பற்றிக்) பயிற்சித் திட்டத்தில் பற்றிக் பயிற்சி மற்றும் தையல் பயிற்சியும் ஆறு மாத காலத்திற்கு பயிற்றுவிக்கப்பட்டு பின்னர் திறமையுள்ளவர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

எனவே இந்தப் பயிற்சி நெறிகளை பயில விரும்புவோர் நிறுவனத்தில் தொடர்பு கொள்ள முடியுமென பயிற்சித் திட்ட நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

# சுன்னாகம் சந்தைக்கு வந்த 9 பேரின் சைக்கிள்கள் திருட்டு

(சுன்னாகம்)

யாழ். சுன்னாகம் சந்தைக்கு வந்தவர்களின் 9 சைக்கிள்கள் கடந்த வாரம் களவு போயுள்ளதாக சைக்கிள்களை பறிகொடுத்தவர்கள் முறைப்பாடு செய்ததாக சுன்னாகம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

இச்சந்தைப் பகுதியில் பூட்டி வைக்கப்பட்ட சைக்கிள்களே இவ்வாறு களவு போயுள்ளதென முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

பொதுமக்கள் தங்களது சைக்கிள்களை உரிய தரிபபிடங்களில் நிறுத்தாது, தாங்கள் விரும்பிய இடங்களில் விட்டுச் செல்வதாலேயே இக் களவுகள் இடம்பெறுவதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்நிலையில், பொதுமக்கள் தங்களது சைக்கிள்களை உரிய தரிப்பிடத்தில் விட்டு சந்தைக்குச் செல்லுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (48)

## உரிமத் தகடுகளை பெற அறிவிப்பு

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்றுப் பகுதியில் துவிச்சக்கர வண்டிகளுக்கு இவ்வாண்டிற்கான உரிமத்தகடுகள் வழங்குவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எஸ்.ரவீந்திரநாதன் நேற்றுத் தெரிவித்தார்.

இதனால் துவிச்சக்கர வண்டிகளை வைத்திருப்பவர்கள் கரைத்துறைப்பற்று பிரதேச சபை, மற்றும் முல்லைத்தீவு, முள்ளியவளை, செம்மலை, அளம்பில், கொக்குளாய், முள்ளியவளை ஆகிய உப பிரதேச சபை அலுவலகங்களில் ஏப்ரல் மாதத்திற்கு முன்னதாக 20 ரூபா செலுத்தி இந்த உரிமத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சரசாலை கொள்ளைச் சம்பவம் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு

யாழ். சரசாலை தெற்கில் அமைந்துள்ள வீடொன்றில் ஒரு இலட்சத்து 57 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்திற்கு நேற்று முன்தினம் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

கடந்த 20 ஆம் திகதி அதிகாலை 3.00 மணியளவில் முகமூடி அணிந்தவர்கள் குறித்த வீட்டிற்குள் நுழைந்து நகைகள் மற்றும் பணம் திருடியுள்ளதாக சிறிஜெயசந்திரன் சிவகாமசுந்தரியினால் கடந்த 20 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த முறைப்பாட்டின் பிரகாரம், இரு தோடுகள், மோதிரம், சங்கிலி மற்றும் 20,000 பணம் உள்ளிட்ட ஒரு இலட்சத்து 57 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு அறிக்கையொன்று நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கால்நடைகள் இடமாற்றம் கிளிநொச்சியில் தடை விதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கால்நடைகளை ஏனைய மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்கும் ஏனைய மாவட்டங்களிலிருந்து கிளிநொச்சிக்கு கால்நடைகளை கொண்டுவருவதற்கும் மார்ச் முதல் வாரத்திலிருந்து தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.கௌரிதிலகன் தெரிவித்தார்.

தற்போது கால்நடைகளுக்கு கால்வாய் நோய் பரவுவதால் இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இத்தடை விதிப்பதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கால்நடைகளை கால்வாய் நோயிலிருந்து பாதுகாக்க முடியுமெனவும் அவர் கூறினார்.

கால்வாய் நோய் குறைந்த பின்னர் மேற்படி தடை நீக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அநுராதபுரத்தில் பரவிய கால்வாய்நோய் தற்போது வடமாகாணத்திலும் பரவியுள்ளது.

# மனித உரிமை கற்கை நிறைவு; வழங்கப்பட்டன சான்றிதழ்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மனித உரிமை கற்கை நிலையத்தினால் நடத்தப்படும் மனித உரிமைகள் தொடர்பான சான்றிதழ் கற்கை நெறியினை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் பன்சால் வீதியில் அமைந்துள்ள மனித உரிமைகள் கற்கை நிலையத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

கற்கையினை பூர்த்தி செய்து கொண்ட 25 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்விற்கு ஓய்வு பெற்ற நீதிபதி திருநாவுக்கரசு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அவருடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் கனகராஜ் மற்றும் சட்டத்தரணிகளும் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

# மன்னார் பள்ளிமுனையில் குடிநீர் இணைப்பு வழங்கல்



உலக நீர் தினத்தையொட்டி மன்னார் மாவட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது மன்னார் பள்ளிமுனை 41 வீட்டுத்திட்டம், 49 வீட்டுத்திட்டம், 50 வீட்டுத்திட்டம், கோந்தைப்பிட்டி கிராமம் ஆகியவற்றுக்கு உள்ளக குடிநீர் இணைப்புக்களை நேற்று வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி கிராமங்களில் உள்ளக குடிநீர் இணைப்பிற்காக விண்ணப்பித்த 150 பயனாளிகளுக்கு குடிநீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், மன்னார் நகரசபை உறுப்பினர்களான எஸ்.டிலான், ஆர். குமரேஸ், ஏ.மெரினஸ் பெரேரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# உள்ளக விசாரணையை நடத்த அரசிடம் கோரும் ஹெலஉறுமய

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் காலவரையறைக்கு அடிபணியாமல் உடனடியாக செயற்திறன்மிகு உள்நாட்டு விசாரணையொன்றை நடத்துமாறு ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்திற்கு ஆலோசனை ஒன்றை முன்வைத்துள்ளது.

இது தொடர்பாக நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இந்த ஆலோசனையை முன்வைத்தனர். அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்ததாவது,

உள்நாட்டு விசாரணையொன்றை விரைவில் நடத்துமாறு நாம் அரசாங்கத்திடம் கோருகின்றோம். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் காலவரையறைக்கு அடிபணியாமல் அதனை நிறைவேற்ற முடியும்.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி பிரபாகரனுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டனர். 2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி பிரபாகரன் உயிரிழந்தார். இந்தக் காலத்திற்குள் இடம்பெற்ற விடயங்களை மாத்திரமே தெளிவுபடுத்துமாறு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு கூறியுள்ளது.

இவை அனைத்தும் எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பில் உள்நாட்டு விசாரணை அவசியமாகும். அதனை விடுத்து தடையுத்தரவுகளுக்கு இடமளிக்க முடியாது எனத் தெரிவித்தார். இதேவேளை கட்சித் தலைவர் அத்துரலிய ரத்தன தேரர் குறிப்பிட்டதாவது,

இலங்கை அரசாங்கம் தவறிழைப்பதாக இருந்தால், அல்லது மனித உரிமைகளை மீறுவதாக இருந்தால், இலங்கையில் மக்களுக்கு வாழ முடியாது என்றால் இம்முறை தேர்தலில் அவர்களுக்கு தீர்மானம் ஒன்றை எடுக்க முடியும். ஐக்கிய நாடுகளை அல்ல முதலில் இந்த அரசாங்கத்தையே மாற்ற வேண்டும் எனத்தெரிவித்தார்.

# பிரிட்டன் பிரஜை கொலை; காதலி நீதிமன்றத்தில் சாட்சியம்



கடந்த 2011 ஆம் ஆண்டு, தங்காலையில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினரான பிரித்தானியப் பிரஜை குராம் ஹேக் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பில், அவரது காதலியான விக்டோரியா அலெக்ஸ்சான்ராவ்னா நீதிமன்றில் சாட்சியமளித்தார்.

நேற்று குராம் ஷேக் கொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் கொழும்பு உயர் நீதிமன்றில் ஆரம்பமானது.இந்த வழக்கில் சாட்சியமளிப்பதற்காக அவருடைய தம்பி நசீரும் ரஷ்ய நாட்டு காதலியுமான விக்டோரியாவும் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

இதன்போது, கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஆறு சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உயர் நீதிமன்ற நீதிபதி ரோஹினி வெல்கம உத்தரவிட்டார்.

ஏனைய சந்தேக நபர்கள் ஐவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தபோதும், இவ்வழக்கின் பிரதான சந்தேக நபரான தங்காலை பிரதேச சபையின் தலைவர் சம்பத் விதான பத்திரன மட்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். எனினும் நேற்று 6 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகள் நீதிமன்றில் சாட்சியமளிக்க விக்டோரியாவை பாதுகாப்பாக அழைத்து வந்தனர்.

# 2016 இற்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் இல்லை

(கொழும்பு)

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டுக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட மாட்டாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர் பதவிக் காலம் நிறைவடைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே தேர்தல் நடத்தப்பட்டது. எனினும், இம்முறை உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

நாட்டின் சில அரசியல்வாதிகள் நாட்டை காட்டிக் கொடுக்கும் முனைப்புக்களில் தீவிரம் .காட்டி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். மக்களின் ஆதரவுடன் ஆட்சி அமைக்க முடியாத தரப்பினர் சர்வதேச சக்திகளின் ஒத்துழைப்புடன் இந்த அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சிக்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலைத் தாண்டி குரோத உணர்வுடன் நாட்டுக்கு எதிராக அவர்கள் செயற்படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சாதாரண தர பெறுபேறு ஏப்ரல் 10 இல்

எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும் என பரீடசைகள் ஆணையாளர் நாயகம் ஆ.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கான செயன்முறைப் பரீட்சைகள் முடிவடைந்துள்ளதாகத் தெரிவித்த அவர், 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்ற தேர்வுகளில் 600,000 மாணவர்கள் தோற்றியதாகவும், அத்துடன், விசேட தேவையுடைய மாணவர்கள் 500 பேர் கடந்த ஆண்டு இடம்பெற்ற தேர்வில் தோற்றியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உயர்தொழில்நுட்பவியல் பட்டதாரிகள் சந்திப்பு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினை யாழ்.உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்கள் தமது நியமனங்கள் தொடர்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி சந்திப்பு நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதன்போது, யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர் தேசிய கணக்கியல், வர்த்தக, முகாமைத்துவ பட்டதாரிகள் தமது நியமனம் தொடர்பில் தாம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து அமைச்சரிடம் எடுத்து விளக்கினர்.

இதுவிடயம் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்ட அமைச்சர் நாட்டின் ஏனைய உயர்தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்தவர்கள் நியமனங்களைப் பெற்றுக் கொண்ட போதிலும் யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்களது நியமனங்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படுமெனத் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) உடனிருந்தார்.

## இலங்கை...

ளனர். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படவில்லை.

கடந்த காலத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியமானது. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தொழில்நுட்ப ஆதரவு வழங்கும் திட்டத்தையும் இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யுத்தக்...

மான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும், ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. காங்கிரஸ் கட்சி நேற்று வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் மக்களினதும் ஏனைய சிறுபான்மை இன சமூகங்களினதும் உரிமைகளை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.வடக்கு, கிழக்கில் உரிய அதிகாரப் பரவலாக்கலை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளது.

தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் வாழ்க்கையை கௌரவமான முறையில் கட்டியெழுப்ப ஒத்துழைப்பு வழங்கப்படும் என குறிப்பிட்டுள்ளது. அண்டை நாடுகளுடனும் ஏனைய பலம் பொருந்திய நாடுகளுடனும் சிறந்த உறவுகளைப் பேண விரும்புவதாக தெரிவித்துள்ளது.

## நவிபிள்ளை...

நேற்றையதினம், இலங்கை தொடர்பிலான அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். இலங்கையின் நட்பு நாடுகளான ரஷ்யா, சீனா, கியூபா, வெனிசுலா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் நவநீதம் பிள்ளையின் அறிக்கையை கடுமையாக சாடியுள்ளன. நவநீதம் பிள்ளை பக்கச்சார்பான முறையில் செயற்பட்டுவருவதாகத் தெரிவித்துள்ளன.

எனினும், பிரித்தானியா, அமெரிக்கா, கிரேக்கம் போன்ற நாடுகள் நவநீதம்பிள்ளையின் அறிக்கை சரியானது என தெரிவித்துள்ளன. இலங்கை தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளன.

# காணாமற்போனோர் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் கால எல்லையில் மாற்றம்

(கொழும்பு)

காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் கால வரையறைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்ற கடத்தல், காணாமற் போதல்கள் தொடர்பில் விசாரணை நடாத்தும் நோக்கில் ஜனாதிபதி ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது.

ஆணைக்குழு சட்டத்தின் அடிப்படையில் இந்தக் கால வரையறையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கால வரையறை மாற்றம் வரவேற்கப்பட வேண்டியது என ஆணைக் குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாச தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பில் மேற்கொண்ட அமர்வுகளின் போது குறித்த காலவரையறையைத் தாண்டி பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அதனை விசாரணை செய்வதற்கு அதிகாரம் இல்லாமல் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கால வரையறை குறித்த மாற்றமானது வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார். இந்திய அமைதி காக்கும் படையினரின் நடவடிக்கைகள் குறித்தும் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார். முன்னதாக ஆணைக்குழுவின் பதவிக் காலம் ஆறு மாதத்திற்கு வரையறுக்கப்பட்டிருந்தது பின்னர் இந்தக் காலம் இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 17000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## செய்தி....

தோடு ஒரு தொலைக்காட்சி ஊடகவியலாளர் தாக்கப்பட்டு அவரது வீடியோக் கருவியும் சேதமாக்கப் பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர் ஒருவர் அண்மையில் எதிர்நோக்கிய இரண்டாவது மோசமான சம்பவம் இதுவாகும்.

ஊடகவியலாளர்கள் தங்களின் ஊடக அடையாள அட்டையை காட்டி உறுதிப்படு த்திய பின்னரும் குறித்த நபர்களினால் தாக்கப்பட்டு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனினால் அவரது அலுவலகத்தில் வைத்து மற்றுமொரு தொலைக் காட்சி ஊடகவியலாளர் தனது கடமைகளை செய்யவிடாது அவமதிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நேற்றையதினமும் கிளிநொச்சி சந்தையில் குறித்த ஊடகவியலாளர் மீது தாக்குதலை மேற்கொண்டவர்களில் ஒருவர் கரைச்சி பிரதேச சபையின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் பொன்னம்பலநா தனின் (துரை) மகன் பொன்னம்பலநாதன் ரஜீஸ்குமார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் தாக்கப்பட்ட ஊடகவியலாளர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் சம்பந்தப்பட்ட ரஜீஸ்குமார், அசந்தன் மற்றும் உப அலுவலக பொறுப்பதிகாரி இராஜசிங்கம் ஆகியோர் மீது கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

(29)

[illegible] பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.